# மாதவமித்திரன்

புஸ்தகம் ௧ மலர் 9-12

ஏப்ரல் - ஜூலை 1937

N36.௧.9-12
208171

Regd. No M. 2419



# மாத்வமித்திரன்

# THE MADWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathacha[illegible]
KUMBAKONAM.

[illegible]O. 9

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 9. | ஈஸ்வர ஸம்வத்ஸரம். | No. 9. |
|---|---|---|
| ஸ்தகம் 9 | சைத்ர மாஸம். | நெ. 9. |
| | (25—4—1937) ஆதிவாரம். | |

பொருளடக்கம். பக்கம்.

ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்
(ஸ்ரீமத்வாசாரியார்) 257
ஹரியின் கீர்த்தனைகள் 265
ஸ்ரீராமாவதார கால நிர்ணயம் 267
ஆசாரமாலை 268
மதிப்புரை 272
ஸ்ரீமத்வாசாரியார் சரித்திரம் 273
ஆர்ய வம்சாவளி 274
செய்தித்திரட்டு 278
வைஷ்ணவன் யாருக்கு தமையனே 280
ஸ்ரீமத்வ விஜயம்
(ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) 284
விளம்பரம் 288
விசேஷ தினங்கள் 288

— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

உபாயம் செய்து துரியோதனனை யுத்தத்தில் கொல்வான். பலத்தில் துரியோதனன் எப்பொழுதும் பீமசேனனுக்கு ஸமமாகமாட்டான். அவன் கதாயுத்தத்தில் மிக்க ஸமர்த்தனுவான். பீமசேனன் எப்படிக் கொல்வான் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னதால் பீமசேனர் துர்பலன் என்று தோன்றுகிறது. பலத்தில் பீமசேனருக்குசமமில்லை என்று சொன்னதால் முன்வார்த்தைக்கு விரோதமாய் ஸ்ரீகிருஷ்ணர் சொன்னதாய் ஏற்படுகிறது. இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் அபிப்பிராயம் இன்னதென்பதை ஸ்ரீ பகவத்பாதாள் விளக்குகிறார். இந்த பீமசேனர் கபடமில்லாமல் துரியோதனனைக்கொல்ல சக்தர் என்பது ஸ்பஷ்டமாய் இருக்கிறது. ஆயினும் தான் செய்த ப்ரதிக்ஞையை ஸம்ரக்ஷித்துக்கொள்ள பீமசேனர் துரியோதனனின் இருதுடைகளையும் பேதிக்கவேண்டும். கதாயுத்தத்தில் தொப்புளின் கீழ் கொல்வது அதர்மம் என்று ஜனங்கள் சொல்லுகின்றனர். ஆகவே ஜனங்களின் நிந்தை பரிகரித்துக்கொள்வதற்காக, ப்ரதிக்ஞையை பரிபாலித்துக்கொள்வதாகிய தர்மத்திற்கும் உலக தர்மத்திற்கும் விரோதம் ஏற்படுவதாகிய ஆபத்காலத்தில், ப்ரதிக்ஞையை பரிபாலித்துக்கொள்வதே தர்மமாகுமென்று ஜனங்களுக்கு அறிவிப்பதின் நிமித்தம், பீமசேனர் சிறிது கபடம் செய்தாவது துரியோதனனைக்கொல்லட்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார். ஸ்ரீ கிருஷ்ணர் பீமசேனரின் பலம் எல்லையில்லாதது என்றும் துரியோதனனிடம் கதாசிக்ஷை என்பது குறைவாயில்லை என்றும் ஸ்பஷ்டமாய்ச் சொன்னார். துரியோதனன் அதிகம் ப்ரயத்னப்படுகிறான் என்பது அவனுக்கு துர்பலத்தன்மையை சம்பாதித்துக் கொடுக்கும் ஓர் தோஷமாகும். பீமசேனர் அதிக ப்ரயத்னம் செய்வதில்லை என்பது அவருக்கு ப்ரபலத்தன்மையை சம்பாதித்துத்தரும் ஓர்குணமாகும். துஷ்டர்கள் விஷயத்தில் ப்ரதிக்ஞையை பரிபாலித்துக்கொள்வது விசேஷமான தர்மம் என்று தர்மரஹஸ்யத்தை ஸ்ரீ கிருஷ்ணரும் பீமசேனரும் அறிந்தவர்கள். வேறு யாருக்கும் இது தெரியாது. ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணரும் பீமசேனரும் உலக நிந்தையை நிவிருத்தி செய்துகொள்வதற்காக இருதர்மங்களின் விரோ[illegible]த்து சம்புஷிக்காமல் இருந்தும் ஜனங்[illegible] ஆபத்[illegible]க்கொடுத்தார்கள்.

( 208171 )



பிறகு பீமசேனர் எல்லா ஜனங்களுக்கும் தர்மத்தை வெளிப்படுத்திக்கொண்டு, ஹே துரியோதன! என் பிரதிக்ஞைப்படி உன் துடைகளை பேதிக்கிறேன். இந்த விஷயத்தில் இது அதர்மம் என்று ஒருவரும் எண்ணத்தகுந்ததல்ல என்று சொன்னார். இவ்வாறு சொன்ன பீமசேனரிடம் யுத்தம் செய்ய துரியோதனன் வந்தான். அங்கு கதாயுத்தம் நடந்தது. அப்பொழுது பீமசேனர் சிறிதாக ஆரம்பித்து ப்ரபலமாய் முடிக்கும் உத்தமர்களின் சுபாவத்தை யுத்தம் பார்த்திருந்த ஜனங்களுக்குக் காட்ட விரும்பிக்கொண்டு, ஆரம்பத்தில் பொது சுபாவமாக ஸ்வல்பமாய் யுத்தம் செய்தார். பீமசேனரும் துரியோதனனும் விசித்ரமாய் கதாசிக்ஷையைக் காட்டிக்கொண்டு சஞ்சரித்தார்கள். அப்பொழுது தீர்த்தயாத்திரையை செய்துகொண்டு பலராமர் பீமசேனரையும் துரியோதனனையும் யுத்தம் வேண்டாமென்று தடுப்பதற்காக அங்கு வந்துசேர்ந்தார். பலராமரால் தடுக்கப்பட்டபோதிலும் இவ்விருவர்களும் யுத்தத்தை விடவில்லை. பிறகு பலராமர் ஸ்ரீ கிருஷ்ணர் முதலானவர்களால் மரியாதையடைந்து அந்த கதாயுத்தத்தை பார்த்தார். கதாயுத்தத்தின் சிக்ஷையின் பலம்கொண்ட துரியோதனன் பீமசேனர் இவர்கள் முப்பத்திரண்டு வகையான மண்டலங்களை சஞ்சாரம் செய்தனர். அந்த யுத்தத்தில் பீமசேனனை வஞ்சிப்பதற்காக துரியோதனன் துடையை மேலே தூக்கிக்கொண்டு தன்னை பூமியில் நாட்டினான். அப்பொழுது பீமசேனர் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆக்ஞையின்பேரில் முதுகுக்கு ஆதாரமாயுள்ள துடையின் மூலத்தில் கதாயுதத்தால் துரியோதனனை அடித்தார். துரியோதனன் துடை துண்டிக்கவனாய் பூமியில் விழுந்தான். அப்பொழுது தன் பிரதிக்ஞையை காப்பாற்றிக்கொள்வதற்காக பீமசேனர் துரியோதனனின் நாபியின் மேல் அடிக்கவில்லை. கீழேதான் அடித்தார். பீமசேனர் கதாயுத்தத்தின் மரியாதையையும் கீர்த்தியையும் காப்பாற்றுவதற்காக தொப்புளுக்கு அதிகம் கீழே அடிக்கவில்லை. மத்யபாகத்தின் பின்புறத்து அடிப்பாகத்தில் துரியோதனனை அடித்தார். இவ்வாறு முன்பு இரண்டு தடவை செய்த ப்ரதிக்ஞையை ரக்ஷணம் செய்துகொள்ள துரியோதனனின் இருதுடைகளையும் சேதித்து த்யூதத்தில் ஸ்ரீகிருஷ்ணரை பந்தயம் வைக்கும்படி சொன்னதற்

21193.K

காக உன் தலையை மிதிக்கிறேன் என்று அவர் செய்த ப்ரதிக்ஞைப்படி பீமசேனர் துரியோதனனின் தலையை காலால் தேய்த்தார். அந்த காலத்தில் "ரிஷபம் மாஸமானைம்" என்னும் ஸூக்தத்தின் அர்த்தத்தை அனுஸந்தித்தார். இதன் அர்த்தம் யாதெனில் எனக்கு ஸமானமாய் உள்ளவர்களின் நடுவில் என்னை ச்ரேஷ்டமாய்ச்செய். உங்கள் க்ஞானம் புண்யம் எனக்கு வரட்டும் என்று துரியோதனனுடை விஷ்ணுத்வேஷிகளுக்கு ஏற்படும் புண்யம் வித்தைகளை எடுத்துக்கொண்டு பீமசேனர் அவர்களை அந்தர்தமஸ்ஸுக்கு போய் சேரும்படி செய்தார். துரியோதனனின் தலையில் பாதப்ரஹாரம் செய்தார். துரியோதனன் பூர்வத்தில் செய்த விஷதானம் முதலான காரியங்களை அவனுக்கு ஞாபகப்படுத்தினார். ஸ்ரீகிருஷ்ணரைக்கட்ட ஆலோசித்தாய் என்று சொல்லி துரியோதனனை தலையில் உதைத்தார். தைத்யச்ரேஷ்டனான துரியோதனனை உதைப்பதாலே எல்லா தைத்யர்களையும் உதைத்ததாய் ஆயிற்று என்று அறியவும்.

அடுத்தடுத்து பீமசேனர் உதைப்பதைப்பார்த்து பலராமர் கோபமடைந்தார். இருகைகளையும் தூக்கிக்கொண்டு இது தர்மமாகாது என்று கூவினார். மறுபடியும் கோபத்தால் கண்களை சிகப்பாய் செய்துகொண்டு முஸலாயுதம் ஹலாயுதம் இவைகளை எடுத்து, பீமசேனரிடம் ஓடிவந்தார். பீமசேனர் சலிக்கவில்லை, பீமசேனர் பயமற்று நிற்கவும் ஸ்ரீ கிருஷ்ணர் பலராமரைப்பிடித்துக்கொண்டார். இவ்வாறு பேசினார். அண்ணா! இந்த துரியோதனன் பீமசேனரால் தர்மமார்க்கமாய் கொல்லப்பட்டான். எப்படி எனில் மண்டலாகாரமாய் சுற்றும்பொழுதும் எதிர்த்து வரும்பொழுதும் பின்னடி திரும்பிப்போகும்பொழுதும் நாபியின் கீழே கொல்லலாகாது, தலை கீழாய் கால் மேலாய் வஞ்சனை யுத்தம் செய்பவனை நாபியின்கீழ் கொன்றால் தோஷமில்லை. உன் துடைகளை பேதிக்கிறேன் என்று யுக்தி பூர்வமாய் தான் முன் செய்த ப்ரதிக்ஞையை காதில்போட்ட பீமசேனன் இப்பொழுதும் ப்ரதிக்ஞையை செய்தான். ஆகையால் உத்தமமான காரியமுள்ள பீமசேனன் துரியோதனனை தர்மமார்க்கத்தில் கொன்றான். என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னதைக்கேட்டு, பலராமர் இது தர்மாபாஸம் என்று சொல்லிக்கொண்டு பிருத்யர்களுடன் சேர்ந்து



தன் த்வாரகைக்கு சீக்கிரம் புறப்பட்டுப்போனார். பலராமர் புறப்பட்டுபோகவும் துரியோதனனை பீமசேனர் கொன்றது தர்மமா அதர்மமா என்று தர்மபுத்திரர் பிரசினம் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். மகாபாபிஷ்டர்களான ஜனங்களை ஸாக்ஷாத் தர்மத்தால் கொல்லகூடாது. தேவர்கள் வஞ்சித்துத்தான் தைத்யர்களை முற்காலங்களில் சம்ஹாரம் செய்திருக்கிறார்கள். ஆகவே துரியோதனன் அதர்மமாக கொல்லப்பட்டான். இந்த விஷயத்தில் தோஷமில்லை. பீஷ்மர் துரோணர் கர்ணன் இவர்களே கபடமாய் கொல்லப்பட்டிருக்கையில் பாவியான துரியோதனன் கபடமாய் சம்ஹரிக்கப்பட்டதில் எவ்வகையிலும் தோஷமில்லை. பீமசேனன் தன் பிரதிக்ஞையை காப்பாற்றிக்கொள்ளவும் துடைகளை பேதித்தான். துரியோதனன் த்ரௌபதிக்கு துடையைத் தட்டிக்காண்பித்ததால் அந்த குற்றத்திற்கு அனுஸாரணையாக அவனுடைய துடையை பேதிப்பதானப்ரதிக்ஞையை பீமசேனன் தர்மமாகவே செய்தான். ஆகையால் துடையை பேதித்த விஷயத்தில் சாமான்ய அறிவுள்ள ஜனங்களின் எண்ணத்தின்படியும் அவனுக்கு தர்மஹானி இல்லை. பீமசேனனின் சாமர்த்தியத்தை அறியாதவர்கள் அவன் துடையை பேதித்தது அவனுக்கு பிராணன் போகும் ஆபத்து நேரிட்டதின் நிமித்தம், அச்சமயம் துடையை பேதித்ததால், அவனுக்கு ஆபத்தர்மம் என்று அறிந்து கொண்டனர். பரமசிவனிடமிருந்து யாராலும் கொல்லப்படாதிருக்கும் அதாவது அவத்யத்வமாகிய வரனைப்பெற்றதிலும், கதாயுதத்தின் அப்யாஸ பலத்திலும், துரியோதனன் ஜராஸந்தனுக்கு ஸமமானவன் என்று பிரசித்தனாதலால் பீமசேனர் ஜராஸந்தனைக் கொன்றதால், துரியோதனனின் துடையை சேதித்தது தன் பிரதிக்ஞையை ஸம்ரக்ஷிப்பதாகிய ஆபத்தர்மம் என்று பீமசேனரின் மகாத்மியத்தை அறிந்தவர்கள் தெரிந்துகொண்டனர். ஆகவே ஜகத்பதியான ஸ்ரீகிருஷ்ணர் பீமசேனர் செய்தது தர்மம் தான் என்று சொன்னபோதிலும் தர்மபுத்திரரை சந்தேகப்படும்படி செய்தார். பூபாரத்தைத் தொலைப்பதால் உண்டாகும் என் ஸேவையாகிய தர்மம் பீமசேனருக்கே ஸம்பூர்ணமாய் ஏற்படட்டும் என்ற அபிப்ராயத்தால் உத்தமப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு தர்மபுத்திரரை சந்தேகமுள்ளவராய்ச்செய்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் பலராமரிடமும் எல்லா ஜனங்களிடமும் துரியோதனாதிகள் தர்மமார்க்கத்தால் தான் கொல்லப்பட்டதாய் திருப்பித் திருப்பி சொன்னவார்த்தையைக்கேட்டும் சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளாததால், ஸ்ரீகிருஷ்ணர் தர்மபுத்திரருக்குசந்தேகமில்லாமல் செய்யவில்லை. துரியோதனனை பீமசேனர் தர்மமாகவே கொன்றார் என்று முக்யதர்மத்தை ஸ்ரீ கிருஷ்ணர் பலராமருக்கும் ஜனங்களுக்கும் எடுத்துச்சொன்னார். அர்ஜுனனுக்கு துரியோதனனை பீமசேனர் தர்மமாகவே கொன்றாரென்று நிச்சயஞானமேற்பட ஸ்ரீகிருஷ்ணர் முன்னாடி சொல்லப்போகிறார்.

## துரியோதனன் மீது புஷ்ப வர்ஷம்.

இவ்வாறு பீமசேனர் துரியோதனனை தர்மமார்க்கத்தாலேயே கொன்றார் என்று அடிக்கடி சொல்லும் ஸ்ரீ கிருஷ்ணரைப்பார்த்து துரியோதனன் உதடு துடிக்க கோபத்துடன் பேசினான். ஹே கிருஷ்ணா! நீ தான் பாண்டவர்களை பாபகர்மத்தில் ஈடுபடச்செய்தாய். நீ ஒருவன் தான் எப்பொழுதும் பாபம் மிகுந்தவன், என்று சொன்ன துரியோதனனைப்பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். ஹே துரியோதனா! உனக்குச்சரியான மகாபாபி எப்பொழுதுமே இல்லை. பாபநிச்சயமுள்ள உன்னை பீஷ்மாதிகள் பின்பற்றியதால் பீஷ்மாதிகளைக் கொன்றது உனக்குத்தான் பாபஸாதனம். பாபிஷ்டனையும் பாபியை அனுஸரித்தவனையும் கொன்றால் கொன்றவனுக்கு எவ்வகையிலும் பாபமில்லை. ஆகவே பாண்டவர்களுக்கு யுத்தாதிகளில் செய்த பிரயத்னத்தாலும் சுபாவமாகவும் சிறிதும் பாபமில்லை. பாண்டவர்கள் குணங்களால் மேலானவர்கள். என்னை ஆசிரயித்தவர்கள். அவர்களிடம் எவன் தான் ஓர் அணு பாபத்தையாகிலும் சொல்லுவான். நீ சுபாவத்தாலேயே மகா பாபிஷ்டன். தர்மவழியில் இருந்த பீஷ்மத்ரோணாதிகளையும் பாபவழியில் தள்ளி சுயமும் நீ எப்போதும் பாபவழியில் ஈடுபட்டிருந்து, மகா பாபிஷ்டமான அந்தம் தமஸ்ஸை அடையப் போகிறாய், என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்ல, பாபம் செய்பவர்களில் சிரேஷ்டனான துரியோதனன் சொன்னதாவது:—கிருஷ்ணா! நல்ல மரணமடைந்தவர்களில் எனக்கு மேலானவன் எவனிருக்கிறான். இந்த ஜன்மத்தில் நான் என்ன பாபம் செய்தேன். நான் யக்ஞங்



களைச்செய்தேன். வாபீகூப தடாகாதிகளைக் கட்டினேன். சத்ருக்களின் தலையின்மீது காலை வைத்தேன். யுத்தத்தில் எதிர்த்து நின்று யுத்தரங்கத்தில் மரணத்தை அடைந்தேன். இன்னமும் என்னதான் வேண்டும். இவ்வளவு போகங்களையும் அனுபவித்தேன். உத்தமமான கதியையும் சம்பாதித்தேன். கபடயுத்தம் செய்யும் துக்கப்படும் பாண்டவர்கள் துக்கத்தையே இன்னமும் அடையப்போகிறார்கள். சந்திர சூரியர்களுக்கு ஸமானர்களாயும் சூரர்களாயும் தர்மிஷ்டர்களாயுமுள்ள பீஷ்மத்ரோணாதி ஸாது ஜனங்களில்லாததாயும் ரத்னங்கள் அழிந்துபோனதாயும் கேவலம் மண்மட்டில் மீர்ந்ததாயுமுள்ள இந்த பூமியை பாண்டவர்கள் அனுபவிக்கட்டும் என்று துரியோதனன் சொல்லவும், தான்தான் பெரியவனென்றும் பாண்டவர்கள் அதமர்கள் என்றுமுள்ள அந்த எண்ணத்தை துரியோதனனுக்கு ஸ்திரப்படுத்தி, அவனை அந்தம் தமஸ்ஸில் வீழ்த்துவதற்காக தேவச்ரேஷ்டர்கள் செய்த புஷ்ப வர்ஷம் துரியோதனனின் சிரஸ்ஸில் விழுந்தது. ஆத்ம சிலாகை ஸ்ரீகிருஷ்ணரின் நிந்தனை ஸ்ரீகிருஷ்ணபக்தர்களின் நிந்தனை இவைகளை மரணகாலத்தில் விசேஷமாய்ச் செய்தவர்களுக்கு தமஸ் எப்படி வராமல் இருக்கக்கூடும். இம்மூன்றில் ஒவ்வொன்றுமே தமஸ்ஸை அடையப்போதுமானது. மூன்றும் ஒன்று சேர்ந்தால் தமஸ்ஸில் துக்கம் மேன்மேல் விருத்தியாகுமென்னும் அபிப்பிராயத்தால் ஸ்ரீகிருஷ்ணர் துரியோதனனைக்கொண்டு ஹரிநிந்தை, ஹரிபக்த நிந்தை, ஆத்ம ஸ்துதி இவைகளைச்செய்து நீ செய்த தர்மங்களின் பலன் உனக்கு வியர்த்தம் என்று துரியோதனனைப் பார்த்துச்சொன்னார்.

துரியோதனனுக்கு தர்ம பலமான மோக்ஷாதிகள் ஏற்படும் பக்ஷத்தில் இருள் சூரியனைப்போல் பிரகாசத்தைக் கொடுக்கக் கூடும். தன் பக்தர்களுக்கு இஷ்டத்தையளிக்கும் ஸ்ரீகிருஷ்ணர் மேற்கூறிய வார்த்தையை திருப்பித்திருப்பி சொல்லிக்கொண்டு, துரியோதனன் தர்மமார்க்கத்தால் தான் பீமசேனரால் கொல்லப்பட்டதாய் ஜனங்களில் பிரசித்தம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணர் இந்த தர்மத்தை பிரசித்தம் செய்யவும் எல்லா ஸாதுஜனங்களின் எல்லா மனோபீஷ்டமும் ஏற்பட்டது. இந்த துரியோதனன் பாபிதான் என்று நிச்சய புத்தியுள்ள ஜனங்கள் துரியோதனன் தர்மமாய்க்

கொல்லப்பட்டானென்று தெரிந்துகொண்டனர். தேவர்கள்செய்த புஷ்ப விருஷ்டியால் தர்மபுத்திரர் துரியோதனனிடம் பாபமில்லை என்று தெரிந்தார். எப்பொழுதுமே இது தர்மமோ அல்லவோ என்று சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தார். துரியோதனனிடம் வைத்திருந்த சிநேகத்தால் அசுவத்தாமாவும் சஞ்சயனும் பலராமனும் துரியோதனனைக்கொன்றது பாபம்தான் என்று சொன்னார்கள். பிறகு சந்தோஷப்படும் சிம்ஹநாதம் செய்யும் பாண்டவர்கள் என்ன பாஞ்சால ராஜர்களென்ன இவர்களுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணர் பிரம்மா ருத்திரன் இந்திரன் முதலான தேவர்களால் பூஜிக்கப்பட்டவராய் சிரித்துக்கொண்டு யுத்த பூமியிலிருந்து பிரயாணம் செய்தார்.

## திருதராஷ்டிரனை ஸ்ரீ கிருஷ்ணர் தேற்றியது.

பிறகு சஞ்சயனின் வாயால் பிள்ளையான துரியோதனன் இறந்த விருத்தாந்தத்தைக்கேட்டு துக்கத்தால் மிகவும் கஷ்டப்படும் தந்தையான திருதராஷ்டிரனை சமாதானம் செய்வதற்காக யுயுத்ஸு ஸ்ரீ கிருஷ்ணருடையவும் தர்மபுத்திரருடையவும் அநுமதியைப்பெற்று துரியோதனாதிகளின் பத்னிமார்களின் பின்னடி ஹஸ்தினாபுரத்திற்கு சென்றான். யுயுத்ஸு போனபிறகு ஸ்ரீகிருஷ்ணர் ஹஸ்தினாபுரத்திற்கு சென்றார். ஸ்ரீ கிருஷ்ணர் தர்ம சாஸ்திரத்தை அநுஸரித்ததும் உண்மையான அபிப்பிராயங்கொண்டதும் உலக நடவடிக்கையை வெளிக்காட்டுவதாயுமுள்ள வார்த்தைகளால் காந்தாரியுடன்கூடிய திருதராஷ்டிரனை சமாதானம் செய்து மறுபடியும் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார்.

## அசுவத்தாமாவுக்கு செய்த புழுதி பட்டாபிஷேகம்.

நாசமில்லாதவரான ஸ்ரீகிருஷ்ணர் கலிகாலத்தை அநுஸரித்து தேவாம்சர்களான திருஷ்டத்யும்நாதிகளை கொல்வதற்காக பாண்டவர்கள் சாத்யகி இவர்களுடன்கூடி ஜயம் ஏற்பட்ட தினத்தன்று வேறு இடத்திற்கு நாம் மட்டில் போகவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, பதினெட்டாவது நாள் இரவில் கௌரவர்களின் டேராவுக்கு சென்றார். அப்பொழுது அசுவத்தாமாசாரியார், கிருபர் கிருதவர்மா இவர்களுடன் சேர்ந்து துரியோதனனிடம் வந்து



சேர்ந்தார். இரண்டு துடைகளும் துண்டித்துபோய் நாய் நரி பூதங்களால் பிடுங்கி இழுக்கப்பட்டு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த துரியோதனனை அசுவத்தாமாசாரியார் கண்டார். துக்கத்தால் உண்டான புலம்பி அழுதல் முதலியவைகளால் மிகவும் வருந்தி, அசுவத்தாமா பாண்டவர்களை நிந்தித்து, ஹே ராஜனே! இப்பொழுது உனக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார். பாண்டவர்களை இல்லாமற்செய் என்று துரியோதனன் அசுவத்தாமாவுக்கு சொல்லி, அவரை பூமியின் புழுதியைக்கொண்டு பட்டாபிஷேகம் செய்தான்; பாண்டு ராஜனுடைய சந்ததியை அழித்து என் பத்னியிடம் பிள்ளையை உண்டாக்கி அந்த பிள்ளையைக்கொண்டு பூமியை சம்ரக்ஷணம்செய் என்னும் விருப்பங்கொண்டு துரியோதனனால் தூளி பட்டாபிஷேகம்பெற்ற அசுவத்தாமாசாரியார் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு அந்த யுத்த பூமியை விட்டு பிரயாணம் செய்தார்.

(தொடரும்.)

## ஹரியின் நிந்தனைகள்.

பகவானை வாயில் வந்தபடி எல்லாம் திட்டினால் தான் ஹரி நிந்தனையாகும் என்றும் அப்படித்தான் செய்யலாகாதென்றும் சிலர் எண்ணியிருக்கின்றனர். ஹரிநிந்தனை இன்னின்னது என்பதை கருடபுராணம் பிரம்மகாண்டம் விவரித்து கூறியிருக்கிறது.

1. எப்பொழுதுமே எல்லா குணங்களாலும் நிறைந்த ஸ்ரீஹரியை நிர்குணர் என்று எண்ணுவது ஹரிநிந்தை. 2. துக்கம் சங்கடம் முதலிய தோஷங்கள் எப்போதுமில்லாத ஸ்ரீஹரி ஒரு சமயம் கஷ்டத்தை அநுபவித்து திண்டாடினார் என்று எண்ணுவது ஹரிநிந்தை. 3. ஸ்ரீஹரியின் அவதாரங்களான ராமர் கிருஷ்ணர் முதலானவர்கள் சிற்சில சந்தர்பங்களில் தோல்வியடைந்ததாயும் அவமானமடைந்ததாயும் எண்ணுவது ஹரிநிந்தை. 4. சேதிக்கவோ பேதிக்கவோ எவ்வகை துன்பங்களை அடையவோ முடியாத சரீரமுள்ள ராமர் கிருஷ்ணர் முதலிய அவதார ரூபங்களின் சரீரத்தில் குத்து வெட்டு வ்ரணம் காயம் முதலியவை ஏற்பட்ட

தாய் எண்ணுவது ஹரிநிந்தை. 5. ஸீதா ஸ்ரீஹரியை விட்டுப் பிரியாதிருக்கும், மகாலட்சுமியின் அவதாரமான ஸீதை ருக்மணி சத்யபாமா முதலியவர்கள் ராமகிருஷ்ணாதி பகவத் அவதாரங்களை விட்டுப்பிரிந்ததாய் எண்ணுவது ஹரிநிந்தை. 6 ஹரியின் ரூபங்களான வேதவியாஸர் ஓர் ரிஷி என்றும் பரசுராமர் ஓர் பிராம்மணரென்றும் பகவத் அவதாரங்களை சாமனியமாய் எண்ணுவது ஹரிநிந்தை. 7. பகவானின் அவதாரங்களான ராமருக்கும் கிருஷ்ணருக்கும் பல வித்தியாஸங்களிருப்பதாய் சொல்லி ஒருவரை மேலாகவும் மற்றொருவரை குறைத்தும் எண்ணுவது ஹரிநிந்தை. 8. கிருஷ்ணர் தனக்கு ஸந்ததியுண்டாக்குவதற்காக பரமசிவனைக் குறித்து தபஸ் செய்தாரென்று எண்ணுவது ஹரிநிந்தை. 9. ஆனந்தம் ஞானம் இவைகளை சரீரமாகக்கொண்ட ராமர் கிருஷ்ணர் முதலியவர்கள் தாயிடம் பிறந்தார் பிறகு இறந்தார் என்று அவர்களின் ஜனன மரணாதிகளை எண்ணுவது ஹரிநிந்தை. 10. ஞானம் ஆனந்தம் பூர்ணரான அந்த ஸ்ரீஹரி நான் தான் ஸோஹம் என்று எண்ணுவது ஹரிநிந்தை. 11. எப்போதும் துன்பமே இல்லாத பகவத் அவதாரமான ராமர் சேதுக்கரையில் சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து தன் துன்பத்தைப் போக்கி கொண்டதாய் எண்ணுதல் ஹரிநிந்தை. 12. ஸ்ரீரங்கம் முதலான ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரத்தில் ஹரி இருப்பது சிலாதிகளின் ரூபத்துடனில்லாமல் ஞானானந்த சொரூபமாகவே இருப்பதாய் எண்ணுதல் ஹரிநிந்தை. 13. "என்ன! ஹரி!" என்று ஓர் பிராம்மணனைப் பார்த்து சொல்லி அவன் ஸ்ரீஹரிதான என்று எண்ணுவதும் தாயும் தந்தையும் அந்த சொரூபர்களாய் ஹரிதான் இருப்பதாய் எண்ணுவதும் ஹரிநிந்தை. 14. ஸ்வதந்திரரான ஹரியையும் பராதீனரான ஹரனையும் ஒன்றாய் சேர்த்து ஹரியும் ஹரனும் ஒன்று என்று எண்ணுவது ஹரிநிந்தை. 15. உதயமாகும் சூரியனைப் பார்த்து இவர்தான் ஹரி என்று சூரியனுக்கும் ஹரிக்கும் ஐக்யத்தை எண்ணுதல் ஹரிநிந்தை. 16. சூரியன் தான் ஸர்வோத்தமன் என்றும் விஷ்ணுமுதலியவர்கள் அவனுடைய பிருத்யர்கள் என்றும் எண்ணுதல் ஹரிநிந்தை 17. சுயம் வியக்தமில்லாத க்ஷேத்திரங்களிலுள்ள பகவான் மூர்த்திகளின் எதிரிலும் அசுவத்தவிருக்ஷம் துளஸீ பிருந்தாவனம் முதலியவைகளின் எதிரிலும் சாலக்ராமம் வைத்திருக்காமல் இவைகளை ஸாக்ஷாத்தாய் வணங்குதல் ஹரிநிந்தை. ஹரிகதை என்பவைகளில் இந்த அம்சங்கள் இல்லாவிடில் அது ஹரிநிந்தையேயாகும். புண்ய விருத்திக்கு காரணமாக மாட்டாது.

---



# ஸ்ரீராமாவதார காலநிர்ணயம்.

(ப்ராசீனக் குறிப்பு)

வராககல்பம் வைவஸ்தமன்வந்தரத்திய இருக்திநான்காவது மகாயுகத்திலுள்ள த்ரேதாயுகத்தில் ஹேவிளம்பி வருஷம் சைத்ர மாஸம் சுக்லபக்ஷம் நவமிதிதியன்று ஸ்ரீராமாவதாரம். பராபவ வருஷத்தில் ஸீதை பூமியில் பிறந்தாள். அப்பொழுது ராமருக்கு வயது 15ம் ஸீதைக்கு 6ம் ஆகிறது. விரோதிகிருது வருஷத்தில் ஸீதாராம விவாகம். ரக்தாக்ஷி வருஷம் சைத்ர சுக்ல தசமியில் வனவாஸாரம்பம் அப்பொழுது ராமருக்கு வயது 27. தாத்ரு வருஷம் மாக மாஸம் சுக்லபக்ஷம் அஷ்டமியில் விந்த முகூர்த்தத்தில் ஸீதாபஹாரம். அப்பொழுது ராமருக்கு வயது 40. ஈசுவர வருஷம் மார்கசீர்ஷமாஸம் சுக்லபக்ஷம் தசமியில் ஸம்பாதி சொன்னது. ஏகாதசியன்று ஹனுமார் ஸமுத்ரத்தைத் தாண்டியது. அன்றிரவு ஸீதையைக்கண்டது. த்வாதசியன்று லங்கையிலிருந்தது. த்ரயோதசியன்று ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்தது. சதுர்தசியில் பிரம்மாஸ்திரத்தால் கட்டுப்பட்டது. பௌர்ணமியன்று மகேந்திரமலைக்கு திரும்பிவந்தது. மார்கசீர்ஷ மாஸம் கிருஷ்ண பக்ஷம் ஸப்தமியன்று ஸ்ரீராமரிடம் சூடாமணியை ஸமர்பித்தது. அஷ்டமியன்று வானரசைனியங்களுடன் ஸ்ரீராமர் புறப்பட்டது. மாகமாஸம் சுக்லபக்ஷம் த்விதியையன்று லங்கையில் ஸ்ரீராமர் ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தது. பஹுதான்ய வருஷம் சைத்ரமாஸம் கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியன்று யுத்தம் முடிந்தது. யுத்தம் நடந்தது 88 நாள் என்று அக்னிவேச்ய ராமாயணம் அறிவிக்கிறது. பாத்மபுராணத்திலோ பஹுதான்ய வருஷம் பாத்ரபத மாதம் ப்ரதமையன்று யுத்தமாரம்பமென்றும் பௌர்ணமியன்று கும்பகர்ணவதமென்றும் அமாவாசையன்று ராவணன் இறந்தது என்றும் மகாநவமியன்று ராவணஸம்ஹாரமென்றும் ஆசுவிஜ மாஸம் கிருஷ்ண பக்ஷம் ஷஷ்டியன்று ஸ்ரீராமபட்டாபிஷேகமென்றும் பாத்மபுராணம் அறிவிக்கிறது. யுத்தம் நடந்தது 39 நாள். அதிகமாஸம் வந்ததால் ஆசுவிஜ மாஸம் கிருஷ்ணபக்ஷம் ஷஷ்டியன்று பதினொன்குவருஷம் முடிவடைகிறது.

# ஆசாரமாலை.

---

## ஸந்தியார்த்த விமரிசம்.

(முன் 249ம் பக்கம் தொடர்ச்சி.)

ஸங்கல்பம் ஸந்தியாவந்தன கர்மாவில் செய்யப்படும் முதல் அம்சமாய் இருந்துவருகிறது. இதரர்களைப்போலில்லாமல் நாம் வருஷம் மாஸம் திதிவாரம் முதலியவைகளை விஸ்தாரமாய்ச்சொல்ல நியமிக்கப்பட்டிருக்கின்றோம். இதை இக்காலத்திய பலர்கள் சரியாய் கவனிப்பதில்லை. எல்லா பிராம்மண வகுப்பார்களும் எந்த வைதிக காரியத்தையும் செய்தால் முன்னாடி நம்மைப்போலவே திதி வாராதிகளைச்சொல்லி சங்கல்பம் செய்கின்றனர். ஸந்தியாவந்தனம் பிரதானமான வைதீக கர்மாவாக இருப்பதால் இதற்கும் இம்மாதிரியான ஸங்கல்பம் அவசியமென்று நம்மவர்களால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. சுயம் ஸந்தியாவந்தனத்தையே செய்யத்துவக்கிவிட்டால் போதாதோ. இவ்வாறு திதிவாராதிகளை வெகு விஸ்தாரமாய்ச்சொல்லி சந்தியாவந்தனத்தைச் செய்கிறேனென்று ஒருதரம் சொல்லிவிட்டு, பிறகு ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டுமா என்று ஆக்ஷேபித்துக்கொண்டு இதில் பலர் உதாசீன புத்தி கொள்கின்றனர். அவ்வாறு எண்ணுவது பெருந்தவறு. ஓர் சத்கர்மாவைச் செய்வதை முன்னாடி அறிவிப்பதால் பல நன்மைகள் உண்டு. உலகில் நியாயஸ்தலங்களில் நடக்கும் எந்த காரியத்திற்கும் நோட்டீஸ் அவசியமென்று கருதப்பட்டிருக்கிறது. அவ்வாறு நோட்டீஸ் கொடுத்து செய்யும் எக்காரியத்திற்கும் கௌரவமும் நீதியும் ஜயமும் பிரத்யக்ஷ சித்தமாய் இருக்கிறது. அதுபோல் ஸங்கல்பம் செய்து ஸந்தியாவந்தனம் செய்யத்துவக்கினால் நற்காரியங்களுக்கு உதவிசெய்ய காத்திருக்கும் தேவகணத்தார் உடனே முன்வந்து, அதற்கு பாதகம் செய்ய முயலும் இதர அசுரகணத்தார்களை வென்று விக்னமில்லாமல் செய்த காரியத்தை பூர்த்தி செய்வித்து, எங்களுக்கு அந்த கர்மபலன் ஏற்படும்படி செய்வார்கள். சில சத்கர்மாக்களுக்கு ஸங்கல்பம் செய்த மாத்திரத்தால் அவை பூர்த்தியாகாமல் அரைகுறையாய் நின்றாலும் ஸம்பூர்ணமாய் செய்த பலனை பகவான் அளிக்கிறார். நான் தானம் செய்யப்போகிறேன், கங்காதி தீர்த்த யாத்திரை போகப்போகிறேன், பிராம்மணனை பூஜிக்கப் போகிறேன் என்று, எவனும் முன்னாடி தான் செய்யப்போகும் ஸத்காரியத்தைச் சொல்லி சந்தோஷப்படுவது



வழக்கம். நான் குடிக்கப்போகிறேன், பிராம்மணனை வதைக்கப்போகிறேன் என்று தான் செய்யும் அகாரியத்தை விவேகி எவனும் முன்னாடி சொல்லமாட்டான். ஆதலால் முன்னாடி ஸங்கல்பம் செய்வது ஸத்கர்மாவின் லக்ஷணமாகும். ஸங்கல்பம் செய்யாமல் செய்யப்படும் ஸந்தியாவந்தனம் கொலைகளவுபோல் துஷ்கர்மாவின் லக்ஷணங்கொண்டதாகும். மேலும் உபநயனம் ஆனமுதல் அஹரஹ: ஸந்த்யாமுபாஸீத ஒவ்வொரு நாளும் ஸந்தியா வந்தனத்தைச் செய்யவேண்டும் என்று வேதம் விதித்திருப்பதால், இன்ன திதிவாராதிகள்கொண்ட இந்நாளின் கடமையை நான் செலுத்தப்போகிறேன் என்று விவரமாய் உத்கோஷித்து, கர்மசாக்ஷிகளான தேவர்களுக்கு அறிவிப்பது எங்கள் கடமையாகவும் ஏற்பட்டுவிட்டது. அவரவர்கள் செய்யும் சத்காரியங்கள் துஷ்கிருத்தியங்கள் எல்லாவற்றையும் ரிகார்டு செய்ய, பிரம்மாவின் வரம்பெற்று அவருடைய ஆக்ஞைப்படி ஆயிரக்கணக்கான சேவகர்களைக்கொண்ட ஓர் பெரிய இரகசியபோலீஸ் இலாகா சித்ரகுப்தனுடைய தலைமையில் யமலோகத்தில் வேலைசெய்துவருகிறது. அந்த இலாகாவில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் அவரவர்களின் சம்பந்தமான வாலியங்களின் பக்கங்களில் விவரமாய் பதிவுசெய்துகொள்ளப்பட, சதுர்முகப்ரம்மாவின் இன்ன தினத்தில் இன்ன கல்பத்தில் இன்ன மன்வந்தரத்தில் இன்ன யுகம் இன்னதேசம் இன்னகாலம் இன்னதினத்தில், நான்பாரதீபதியான முக்யப்ராணரை மூலகுருவாய்க்கொண்டு, எங்கும் வியாப்தமாய் இருந்தாலும் எல்லா அதிஷ்டானங்களிலிருந்தாலும் அந்த ரூபங்களைவிட்டு, ஸர்வோத்தமமாயுள்ள அதிஷ்டானமான அந்த என் மூலகுரு பாரதீபதி முக்யபிராணரிடமுள்ள, சூரியன் என்று பெயருள்ள கண்ணுக்கு புலப்படும் சூரியனைவிட பின்னமான, அவரிடமுள்ள ஸ்ரீ லக்ஷ்மீநாராயண மூர்த்தியின் ப்ரேரணையால், அவருடைய அனுக்ரஹத்தைப்பெற்று, ஸமஸ்த ஐஹிகாமுஷ்மிக ஸௌபாக்யங்களைப் பெறுவதற்காக, இன்ன காலத்தில் நடத்தப்படவேண்டிய ஸந்தியாவந்தனத்தைச் செய்கிறேன் என்று சொல்லவேண்டியது அவசியமாகும். ஓர் குற்றவாளியை சிக்ஷித்து விடுதலை செய்தபின்பும் பிரதிதினமும் 2 வருஷகாலம் நீ ஆஜர் காட்டிப் போகவேண்டுமென்று ஓர் மாஜிஸ்ட்ரேட்டு உத்திரவு செய்தால், அவன் பிரதிதினமும் போலீசாரிடம் ஆஜராகி அந்தந்த தேதியைக் குறிப்பிடும்படி சொல்வது உலகில் அனுபவசித்தம். இத்யாதி அநேக யுக்திகளைக் கொண்டு திதிவாராதிகளுடன் கூடிய ஸங்கல்பம் மிகவும் அவசியமாகும். இதைத்தான் பரத்வாஜர் ஸங்கல்ப ரஹிதம் கர்ம யத்க்ருதம் ஸ்மிருதி சோதிதம் | யதோ யத்பலம் நஸ்யாத் ஸங்கல்பயாத ஸ்ஸமாசரேத்

என்று ஸங்கல்பமில்லாமல் செய்யப்படும் ச்ருதி ஸ்ம்ருதி விஹிதமான எந்த கர்மாவும் நிஷ்பலம் என்று அறிவித்தார். அதாவது பகவான் அந்த கர்மா எவ்வளவு பூர்ணமாய் செய்யப்பட்டாலும் அது ஸங்கல்பமில்லாமல் செய்யப்பட்டதால், அதற்குகந்த பலனை அளிக்கமாட்டார். அது ஸித்தியையும் பெறாது என்று அறிவித்துள்ளார். ஆதலால் இந்த அம்சத்தில் பூரா கவனத்தையும் எல்லோரும் செலுத்தவேண்டியதவசியமாகும். ஸங்கல்பம் என்பது மேல்கூறிய காரணங்களைக்கொண்டு முக்யமான அம்சமானதால் இது சரியானபடி செய்ய அருகதை ஏற்பட தேக சுத்தி சித்த சுத்தி முதலியவைகள் அவசியமாயின. தேகசுத்திக்காக ஆசமனமும் சித்த சுத்தி முதலியவைகளுக்காக ப்ராணாயாமமும் ஸங்கல்பத்தின் முன்பு விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் இவைகள் முன் ஜாக்கிரதையுடன் செய்யப்படவேண்டியதாயிற்று.

ஆசமனம் ஸந்தியாவந்தனத்தில் பலதடவை ஆசமனம் சொல்லப்பட்டிருப்பதால் தண்ணீர் பருகுவதுதான் ஆசமனம் என்று பலர் எண்ணியிருக்கின்றனர். இதன் மகத்துவம் மூன்றடி விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று தரம் கையில் ஓர் உத்தாணி ஜலத்தை மட்டில் போட்டுக்கொண்டு பருகினால் மட்டில் தேகசுத்தி ஏற்படாது. வைத்தியன் சொல்லும் அளவையும் ரீதியையும் அனுஸரித்து சரக்கு சேர்த்து கஷாயம் காய்ச்சி சாப்பிட்டால் மட்டில் வியாதி நீங்குமேயல்லாது நம் இஷ்டப்படி காய்ச்சின கஷாயத்தை சாப்பிட்டால் சில சமயம் பாதகமே உண்டாகும். ஆசமனம் செய்ய பல விதிகள் இருக்கின்றன. மஹத்தேவநா ஹ்யேஷாவிப்ரநுபேணதிஷ்டதி என்றாள் துரௌபதி. ஸமஸ்த தேவர்கள் என்ன சராசர பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த பவித்ர வஸ்துக்களென்ன எல்லாமே பிராம்மணனுடைய சரீரத்திலிருக்கின்றன. ஆதலால்தான் எமது சாஸ்திரங்கள் ஏகோபித்து பிராம்மணனுக்கு வெகு உயர்ந்ததான பகவான் கூட நமஸ்கரிப்பதாயுள்ள அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய வலது கையில் பஞ்சதீர்த்தங்கள் இருக்கின்றன. பிரம்ம தீர்த்தம், பிராஜாபத்யதீர்த்தம் பித்ரு தீர்த்தம் அக்னி தீர்த்தம் தேவதீர்த்தம் என்று ஐந்து தீர்த்தங்கள் ஐந்து விரல்களின் அடிபாகத்தில் நிலைகொண்டிருக்கின்றன. மேலும் கட்டை விரலில் வாயுபகவானும், பாம்பு விரலில் ப்ராஜாபதியும், மோதிர விரலில் சூரியனும், சுண்டு விரலில் வசுதேவதைகளும் இருப்பதாய் விருத்த பாரஸ்கரர் அறிவித்திருக்கிறார். இனிமூக்கு போன்றுள்ள சுருக்சுருவம் முதலிய மரப்பாத்திரங்களைக்கொண்டு அக்னியில் ஆஹுதியைச்செய்து பகவானை மகிழச்செய்வதுபோல், பஞ்ச தீர்த்



தங்களைக்கொண்ட வலது கையை மாட்டின் காதைப்போல் மடக்கி வைத்து ஓர் உளுந்து அளவு ஜலத்தை, மூன்றுதரம் கேசவாய ஸ்வாஹா நாராயணாய ஸ்வாஹா மாதவாய ஸ்வாஹா என்று சொல்லி, வாயில் ஹோமம் செய்துகொண்டு, பகவானுடைய இருபத்திநான்கு வ்யூஹமூர்த்திகளின் பெயரைக்கொண்டு, கங்காநதிகள் ஸப்த குலாசலங்கள் முதலிய பவித்ர வஸ்துக்களால் அபிமானிக்கப்படும் பிராம்மணனின் அவயவங்களைத்தொட்டு, ஏற்கனவே அடங்கியிருக்கும் பரிசுத்த தேஜஸ்ஸை உத்தீபனம் செய்யவேண்டியதாகும். ஆசமனத்தில் ஜலத்தைப்ராசனம் செய்வது அவசியம் எப்படியோ, அப்படியே சரீரத்தின் உறுப்புகளைத்தொடுவது அவசியமென்பதை எல்லோரும் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு விரலிலும் தனித்தனியே விசேஷமான தேஜஸ் இருந்து வெளியே வீசி வருவதால், அந்தந்த அவயவங்களை அந்தந்த விரல்களைக்கொண்டே துடைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் தேகத்தில் சரியான சுத்தி ஏற்படும். கோவிந்தாய நம: விஷ்ணவே நம: என்று சொல்லி இரு உள்ளங்கைகளையும், மதுஸூதனாய நம: த்ரிவிக்ரமாய நம: என்று கட்டைவிரலின் அடியால் இரு கன்னங்களையும், வாமனாய நம: என்று பாம்பு விரல் மோதிர விரல் சுண்டு விரல்களைச்சேர்த்து இதனால் இரு உதடுகளையும், ஸ்ரீ தராய நம: என்று எல்லாவிரல்களாலும், நாஸிகைக்கும் உதடுக்கும் மத்தியிலுள்ள பாகத்தையும், ஹ்ருஷீகேசாய நம: என்று இருகரங்களையும், பத்மநாபாய நம: என்று இருபாதங்களையும், தாமோதராய நம: என்று சிரஸ்ஸையும் ஐந்து விரல்களாலும், ஸங்கர்ஷணாய நம: என்று முஷ்டியின் பின்புறத்தால் நாஸிகையின் அடிப்புறத்தையும், வாஸுதேவாய நம: என்று கட்டை விரலால் வலது மூக்கையும், ப்ரத்யும்னாய நம: என்று ஆள்காட்டி விரலால் இடது மூக்கையும், அநிருத்தாய நம: என்று கட்டை விரலால் வலது கண்ணையும், புருஷோத்தமாய நம: என்று மோதிரவிரலால் இடது கண்ணையும், அதோக்ஷஜாய நம: என்று கட்டை விரலால் வலது காதையும், நரஸிம்ஹாய நம: என்று மோதிர விரலால் இடது காதையும், அச்யுதாய நம: என்று சுண்டு விரல் மோதிர விரல் கட்டை விரல் இவைகளால் தொப்புளையும், ஜனார்த்தனாய நம: என்று உள்ளங்கையால் ஹ்ருதயத்தையும், உபேந்திராய நம: என்று சிரஸ்ஸையும், ஹரயே நம: என்று வலது புஜத்தையும், ஸ்ரீ கிருஷ்ணாய நம: என்று இடது புஜத்தையும் எல்லா விரல்களாலும் தொட்டு பவித்ரமாக்கிக்கொள்ளவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த ஸ்தானங்களை அந்தந்த நாமங்களைச்சொல்லி அந்தந்த விரல்களால் தொட்டால்தான்

சரியான பரிசுத்தி ஏற்படுவதோடு அந்தந்த ஸ்தானங்களில் அந்தந்த மூர்த்திகளின் விசேஷ ஸாந்நித்தியம் ஏற்பட்டு அந்தந்த ஸ்தானங்களை உபயோகித்து செய்யப்படும் அந்த ஸத்கர்மா சரியான பலனை யளிக்கும். இந்த எல்லாவகை அபிப்ராயத்தைக்கொண்டு ய ஏவம் ப்ராம்மணோ நித்யம் உபஸ்பர்சன மாசரேத் | ப்ரம்மாதி ஸ்தம்ப பர்யந்தம் ஜகத் ஸர்வம் ஸதர்பயேத் || இவ்வாறு தினம் ஆசமனம் செய்து சரீர அங்கங்களைத்தொடுவதால் துரும்புமுதல் பிரம்மா வரையிலுள்ள ஸமஸ்த ஸ்தாவர ஜங்கம பதார்த்தங்களடங்கிய ஸர்வ ஜகத்தையும் ஸந்தோஷப்படுத்தியதாகும் என்று வையாக்ரபாதர் அறிவிக்கின்றார். பிராம்மணனின் வலதுகாதில் புஷ்கரம் முதலிய புண்ய தீர்த்தங்கள் கங்கா கோதாவரி முதலிய புண்ய நதிகள் அக்னி பகவான் ஜலாபிமானி தேவர்கள் நான்கு வேதங்கள் சந்திரன் சூரியன் வாயு முதலிய எல்லா தேவர்கள் வஸிக்கின்றனர். மூக்கில் அக்னி பகவான் இருக்கிறார். திடீரென்று ஜலம் கிடைக்காத இடத்தில் ஒருவனுக்கு ஓர் பாபம் நேரிட்டால் அக்ஷணமே அந்த பிராம்மணன் ஐந்து விரல்களையும் சேர்த்து தன் வலது காதையும் மூக்கையும் ஸ்பரிசித்து கேசவாதி சதுர் விம்சதி (24) மூர்த்திகளின் நாமாவைச்சொன்னால் அக்ஷணமே அந்த பாபம் பஸ்மமாகிவிடும் என்று மனு ஸ்பஷ்டமாய் விதித்திருக்கிறார். ஆகவே ஆசமனத்தில் ஜலத்தை உட்கொள்வதுடன் அந்தந்த ஸ்தானங்களைத் தொடுவதில் எல்லோரும் கவனத்தைச் செலுத்தவேண்டியதவசியம்.

(தொடரும்)

# மதிப்புரை.

## ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி.

இப்பெயர்கொண்ட அருமையான நூல் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிருகங்கள் பக்ஷிகள் மரங்கள் ஆயுதங்கள் மனிதர்கள் தேவர்கள் வாத்யங்கள் வீட்டு சாமான்கள் முதலிய நூறு வகுப்புவாரியான ஸம்ஸ்கிருத பெயர்சொற்கள் யாவும் தேவநாகரத்தில் பதங்களும் அவைகளுக்கு தமிழில் அர்த்தமும் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஸம்ஸ்கிருத பதங்களை அறிவிக்கும் நிகண்டுகளில் சிறந்ததான அமர



கோசத்தின் முதல் இரண்டு காண்டங்களின் மூல சுலோகங்களும் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. பதங்களுக்கு அர்த்தம் எழுதப்படுங்கால் ஒவ்வொன்றிற்கும் தாதுபாடத்தைக்கொடுத்து அதிலிருந்து ஜனிக்கும் ஸமாஸ அர்த்தமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமர சுலோகங்களுடன் பல அரிய நிகண்டு சுலோகங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தேவநாகரம் தெரியாதவர்களுக்கு கற்பிக்க பல பாடங்களும் காணப்படுகின்றன. சுருங்கச்சொல்லின் இந்நூலின் பெயருக்கேற்ப ஸம்ஸ்கிருதமறியாத ஸாமானியர்களுக்கு பள்ளிக்கூட மாணவர்களுக்கும்கூட குருவின் ஸஹாயமின்றி ஸம்ஸ்கிருதமறிய இந்நூல் பேருதவியாக இருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை. இதன் ஆசிரியர் ஸம்ஸ்கிருத தமிழ் அகராதியை பிரசுரித்த ஸ்ரீமான் கே. ஈ. வெங்கடேச சர்மா அவர்களே ஆவார். இதன் விலை ரூ. 1. (தபாற்கூலி அணா 6 பிரத்யேகம்.) புத்தகம் கிடைக்குமிடம்:—ஸ்ரீ சென்னை ஆண்டாள் தனசேகர நிதி, 109, சைனா பஜார் ரோடு, ஜீ. டி. மதராஸ்.

குறிப்பு:—இப்பத்திரிகாலயத்திலும் மாத்வமித்திரன் வாசகர்களின் சௌகர்யத்திற்காக சில பிரதிகள் மேற்கண்ட விலைக்கு கிடைக்கும்.

# ஸ்ரீமத்வாசாரியார் சரித்திரம்.

சேலம் ஜில்லா ஆத்தூரில் இருந்துவரும் வக்கீல் ஸ்ரீமான் எஸ். பூவராஹ மூர்த்தி ஆசாரியார் பி. ஏ., பி. எல்., அவர்களால் வாயுபகவானின் ஹனுமார் பீமஸேனர் மத்வாசாரியார் இம்மூன்று அவதாரங்களின் மகிமையையும் ஸ்ரீமத்வாசாரியாருடைய சரித்திரம் விஸ்தாரமாயும் மூன்று மதங்களின் முக்ய கொள்கைகளின் ஸங்கிரஹமும் அழகாய் நிரூபிக்கப்பட்டு ஒரு சிறு புஸ்தகமாய் வெளியிட்டிருப்பதைக்காண மிகவும் மகிழ்கிறோம். ஆங்காங்கு இம்மாதிரியான பலவகை பிரசாரங்கள் தேவை என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் வற்புறுத்தியிருக்கிறோம். அநே

வரும் எனிதில் வாங்கிப்படிக்க அனுகூலமாய் சொற்ப விலைதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நூல் இப்பத்திரிகாசிரியரிடம் கிடைக்கும். விலை அணா 2. (தபாற்கூலி 0-0-9 பிரத்தியேகம்.)

---

திருப்பதி துளசி மிட்டா ஸ்ரீமாத்வ ஸபையாரின் ஆதரவை யில் கடப்பை ஜில்லா ராயசோடியிலிருக்கும் ஸ்ரீமான் கே. ராஜாராவ் பி. ஏ., எல். டி., அவர்களால் அடியிற்கண்ட நூல்கள் கிரயத்திற்கு கிடைக்குமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | வாயு பகவானின் அவதாரங்கள் (இங்கிலீஷ்) | 0—4—0 |
| 2. | ,, (தமிழ்) | 0—3—0 |
| 3. | ஹரி வாயு ஸ்துதி (தெலுங்கு லிபியில் மூலம்; கன்னட பாஷையில் அர்த்தம்) | 0—5—0 |
| 4. | மானஸீக தீர்த்த யாத்திரை (ஸம்ஸ்கிருத பாஷை தெலுங்கு லிபி) | 0—3—0 |
| 5. | நாமஸ்மரணை | 0—3—0 |

---

# ஸூர்ய வம்சாவளி.

---

[இப்பத்திரிகாசிரியரின் பிதாமஹரும் ஆசாரியருமான பாரதாசாரியரர் என்கிற சதுஸ்சாஸ்திரவித்வான் பாகவதம் சாயண்ணாசாரியார் அவர்கள் தொகுத்தது.]

I ஸ்ரீமன் நாராயணன், அவருடைய குமாரர் சதுர்முகன், அவருடைய குமாரர் மரீசி, அவருடைய குமாரர் கச்யபர், அவருடைய குமாரர் ஸூரியன், அவருடைய குமாரர் வைவஸ்வத மனு. அவருடைய குமாரர்கள் 1 திருஷ்டத்யும்னன் (இளா) 2. இக்ஷ்வாகு 3. ந்ருகன் 4. சர்யாதி 5 திஷ்டன் 6. திருஷ்டன் 7. கரூசன் 8. நரிஷ்யந்தன் 9. விருஷத்ரன் 10. நாபாகன் 11. நபன்.

II வைவஸ்வத மனுவின் 11வது குமாரரான நபனுடைய புத்ர பௌத்ராதி வம்சம் பரம்பரையாவது:— 1. ஸ்வாதிமூலன் 2. வஸு 3. ப்ரதீகன் 4. ஓகவான் ஓகவதீ என்னும் பெண் 5. ஓகவனின் மருமகன் ஸுதர்சனன். இவருடன் இந்த வம்சம் முடிவு. என்றால் நபனுடைய பிள்ளை ஸ்வாதிமூலன், அவனுடைய பிள்ளை வஸு, அவனுடையபிள்ளை ப்ரதீகன், அவனுடைய பிள்ளை ஓகவான் ஓகவதி (பெண்), ஓகவானின் மருமகன் ஸுதர்சனன் பிறகு வம்சமில்லை என்று இவ்வாறு பின்னடி சொல்லப்படும் எல்லா அயிட்டங்களின் 1, 2, 3, ஸங்கியைகளை புத்ரன் பௌத்ரன் ப்ரபௌத்ரன் என்று வம்சபரம்பரையாய் படித்தறியவேண்டும்.



III வைவஸ்வத மனுவின் 10வது குமாரரான நாபாகனுடைய புத்ர பௌத்ராதி வம்சம் பரம்பரையாவது:—1. அம்பரீஷன் 2. விருபன், கேதுமான், சம்பு 3. விருபனுடைய குமாரர் பிருஷதச்வன் 4. ரதீதரன் 5. ஆங்கிரஸர்கள் இவர்களுடன் இந்த வம்சம் முடிவு.

IV வைவஸ்வத மனுவின் 9வது குமாரர் விருஷத்ரனுக்கு வம்சம் இல்லை.

V இம்மனுவின் 8வது குமாரர் நரிஷ்யந்தராஜனுடைய புத்ர பௌத்ராதி வம்ச பரம்பரையாவது:— 1. சித்ரஸேனன் 2. தக்ஷன் 3. மீட்வான் 4. கூர்ச்சன் 5. இந்திரஸேனன் 6. வீதிஹோத்ரன் 7. ஸத்யச்ரவஸ் 8. உருச்ரவஸ் 9. தேவதத்தன் 10, கானீனன் 11. ஜாதுகர்ண்யன் 12 ஆக்னிவேச்யர்கள் இவர்களுடன் இந்த வம்சம் முடிவு.

VI இம்மனுவின் 7வது குமாரர் கரூசனுக்கு காரூசர்கள் என்று உத்ராபத ராஜர்கள் அநேகர் குமாரர்கள்.

VII இம்மனுவின் 6வது குமாரர் திருஷ்டனுக்கு தார்ஷ்டர்கள் என்னும் கூட்டத்தார்கள் குமாரர்கள்.

VIII இம்மனுவின் 5வது குமாரர் திஷ்டனுடைய புத்ரபௌத்ராதி வம்சபரம்பரையாவது:-1. நாபாகன் 2. பநந்தனன் 3. வத்ஸப்ரீதி 4. ப்ராம்சு 5. ப்ரமதி 6 கனித்ரன் 7. சாக்ஷுஷன் 8 விவிம்சதி 9. ரம்பன் 10. கனிநேத்ரன் 11. கரந்தமன் 12. அவிக்ஷித் 13. மருத்தன் 14. தமன் 15. ஸுதிருதி 16. நரன் 17. பந்துமான் 18. வேகவான் 19. பந்து 20. த்ருணபிந்து 21. விசா.

லன் சூன்யபந்து தூம்ரகேது இலபிலா 22. விசாலனுடைய குமாரர் ஹேமசந்திரன் 23. தூம்ராக்ஷன் 24. ஸகதேவன் 25. கிருசாச்வன் 26. ஸோமதத்தன் 27. ஸுமதி 28. ஜனமேஜயன் இவருடன் இந்த திஷ்டராஜனின் வம்சம் முடிவு.

IX வைவஸ்வத மனுவின் 4வது குமாரர் சர்யாதியின் பிள்ளைகள் 1. ஸுகன்யா என்ற பெண் 2. உத்தானபர்ஹி 3. ஆனர்த்தன் 4. பூரிஷேணன் இவர்களில் ஆனர்த்தனுடைய புத்திரன் ரைவதன் (ககுத்மி) 5. ரேவதி என்னும் பெண் இவருடன் இந்த வம்சம் முடிவு.

X வைவஸ்வத மனுவின் 3வது குமாரர் ந்ருகராஜனின் வம்ச பரம்பரையாவது:—1. ஸ்வாதி 2. ஜ்யோதி 3. வஸு இவருடன் இந்த வம்சம் முடிவு.

XI வைவஸ்வத மனுவின் 1வது குமாரர் ஸுத்யும்னரின் (முதலில் இளாவென்னும் பெண்ணாக இருந்தவரின்) குமாரர்கள் 1. புரூரவஸ் 2. உத்கலர் 3. கயராஜன் 4. விமலராஜன்.

XII வைவஸ்வத மனுவின் 2வது குமாரர் இக்ஷ்வாகு ராஜனின் புத்ர பௌத்ராதி வம்ச பரம்பரை பின்வருமாறு:— இக்ஷ்வாகு ராஜனின் குமாரர்கள் 1. விகுக்ஷி 2. நிமி 3. தண்டகன் மூன்றாவது குமாரரான தண்டகனுக்கு வம்சமில்லை.

(a) இக்ஷ்வாகுவின் 2வது குமாரரான நிமி சக்ரவர்த்தியின் வம்சமாவது:—1. ஜனகன் 2. உதாவஸு 3. நந்திவர்த்தனன் 4. ஸுகேது 5. தேவராதன் 6. பிருஹத்ரதன் 7. ஸுதிருத் 8. திருஷ்டகேது 9. ஹர்யச்வன் 10. மரு 11. ப்ரதிபகன் 12. கிருதரதன் 13. தேவமீடன் 14. விதிருதன் 15. மகாதிருதி 16. கிருத்திராவன் 17. மகாரோமா 18. ஸ்வர்ணரோமா 19. ஹ்ரஸ்வரோமா 20. ஸீரத்வஜன் 21. ஸீதாதேவியாகிய பெண் குசத்வஜன் என்னும் பிள்ளை 22. குசத்வஜனின் குமாரன் தர்மத்வஜன் 23. கிருதத்வஜன், மிதத்வஜன் 24. கிருதத்வஜனின் குமாரன் கேசித்வஜன் 25. மிதத்வஜன் 26. காண்டிக்யன் 27. பானுமான் 28. சதத்யும்னன் 29. சுசி 30. ஸனத்வாஜன் 31. ஊர்ஜகேது 32. அம்சன் 33. குருஜித் 34. அரிஷ்டநேமி 35.



ஸுச்ருதாயு 36. ஸுபார்சவகிருத் 37. சித்ரரதன் 38. க்ஷேமாபி 39. ஹேமரதன் 40. ஸத்யரதன் 41. உபகுரு 42. உபகுப்தன் 43. ஸ்வபனன் 44. யுயுவான் 45 வஸுபூஷணன் 46. ச்ருதன் 47. ஜயன் 48. விஜயன் 49. ஸுதகன் 50. வீரஹவ்யன் 51. திருதி 52. பஹுலாச்வன் 53. கிருதி இவருடன் நிமி சக்ரவர்த்தியின் வம்சம் முடிவு.

(b) இக்ஷ்வாகுவின் மூத்தகுமாரரான விகுக்ஷியின் மகா பாக்யசாலியான புத்ரபௌத்ராதி வம்சமாவது:— 1. ககுஸ்தன் 2. அநேநஸ் 3. பிருது 4. விச்வகந்தி 5. சந்திரன் 6 யுவநாச்வன் 7. சாவஸ்தி 8. பிருஹதச்வா 9. குவலயாச்வன் 10. திருடாச்வன் (i) கபிலாச்வன் (ii) பத்ராச்வன் (iii) 11. திருடாச்வனுடைய குமாரர் ஹர்யச்வன் 12. நிகும்பன் 13. பர்ஹிணாச்வன் 14. கிருசாச்வன் 15. ச்யேனஜித் 16. யுவனாச்வன் 17. மாந்தாதா 18. புருகுத்ஸன் (i) அம்பரீஷன் (ii) முசுகுந்தன் (iii) 50 பெண்கள் (iv) இவர்களில் புருகுத்ஸனின் குமாரர் 19. த்ரஸதஸ்யு 20. அநரண்யர் 21. ஹர்யச்வன் 22. அருணன் 23. த்ரிபந்தனன் 24. ஸத்யவ்ரதன் 25. த்ரிசங்கு 26. ஹரிச்சந்திரன் 27. ரோஹிதன் 28. ஹரிதன் 29. சம்பன் 30. ஸுதேவன் 31. விஜயன் 32. தருகன் 33. விருகன் 34. பாஹுகன் 35. ஸகரன் 36. அஸமஞ்சஸ் 37. அம்சுமான் 38. திலீபன் 39.பகீரதன் 40. ச்ருதன் 41. நாபன் 42. ஸிந்துத்வீபன் 43. அயுதாயு 44. ரிதுபர்ணன் 45. ஸௌதாஸன் 46. அச்மகன் 47. தசரதன் 48. ஐலபிலி 49. விச்வஸஹன் 50. கட்வாங்கன் 51. தீர்க்கபாஹு 52. ரகு 53 அஜன் 54 தசரதன் 55. ஸ்ரீராமச்சந்திரன் (i) லக்ஷ்மணன் (ii) பரதன் (iii) சத்ருக்னன் (iv) மூத்தகுமாரத்தி சாந்தா (v) இவர்களில் சத்ருக்னனுக்கு ஸுபாஹு, ச்ருதஸேனன் ஆகிய இருவர்களும், பரதனுக்கு யக்ஷன், புஷ்கலன் ஆகிய இருவர்களும், லக்ஷ்மணனுக்கு அங்கதன், சித்ரகேது ஆகிய இருவர்களும் குமாரர்களாவார்கள் 56. ஸ்ரீராமச்சந்திரனுடைய குமாரர்கள் குசன், லவன் 57. குசனுடைய குமாரர் அதிதி 58. நிஷதன் 59. நபன் 60 புண்டரீகன் 61. க்ஷேமதன்வா 62. தேவானீகன் 63. ஹீனன் 64. பாரியாத்ரன்

65. பலன் 66 சலன் 67. வஜ்ரநாபன் 68. ககணன் 69. விதிருதன் 70. ஹிரண்யநாபன் 71. புஷ்யன் 72. த்ருவஸந்தி 73. ஸுதர்சனன் 74. அக்னிவர்ணன் 75. சீக்ரன் 76. மரு 77. ஸுச்ருதன் 78. ஸந்தி 79. மர்ஷணன் 80. ஸஹஸ்வான் 81. விச்வஸாஹன் 82. ப்ருஹத்பலன் 83. ப்ருஹத்ரணன் 84. உருக்ஷயன் 85. வத்ஸப்ரீதன் 86. ப்ரதிவ்யோமன் 87. பானு 88. திவார்க்கன் 89. ஸகதேவன் 90. ப்ருஹதச்வன் 91. பானுமான் 92. ப்ரதீகாச்வன் 93. ஸுப்ரதீகன் 94. மருதேவன் 95. ஸுநக்ஷத்திரன் 96. புஷ்கரன் 97. அந்தரிக்ஷன் 98. ஸுதபஸ் 99. அமித்ரஜித் 100. ப்ருஹத்போஜன் 101. பர்ஹி 102. க்ருதஞ்ஜயன் 103. ரணஞ்ஜயன் 104 ஸஞ்ஜயன் 105. சக்யன் 106. சுத்தோதன் 107. லாங்கலன் 108. ப்ரஸேனஜித் 109. க்ஷுத்ரகன் 110. குணகன் 111. ஸுரதன் 112. ஸுமித்ரன் இவருடன் இந்த ஸூர்ய வம்சமே முடிவு.

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணமஸ்து.

# செய்தித்திரட்டு.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத்வஸித்தாந்த சபையின் நான்காவது வருஷோத்சவம் 18—2—37உ. பீஷ்மாஷ்டமியன்று வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் காலையில் ஸ்ரீ ஆஞ்ஜநேயருக்கு பஞ்சாமிருத அபிஷேகம் இரவு 8 மணிக்கு திருச்சி ஸ்ரீமான் ராமாசாரியாரால் துருவ சரித்திரம் ஹரிகதையும் 19உ மத்வநவமியன்று காலையில் மத்வ விஜய பாராயணம் சம்பாவனையும் மாலையில் உத்திராதி மடாதிகாரி ஸ்ரீமான் புதுக்கோட்டை கோவிந்தாசாரியாரால் ஸ்ரீ பகவத்பாதாளின் சரித்திர உபன்யாஸம் சென்ற வருஷத்திய ரிபோர்ட் படித்தல் சந்தனம் தாம்பூலாதி வழங்குதலும் 20உ இரவு உத்திரவீதி வழியாய் பஜனையும் நடத்தப்பட்டதென்றும் காரியதரிசி ஸ்ரீமான் பத்மநாபராவ் அறிவிக்கிறார். சென்ற வருஷத்திய ரிபோர்ட்டிலிருந்து 43 உபன்யாஸங்களும் 1 ஹரிகதா காலக்ஷேபமும் 12 அமாவாசை பஜனைகளும் நடத்தப்பட்டிருப்பதாயும் வரவு ரூ. 105—15—2ம் செலவு ரூ. 112—0—7 என்றும் கையிருப்பு ரூ. 16—5—7 என்றும் திரவிய பலமில்லாததால்



தாஸர் பதங்களை இலவசமாய் கற்றுக்கொடுக்கும் யோஜனை நிறுத்தப்பட்டிருப்பதாயும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் தேசபூஷணம் R. K. பிரஸன்ன வெங்கடேச ராயர் அவர்களால் இச்சபைக்கு திரவிய சகாயத்திற்காக கிராமபோன் 72 ரிகார்டுகள் அளிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

திருச்சி ஸ்ரீமத்வ ஸித்தாந்த சபையின் பதினொராவது வருஷோத்சவம் வழக்கப்படி 19—2—37 மத்வநவமியன்று மத்வவிஜய பாராயணம் பஞ்சாமிருத அபிஷேகம் பிராம்மண சந்தர்ப்பணை உபன்யாஸங்களுடன் சிறப்பாய் நடத்தப்பட்டதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்கத்தின் 4வது மகாநாடு மார்ச்சு மீ 27, 28, 29உகளில் பூரி ஜகந்நாத க்ஷேத்திரத்தில் மதுரை அட்வொகேட் ஸ்ரீமான் ராவ்சாகேப் N. நடேச அய்யர் அவர்களுடைய தலைமையில் கூடியது. அச்சமயம் விஷ்ணு யாகம், வித்வத் பரீக்ஷை முதலியவை நடந்ததாயும் தெரியவருகிறது. திருவனந்தபுரம் ஆலய ப்ரவேசக்கண்டனம், சாரதா சட்ட கண்டனம் முதலியவைகள் சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. திருவனந்தபுரம் மகாராஜாவுக்கு இந்த ஆலயப்ரவேச உத்திரவை ரத்துசெய்ய தூது அனுப்பவும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து யாத்ரீகர்கள் வரும் அநந்தசயனம் கன்யாகுமாரி ஜநார்த்தனம் இந்த ஊர் கோயில்களாவது சண்டாளர்களுக்கு திறந்துவிடாமலிருக்க வற்புறுத்தப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தகுந்தது. ஸநாதன தர்மபிரகாரம் தேசமெங்கும் மும்முரமாய் நடத்தப்பட, ஓர் ஜில்லாவில் திருஷ்டாந்தமாய் கட்டுப்பாடாய் இது துவக்கப்படவேண்டுமென்று யோசனை செய்யப்பட்டிருப்பதாய் அறிய மிகவும் மகிழ்கிறோம். இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஏராளமாய் டெலிகேட்டுகள் வந்திருந்து மகாநாட்டை சிறப்பாய் நடத்தி விசேஷமான பொருளுதவி செய்து ஸநாதன தர்மபிரசாரத்திற்கு கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது பெரும் ஆறுதலை அளிக்கிறது.

ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் தேசபூஷணம் R. K. பிரஸன்ன வெங்கடேசராவ் அவர்கள் தமது தேகசிரமம் பாராமல் இங்கருக்கு தமது மோட்டாரில் வந்து இப்பத்திரிகாசிரியரின் கிரகத்தில் ஸ்ரீமான்களான ஆரியதர்மம் பத்திரிகாசிரியர் கோபாலதேசிகாசாரியார், மகாமகோபாத்யாயம் R. V. கிருஷ்ணமாசாரியார், தாத தேசிகாசாரியார் M. ராமராவ் இப்பத்திரிகாசிரியர் முதலான பல ஸநாதனிகளின் முக்யஸ்தர்களுடன் ஸநாதன தர்மப்ரசாரத்தை பலனேற்படும்படியாய் நடத்த யோசித்ததுமன்றி தமது செலவில் தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சிட்டிருக்கும் மதராஸில் நடந்த ஸநாதன தர்ம கான்பரன்ஸின் நடவடிக்கை புஸ்தகங்களை இனமாய் எல்லா ஸநாதனிகளுக்கும் முக்யமாய் மாத்வமித்திரன் எல்லா வாசகர்களுக்கும் வழங்கப்பட ஏற்பாடு செய்திருப்பது குறிப்பிடத்தகுந்தது.

# லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே.

தசரத குமாரர்களான ராமலக்ஷ்மண பரத சத்ருக்னர்களில் பரதனுக்கு லக்ஷ்மணன் தம்பியா தமையனா என்ற பிரசினம் பல வருஷங்களாய் நம்மவர்களை பாதித்துவருகிறது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்மார்த்தர்கள் முதலான இதர மதத்தார்கள் பரதன்தான் லக்ஷ்மணனுக்கு மூத்தவன் என்று அபிப்ராயம் கொண்டிருக்கின்றனர். வீலர் முதலிய பிரபல ஆங்கில தத்வ ஞானிகள் பரதன் எல்லோரைவிட முதலில் பிறந்தவனென்று வாதிக்கின்றனர். பல புராணங்களில் இக்கால்வரை பலவகை வரிசையில் சொல்லப்பட்டிருக்கிறது. வால்மீகி ராமாயணத்திலும் பரதன் மூத்தவன் என்று தோற்றும் பதங்களும் காணப்படுகின்றன. இவ்விஷயத்தில் ஸ்ரீராமனை உபாஸ்ய தெய்வமாகக்கொண்டுள்ள ஸ்ரீராமதாஸனான ஆஞ்சநேயரின் மற்றொரு ரூபமான ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் லக்ஷ்மணர்தான் பரதனுக்கு தமையன் என்று நிர்ணயம் செய்துள்ளார். அந்த அபிப்ராயத்தை நம்மவர்களில் பிராசீனர்கள் சிலர் சமூகச்சண்டையினாலோ வேறு எந்த காரணத்தினாலோ ஒப்புக்கொள்ளாமல் பரதன்தான் ஜேஷ்டனென்பது ஸ்ரீபகவத் பாதாளின் அபிப்ராயமென்று வாதித்திருக்கின்றனர். ஸம்வத்ஸராரம்பமாகி சைத்ரமாதம் பிறந்தவுடனே இந்த மாதத்தில் ஸ்ரீராமாவதாரமாயிருப்பதின் நிமித்தம் எல்லா ஆஸ்திகர்களின் மனது ஸ்ரீராமனிடமே நிலைகொள்கிறது. ஆதலால் "ஸர்வப்ரியகரஸ்தஸ்ய ராமஸ்யாபி சரீரத:| லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பன்னோ பஹி: ப்ராண இவாபர:| நச தேன வினா நித்ராம் லபதே புருஷோத்தம:| மிருஷ்டமன்னமுபாநீதமச்னாதி ந ஹி தம் வினா||" என்று வால்மீகி அறிவித்தபடி யாரைவிட்டு ஸ்ரீராகவன் போஜனம் செய்யமாட்டாரோ தூங்கமாட்டாரோ அவ்வாறு அவரால் உயிருக்கு உயிராய் பரமப்ரியராய் எண்ணப்பட்டவரும் ஸ்ரீராகவனின் சரண கைங்கரியத்தைத்தவிற வேறு எதையும் வேண்டாதவரும் ஸ்ரீராமானுஜன் என்று நிர்விவாதமாய் மிகுந்த கியாதியடைந்தவருமான ஸ்ரீ லக்ஷ்மணர் சம்பந்தமான இந்த பிரச்னையைப் பற்றி ஸ்ரீராமநவமியாகிய புண்யதினத்தில் ஸ்ரீராமச்சந்திரனின் ப்ரீதியின்பொருட்டு சிறிது ஆராய்வோம்.

முதலில் ஸ்ரீபகவத் பாதாள் இவ்விஷயத்தில் என்ன நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறார் என்பதை முதலில் கவனிப்போம். ஸ்ரீமத் பாரத தாத்பரிய நிர்ணயம் மூன்றாவது அத்யாயத்தில் ஸ்ரீராமவதாரத்தைச்



சொல்லும் பிரகரணத்தில் அவர் அறிவிப்பதாவது.—முன்பு பிரம்மாவிடமிருந்து பிறந்திருந்த மன்மதன் லக்ஷ்மியிடம் நாராயணனால் ப்ரத்யும்னனென்று பிறந்தான். அந்த மன்மதன்தான் ருத்திரனால் சுப்பிரமணியனென்று பிறந்தான். அந்த ப்ரத்யும்னன் நாராயணரின் சக்ராயுதமாய் ஆனதற்கு முன்பு தமோகுணாபிமானியான துர்க்கை நாராயணரின் சக்ரமாகிய சக்ராயுதத்தின் ரூபங்கொண்டு சக்ரமென்னும் சப்தத்தால் அழைக்கப்பெற்றிருந்தாள். ஸத்வாகுணாபிமானியான ஸ்ரீதேவி சங்கத்தின் ரூபத்தை தரித்தாள். ரஜோகுணாபிமானியான பூதேவி பத்மாயுதமாய் ஆனாள். பலம் ஞானம் இவைகளுக்கு அபிமானியான வாயுபகவான் கதையாகவும் சாரங்கமென்னும் தனுஸ்ஸாகவும் ஆனார். வித்யாபிமானியான லக்ஷ்மி நந்தகமென்னும் கத்தியாய் ஆனாள். துர்க்கை கேடயமானாள். பிராணர் அபானர் வியானர் உதானர் சமானர் என்று ஐந்து ரூபங்கொண்ட வாயுபகவான் பாணமானார். இவ்வாறு பகவானுடைய புராதனமான ஆயுதங்கள் அந்தந்த அபிமானி தேவர்களாகவே இருக்கும்பொழுது மன்மதன் பகவானுடைய வரத்தால் சக்ராயுதத்தின் ரூபத்தை தரித்தான். அந்த மன்மதன்தான் ஸ்ரீ கிருஷ்ணருடைய மகனாய் ப்ரத்யும்னனென்று பிறந்தபொழுது, பிரம்மாவின் புத்ரனான அநிருத்தன் அந்த ப்ரத்யும்னனுக்கு மகனாய் பிறந்தான். புருஷ ஜீவன்களுக்கு அபிமானியான அந்த அநிருத்தன் பகவானின் சங்கத்தின் ரூபங்கொண்டான். சக்ரம் சங்கமாகிய இந்த ரூபங்களை தரித்த ப்ரத்யும்னன் அநிருத்தன் இருவர்கள் தான் பரதன் சத்ருக்னன் என்று ஸ்ரீராமர் அவதாரமெடுத்தபின் பிறந்தார்கள் என்றிவ்வாறு பரத சத்ருக்னர்களின் வரலாற்றை பூர்வஜன்மங்களைத் துவக்கி விஸ்தாரமாய் அறிவித்து விட்டு, லக்ஷ்மணருடைய ஜன்மத்தைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது இவர்களுக்குப்பின் லக்ஷ்மணன் பிறந்ததாய், தான் சொன்னதாய் ஜனங்கள் எண்ணுவார்களே என்று சங்கித்து, ஸ்பஷ்டமாய் விவரித்து அறிவிக்க "பூர்வம் ஸுமித்ராதனயஸ் ஸசேஷ: ஸலக்ஷ்மணோ நாமகூத்தமாதனு" இந்த பரத சத்ருக்னர்கள் பிறந்ததற்கு முன்பு ஸுமித்ரையின் பிள்ளை பிறந்தான். அவன் யாரென்னில் ஆதிசேஷன். இவ்வாறு ராமருக்கு அடுத்த தம்பியாய் பின்னாடி பிறந்தவன் அந்த லக்ஷ்மணன் என்பவனே என்றார். சிற்சில விடங்களில் லக்ஷ்மணரின் ஜனனத்திற்கு முன்பு பரதனின் பெயர்சொல்லப்பட்டிருக்கிறதே என்றால் கௌஸல்யைக்கு உத்கிருஷ்டமான பராக்கிரமம் படைத்த ஸ்ரீராமர் ஒரே பிள்ளை. கைகேயிக்கு பரதன் ஒரே பிள்ளை. சுமித்ரைக்கு லக்ஷ்மண சத்ருக்னர்கள் இரண்டு பிள்ளைகள். ஆதலால் ஓர்

தாய்க்கு ஒரு பிள்ளையாய் பிறந்தவர்களை முன்னாடிசொல்லி ஒருதாய்க்கு இரண்டு குமாரர்கள் பிறந்ததை சொல் சௌகரியத்திற்காக சேர்த்து கடைசியில் சொல்லப்பட்டது என்ற தாத்பரியத்தையும் அடுத்த சுலோகத்தில் விளக்கியிருக்கிறார். இத்துடன் நிற்காமல் இவர்களின் பகவத்ரூபங்களின் வரிசையையும் அடுத்தாற்போல் கிரமமாய் காட்டினார். ஸ்ரீராமர் வாஸுதேவனின் அவதாரம். ''ஸங்கர்ஷணாத்யை: த்ரிபிரேவரூபை: ஆவிஷ்ட ஆஸீத்த்ரிஷுதேவஷு விஷ்ணு:'' ஸங்கர்ஷணர் ஆதியாகவுள்ள மூன்று பகவத் ரூபங்கள் அதாவது ஸங்கர்ஷணர் அநிருத்தர் ப்ரத்யும்னர் என்ற மூன்று ரூபங்கள் லக்ஷ்மணர் பரதர், சத்ருக்னர் இவர்களில் வரிசைக்கிரமமாய் முறையே பிரவேசித்தார்கள். லக்ஷ்மணரிடம் பிரவேசித்த ஸங்கர்ஷண ரூபத்திற்கு அடுத்தரூபமான அநிருத்த ரூபம்தான் பரதனிடம் வரிசைக்கிரமப்படி பிரவேசித்ததால், பரதன் லக்ஷ்மணனுக்கு தம்பி என்பதும், லக்ஷ்மணன் பரதனுக்கு தமையன் என்பதும் நிர்விவாதம் என்றும் விளக்கிக்காட்டினார். பின்னாடியும் பல சந்தர்பங்களில் லக்ஷ்மணன் பரதனின் ஜேஷ்டன் என்பதையும் நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறார். (3) ஒன்பதாவது அத்யாயத்திலும் ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் செய்து கொண்டவுடன் அடுத்த தம்பியான லக்ஷ்மணரைக் கூப்பிட்டு நீ யுவராஜாவாய் இரு என்று ஆக்ஞாபித்தார். அதற்கு லக்ஷ்மணர், ராமா! உம்முடைய சரணசேவையைத் தவிர வேறு எந்த பதவியையும் நான் வேண்டேன். அந்த சரணஸேவைக்கு பங்கம் ஏற்படும்படி வேறு எந்த உத்தியோகத்திலும் என்னை நியமிக்கலாகாது, தங்கள் திருவடி ஸேவையை தாங்கள் அளித்தால் அதற்கு சமானமான தங்கள் அனுக்ரஹம் வேறு இல்லை. சம்சாரத்திலும் மோக்ஷத்திலும் தங்கள் திருவடி சேவையையே தாங்கள் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அவ்வாறு நியாயமாய் லக்ஷ்மணருக்கு அளிக்கப்படவேண்டிய யுவராஜ்ய பதவியைகொடுக்க தான் சித்தமாய் இருப்பதை ஸ்ரீராகவன் அறிவித்து, லக்ஷ்மணன், தான் இந்த பதவியை வேண்டாமென்று உதறித் தள்ளி தனக்கு இந்த பதவியில்லமால் சரணஸேவையைத் தருவதுதான் அனுக்ரஹமென்று வற்புறுத்திச் சொன்ன பிற்பாடுதான், அவனுடைய தம்பியான பரதனுக்கு யௌவராஜ்ய நிர்வாகம் கொடுக்கப்பட்டதாய் விஸ்தாரமாய் அறிவித்திருக்கிறார். (4) மேலும் பகவான் சுவேதத்வீபத்திற்கு சென்ற சந்தர்பத்தில் "ராமோபி ஸார்த்தம் பவனாத்மஜேன ஸஸீதயா லக்ஷ்மண பூர்வகைஸ்ச'' ஹனுமாரோடும் சீதையோடும் லக்ஷ்மணனை முன்னிட்ட தம்பிமார்களோடும் மற்றும் கருடன் முதலான த்வாரபாலகர்களால் ஸேவிக்கப்பட்டவராய் க்ஷீர ஸமுத்திரத்திலுள்ள சுவேதத்வீபத்தில் வசித்தார் என்று சொல்லியுள்ளார். இதனால் தம்பிமார்களில் லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்பதை அவர் ஒப்புக்கொண்டதாய் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.



மிக்க பிரஸித்தமான ஸ்ரீவால்மீகி ராமாயணத்தின் அபிப்பிராயத்துக்கு விரோதமாய் ஸ்ரீபகவத்பாதாளின் நிர்ணயம் ஏற்பட்டிருக்கிறதோவென்ற யோசித்தாலும் ஸ்ரீவால்மீகி ராமாயணத்திலும் லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்பதற்குத்தான் பிரமாணங்கள் அநேகம் இருக்கின்றன. திருஷ்டாந்தமாய் இங்கு சில பிரமாணங்கள் காட்டப்படுகின்றன. (1) பாலகாண்டத்தில் பாயஸத்தை விபாகம்செய்து கொடுக்கும்பொழுது வால்மீகி சொல்வதாவது: ப்ராஜாபத்ய புருஷன் கொடுத்த பாயஸத்தை தசரதன் சரிபாதியாய் இரண்டு பாகம் செய்தார். ஓர் பாதியை ஜேஷ்டராணியான கௌஸல்யைக்கு கொடுத்தார். கையிலிருக்கும் மீர்ந்த பாதியையும் சரியாய் இரண்டு பாதி செய்தார். ஓர் பாதியை மத்யம ராணியான ஸுமித்ரைக்கு கொடுத்தார். மீர்ந்த அந்தகால் பாகத்தையும் சரியாய் இரண்டு பாதி செய்தார். ஓர் பாதியை இளையாளான கைகேயிக்கு கொடுத்தார். கையில் ஓர் பாகம் மீர்ந்திருந்ததைப் பார்த்து யோசனை செய்து அந்த அரைக்கால் பாகத்தையும் ஸுமித்ரைக்கே மீண்டும் கொடுத்தார். இவ்வாறு மூன்று பத்னிகளுக்கு தனித்தனியே அந்த பாயஸ பாகத்தை நான்கு தடவை கொடுத்தார். அவர்கள் அவ்வாறே அந்த பாயஸத்தை உட்கொண்டார்கள் என்றார். (பால. 16 சர் 26. 27. 28. சுலோ). இதனால் கௌஸல்யைக்கு அந்த பாயஸத்தின் பாதி பாகமும் ஸுமித்ரைக்கு முதல் தடவை கால் பாகமும், அடுத்த தடவை அரைக்கால் பாகமும், கைகேயிக்கு அரைக்கால் பாகமும் கொடுக்கப்பட்டதாய் ஏற்படுகிறது. ஆகவே கௌஸல்யைக்கு பிறந்த ராகவன் பாயஸத்தின் பாதி தேஜஸ்ஸுள்ளவனென்றும் ஸுமித்ரைக்கு முதலில் பிறந்தவனான லக்ஷ்மணன் கால் தேஜஸ்ஸுள்ளவனென்றும், பிறகு பிறந்தவனான சத்ருக்னன் அரைக்கால் தேஜஸ்ஸுள்ளவனென்றும் கைகேயிக்கு பிறந்தவனான பரதன் சத்ருக்னனுக்கு ஸமானமாய் அரைக்கால் தேஜஸ்ஸுள்ளவனென்றும் சொல்லப்பட்டதாயிற்று. இவ்வாறு பத்னிமார்களின் கிரமத்தையும் அவர்களுக்கு பாயஸம் அளிக்கப்பட்ட கிரமத்தையும் அந்த பாயஸத்தின் பங்குவீத கிரமத்தையும் அவர்கள் அதைப்ராசனம் செய்த கிரமத்தையும் யோசித்தால் லக்ஷ்மணன் பரதனுக்கு தமையன் என்பதற்குத்தான் ஆதாரமிருக்கிறது.

(தொடரும்)

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வ விஜயம்

---

### பத்தாவது ஸர்க்கம்.

(முன் 245ம் பக்கத்தொடர்ச்சி)

48. (விபுளா விருத்தம் ஸர்வதோபத்ரயுக்மபந்தம்) ஆசாரியாள் செய்த வியாக்கியானம் எப்படி எனில் மாயாமாத்ரமிதம் த்வைதம் முதலிய பிரமாணவாக்யங்களால் வியாப்தமாயுள்ள ஜகன் மித்யாத்வத்திற்கு ஸாதகமான மாயவாதிகளின் சாஸ்திரமாகிய மாயையால் நிராகரணம் செய்ய முடியாததாய் ஆயிற்று. இதற்கு இணையாய் வேறு எந்த வியாக்யானமும் இல்லை. இந்த வியாக்யானம் அஷ்டாங்க நியாயங்களோடு கூடியதாய் இல்லை என்றில்லை. இந்த ஆசாரியாளின் வியாக்யானத்திற்கு விருத்தமான மற்ற மதாசாரியார்களின் வியாக்யானத்தால் எப்போதும் சந்தோஷம் என்பதே இல்லாததான அந்தம் தமஸ்ஸாகிய துக்கம்தான் உண்டாகிறது.

### குருக்ஷேத்திரம் சென்றது.

49. (மந்தாக்ராந்தா விருத்தம்) ஒரு சமயம் ஞானியான ஸ்ரீ மத்வாசாரியார் 18 அக்ஷௌஹிணியிலுள்ள சுத்த க்ஷத்திரியர்கள் யுத்தம் செய்து வீர ஸ்வர்க்கத்தை அடைய மார்க்கமாய் இருந்த குருக்ஷேத்திரத்தை அடைந்தவராய் தான் பீமசேனராய் இருந்தபொழுது தான் வைத்துக்கொண்டிருந்த கதாயுதம் இதுவே என்று அந்த குருக்ஷேத்திரத்தில் புதைந்து கிடந்ததை எடுத்துக் காட்டி அதைப் பார்த்தும், அங்கு கண்ணை மூடிக்கொண்டு வஞ்சனையாய் தபஸ் செய்துகொண்டிருந்த ஒருவனைக் காண்பித்து அவன் இனி முன்னடி மாரீசனென்னும் ராக்ஷஸனாய் வரப் போகிறான் என்பதை அவனுடன் பேசி நிரூபித்துக்காட்டியதைப் பார்த்தும், மிகவும் ஆச்சரியமடைந்த தன்னுடன் கூட வந்திருக்கும் ஸத்யதீர்த்தர் முதலான சிஷ்யர்களால் சூழப்பட்டவராய் அங்கு தான் பீமசேன ரூபத்துடன் யுத்தத்தில் செய்த விளையாட்டால் மடிந்த ஆயிரக்கணக்கான யானைகளின் கோலாகலத்தை எல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டார்.



### பரமசிவன் ஆதித்யம் செய்தது.

50. (ஸ்ரக்தரா விருத்தம்) ஒரு சமயம் ஸ்ரீ மத்வாசாரியார் கங்கா தீரத்திலுள்ள ஹிருஷீகேசத்திற்கு வந்தபொழுது பரமசிவன் ஓர் வெண்மையான தேகமுள்ள பிராம்மணனுடைய ரூபங்கொண்டு, எல்லோருடைய கண்ணுக்கும் ஸ்பஷ்டமாய் புலப்பட்டு ஸ்ரீ மத்வாசாரியாரிடம் வந்து நமஸ்கரித்து, ஆசாரியாளே! நான் நாளை தங்களுக்கு அளிக்கப்போகும் பிக்ஷையை தாங்கள் உட்கொள்ளவேண்டும். அதனால் என்னை அனுக்கிரஹிக்கவேண்டும் என்று பிரார்த்தித்து, எல்லா ஜனங்களின் எதிரில் நமஸ்கார பூர்வமாய் பிக்ஷைக்கு அழைத்து, அக்ஷணமே மறைந்து எல்லாருக்கும் மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தார். பிறகு அந்த பரமசிவன் வேறு ஊரிலுள்ள ஒரு சிவாலயத்தின் அதிகாரியின் ஸ்வப்பனத்தில் ஜடாதாரியாயும் த்ரிசூலத்தை கையில் வைத்துக்கொண்டும் தான் பரமசிவன் என்று காட்டும் ரூபத்துடன் தோன்றி, எல்லா ஜீவராசிகளுக்கும் குருவாயும் விசேஷமாய் தனக்கு குருவாயுமுள்ள ஸ்ரீ மத்வாசாரியார் ஹிருஷீகேச க்ஷேத்திரத்தில் தங்கியிருக்கிறார். அவருக்கு விசேஷ விருந்தை நீ அளிக்கவேண்டும் என்று ஆக்ஞாபிக்க பரமசிவனால் பிரேரேபிக்கப்பட்ட அந்த அதிகாரி, ஹிருஷீகேசத்திற்கு வந்து ஏராளமான பக்ஷணங்களுடன் கூடிய அன்னாதிகளை அளிக்க, பரமசிவன் வேதங்களின் தாத்பர்யத்தைச்சொல்லி பிரசாரம் செய்வதால் வேதங்களுக்கு பந்துவாயுமுள்ள ஸ்ரீ மத்வாசாரியாருக்கு பிக்ஷை செய்வித்தார்.

### ஏராளமான ஆகாரத்தை உட்கொண்டது.

51 (ருசிராவிருத்தம்) பிறகு ஸ்ரீ மத்வாசாரியார் இஷுபாதமென்னும் க்ஷேத்திரத்திற்கு வந்து அந்த க்ஷேத்திர மூர்த்தியான லக்ஷ்மீபதி ஸ்ரீ பரசுராமரை பக்தியுடன் தியானம் செய்தார். அவ்வூர் அதிபதியால் பிக்ஷைக்கு அழைக்கப்பெற்று பீமசேனரின் அவதாரமாய் சொல்லப்படும் ஆசாரியாளை பரீக்ஷிக்க அவர் ஏராளமான பக்ஷ்ய போஜ்யாதிகளுடனுள்ள விருந்தை சாப்பிட்டபின் அவர் சாப்பிடுவதற்காக அவர் போஜன பாத்திரத்தில் பரமாறப்பட்ட ராஜகதளீ என்று சொல்லப்படும் வெகு ஸ்தூலமானவும் சிறந்ததாயுமுள்ள ஆயிரம் வாழைப்பழங்களை சிரமமன்னியில் சாப்பிட்டார்.

52. (பிருத்வீ விருத்தம்) ஸ்ரீ மத்வாசாரியார் சஞ்சார கிரமத்தில் கோவா என்னும் ஊருக்கு வந்துசேர, அங்கு வசிக்கும் சங்கரன் என்ற பிராம்மணன் இஷுபாதக்ஷேத்திரத்தில் ஆசாரியாள் பிக்ஷை காலத்தில் ஆயிரம் ராஜகதளி வாழைப்பழங்களை உண்டதைக் கேட்டு ஆச்சரியமடைந்தவனாய் அவர் எவ்வளவு உண்பார் என்பதை பரீக்ஷிக்க ஆசாரியாளுக்கு பிக்ஷை அளித்த காலத்தில் பரமாரிய மிகவும்மொத்தமான நாலாயிரம் ராஜகதளீவாழைப்பழங்களையும் ஆசாரியாள் சாப்பிட்டு முப்பது குடங்கள் பூர்ணமான பசும்பாலையும் குடித்தார். இப்பேர்ப்பட்ட மகிமையுள்ள பிமசேனரின் அவதாரமாகிய ஆசாரியாள் வேறிடம் செல்லாமல் தன்னூரிலேயே வசித்திருக்கும்படி செய்யவேண்டும் என்ற அவாவுடன் அவ்வூர் அரசன் ராஜசேவகர்களை காவல் போட்டிருக்க, அவர்களின் கண்ணுக்குப் புலப்படாமல் அதிருச்யராகவே அவ்வூரை விட்டு வெளியூர் சென்றார்.

சங்கீதம் பாடியது.

53. (உத்ததாவிருத்தம்) ஸ்ரீ மத்வாசாரியார் கோவிஷயம் என்னும் ஊருக்கு வந்திருக்கும்பொழுது அவருடைய மகா மகாத்மியத்தைக்கேட்டு அவ்வூர் மகா ஜனங்கள் ஒரு கூட்டத்தில் அவ்வூரிலுள்ள பாக்கு மரங்கள், புஷ்ப பலாதிகள் இல்லாமலிருப்பதை மாற்றி பலனளிக்கும்படி அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, ஆசாரியாள் உடனே தீவிரமாய் ஜனங்கள் கேட்டு ஆனந்தமனுபவித்துக்கொண்டு தூங்கும்படி செய்யும் இணையற்ற அதியற்புதமான சங்கீதம்பாடி எப்போதும் பூத்து காய்க்காத மரங்களை அதனால் பூத்து காய்க்கும்படி செய்தார்.

54. (சார்தூல விக்ரீடிதம் விருத்தம்) எதிலும் விருப்பமில்லாத குணங்கள் நிறைந்தவரும் ஸ்வர்க்க வாசிகளான தேவர்களின் சத்ருக்களான மாயாவாதிகளாகிய அஸுரர்களின் ஹிருதயத்திற்கு அம்பு போன்றவரும், சதுர்முகனுக்கு ஸமான பதவியுடையவரும், துஷ்ட சாஸ்திரங்களை எல்லாம் கண்டனம் செய்தவரும் உத்தமமான சந்திரனைப்போல் ஸௌம்யமான காந்தியுடையவரும் அத்யந்தம் விசாலமான புத்தியுடையவருமான ஸ்ரீ மத்வாசாரியார் எல்லோருக்கும் ஜயத்தை அளிக்கும் எல்லோராலும்



ஸேவிக்கப்பட அருகனான ஸ்ரீ நாராயணனை ஸேவிக்க பரத கண்டத்திலுள்ள ஸமஸ்த க்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலுமுள்ள மேலான ஆனந்தம் படைத்தவரான லக்ஷ்மீபதி விஷ்ணுவைத்தான் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துக்கொண்டு சரீர உபாதிகள் ரோகங்கள் ஜனங்களால் ஏற்படும் பலவகை துன்பங்கள் முதலியவைகள் எப்போதும் சிறிதுமில்லாதவராய் எப்போதும் ஸ்ரீ ஹரியை எண்ணுகிறவராய் எல்லா தேசங்களிலும் எல்லா ஸாதுக்களுக்கும் முக்ய பந்துவாய் அவர்களால் பூஜிக்கப்பட்டார்.

55. (புஷ்பிதாக்ரா விருத்தம்) உலகத்துக்கு பூஷணமாயுள்ள ஸ்ரீமத்வாசாரியாருடைய மேற்சொன்ன கதைகளைப் போன்ற எண்ணில்லாத, நான் இங்கு எடுத்துச்சொல்லாத இன்னமும் மற்ற ஏராளமான சரித்திரங்களை காதால் சிரவணம் செய்வதும் வாயால் சொல்வதும் மனதால் தியானம் செய்வதுமான ஸாதனங்களால் அதிகாரிகளான சாதுக்களுக்கு ஆசாரியாளுடைய சரித்திரங்கள் ஐஹிகாமுஷ்மிக பலனை அளிக்கின்றனவென்று தேவர்கள் வர்ணிக்கின்றனர்.

56. (ஹரிணீ விருத்தம்) எவ்வாறு ஒரு மேகம் விஷ்ணு பதமாகிய ஆகாயத்தை ஆசிரயித்து மின்னலின் பிரகாசத்தால் திசைகளை பிரகாசித்துக்கொண்டு வெய்யிலால் சுட்டுப்போன விருக்ஷ சமூகத்தை ஜலதாரைகளால் வர்ஷித்து தளிர்கள் உள்ளதாயும் பலன்கள் உள்ளதாயும் செய்யுமோ, அதுபோல் இந்த கதைகளைச்சொன்ன ஆசாரியாளின் சிஷ்யனான சமர்த்தமான மேகம் விஷ்ணுவின் சரணத்தை ஆசிரயித்தவராய் தன் வித்தையாகிய மின்னலால் எல்லா திசைகளையும் பிரகாசிப்பவராய் ஸம்ஸாரத்திலுள்ள துக்கங்களால் சங்கடப்பட்டிருக்கும் ஸாதுக்களாகிய விருக்ஷ சமூகத்தை ஆசார்யாளின் மேலே சொன்ன சரித்திர நிருபணமாகிய சொல்மாரியைப் பொழிந்து நல்ல மனங்கொண்டதாயும் க்ஞானம், பக்தி முதலியவைகளுடன் இருப்பதாயும் சிறிதும் சங்கடமில்லாததாயுமுள்ள ஸம்பூர்ணமான ஸௌக்யமுள்ளதாய்ச்செய்தார்.

கவிகுலதிலகரான ஸ்ரீத்ரிவிக்ரமபண்டிதாசாரியார் குமாரரான
ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய ஸ்ரீமத்வ
விஜயத்தில் பத்தாவது ஸர்க்கம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

# விளம்பரம்.

மாத்வமித்திரன் ஷீட்காலண்டர்கள் ஸ்ரீ குருராகவேந்திரரின் அழகிய சித்திரப்படத்துடன் வெளியாகி முன்னூறு வந்திருக்கும் ஆர்டர்களுக்கு அனுப்பத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. கையில் சொற்ப காபிகள்தான் மீந்திருக்கின்றன. மாத்வமித்திரன் சந்தாதாரர்கள் பிந்தி ஏமாறாதிருக்க காபி 1க்கு 0—2—9 வீதம் போஸ்டேஜ் ஸ்டாம்புகளை உடனே அனுப்பி காலண்டர்களைப் பெற வேண்டுகிறோம். அடியிற்கண்டவர்களிடமும் காபிகள் கிடைக்கும்:—

1. P. S. ராமராவ், 26, A. வெங்கடரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்
2. P. S. நரஸிம்ம ராவ், 14, பிராமண வீதி, சைதாப்பேட்டை, மதராஸ்.
3. R. ஸ்ரீனிவாச ராவ், 36, சுந்தரதாஸ் குளத்தெரு, திருச்சிகோட்டை.
4 V. ராமராவ், 18/162, எடயர் தெரு, கோயமுத்தூர்.
5. ரமண A. ராமகிருஷ்ணாசாரியார், 49, பெருமாள் கோயில் தெரு, மதுரை.

(மா. மா. மி.)

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 3—5—37 | சோமவாரம் | சிரவணம் உப. விஷ்ணு ப. உப. |
| 7—5—37 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. |
| 10—5—37 | சோமவாரம் | திலதர்ப்பணம், அசுவத்த பிரதக்ஷிணம், விஷ்ணு ப. உப. |
| 13—5—37 | குருவாரம் | அக்ஷய த்ருதியை |
| 21—5—37 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. |
| 22—5—37 | சனிவாரம் | த்வாதசி சாதனி மணி 6-8க்குள் பாரணை. |
| 23—5—37 | பானுவாரம் | நரஸிம்ம ஜயந்தி |
| 25—5—37 | மங்களவாரம் | பௌர்ணமி, விஷ்ணு ப. உப. வைசாக ஸ்நானம் பூர்த்தி, ஸம்பத் கௌரீ விரதம். |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் மிஞ்சி ஏமாறுதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணு 0—8—0 தபாற் கூலி அணு 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணு 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 0—5—0 தபாற்கூலி அணு ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணு 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணு 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணு 6. தபாற்கூலி அணு 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதராங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். 'Certificate of Posting' பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

# டி. எஸ். ஆர்.
அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் சாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்களின் ஊறுகாய்கள் |
| வாஸனைக் கண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னோபவுடர் | கொப்பரைச் சீவல் |
| பேஸ் பவுடர் | கோகுல் கூந்தல் [தைலம் |
| அம்பர், அகரு | பற்பொடி |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Power Printing Works a
Published by Bhagavatha Ranganathachariar, Kumbak





# மாத்வமித்திரன்.

# THE MADHWA MITRA

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 9. புஸ்தகம் 9 | ஈஸ்வர ஸம்வத்ஸரம். வைசாக மாஸம். (25-5-1937) மங்களவாரம், | No. 10. நெ. 10 |
|---|---|---|


| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மணன் பரதனுக்குதமையனே | 289 |
| 2. | ஸ்ரீமகாபாரத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 295 |
| 3. | ஆசாரமாலை | 305 |
| 4. | பிரம்மசூத்திரம் (ஸ்ரீமான் M. ராமராவ்) | 307 |
| 5. | விஷ்ணு ஸஹஸ்ரநாமம் | 311 |
| 6. | தலைவைத்திற்கு தீர்ப்பு காலிம்மாவதாமே | 313 |
| 7. | விவாஹ விளம்பரம் | 320 |
| 8. | விசேஷ தினங்கள் | 320 |

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தவொருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ ஸியாராம் விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வால்யங்கள்

## வெகு சொற்பம்தானிருக்கின்றன.

## உடனே அவைகளைப்பெற

## முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्त्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 9 | ஈஸ்வர ஸம்வத்ஸரம். வைசாக மாஸம். | NO. 10

## லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே.

(முன் 283ம் பக்கம் தொடர்ச்சி.)

(2) ராமாதிகளின் விவாகத்தைச் சொல்லும் பிரகரணத்தில் வால்மீகி லக்ஷ்மணனைத்தான் பரதனுக்கு மூத்தவனென்று பொருள்படும்படியாய் கூறியிருக்கிறார். "இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீ தவ | ப்ரதீச்ச சைனாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா ||" என்று ராகவனை ஸீதையை பாணிக்கிரஹணம் செய்யும்படி சொல்லி, அவ்வாறே ஸீதா கல்யாணமானதற்கு அடுத்தாற்போல் "ஏவம் தத்வா ததா ஸீதாம் மந்திரோதக புரஸ்க்ருதாம் | அப்ரவீஜ்ஜனகோ ராஜா ஹர்ஷேணாபி பரிப்லுத: || லக்ஷ்மணாகச்ச பத்ரம் தே ஊர்மிலாம் உத்யதாம் மயா | ப்ரதீச்ச பாணிம் க்ருஹ்ணீஷ்வ மாபூத் காலஸ்ய பர்யய: || தமேவ முக்த்வா ஜனகோ பரதம் சாப்யபாஷத | க்ருஹாண பாணிம் மாண்டவ்யா: பாணினா ரகுநந்தன || (பால 73 சர் 24—29 சுலோ) லக்ஷ்மணனை அழைத்து ஊர்மிளையை சீக்கிரம் பாணிக்ரஹணம் செய்துகொள்ளும்படி சொல்லி, அதற்கு பிற்பாடுதான் பரதனை மாண்டவியை பாணிக்ரஹணம் செய்யக்கேட்டதாயும் பிறகு சத்ருக்னனை சுருதகீர்த்தியை விவாகம்

செய்யக்கேட்டதாயும் அவ்வாறே விவாகம் நடந்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. மகா தர்மிஷ்டரென்றும் விசேஷ ஞானி என்றும் மிக்க பிரஸித்தியடைந்த ஜனகராஜன், பரதன் ஜேஷ்டனாயிருக்கும்பக்ஷத்தில் மூத்தவனுக்கு விவாகமாகாதிருக்கையில் இளையவனுக்கு விவாகம் செய்வது மகாதோஷமென்பதை அறிந்தவராதலால், வஸிஷ்டவிச்வாமித்ராதி மகான்களின் எதிரில் பரதனுக்கு முன்னாடி லக்ஷ்மணனை பாணிக்ரஹணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கமாட்டார். ஆகவே பரதனின் விவாகத்திற்கு முன்பு லக்ஷ்மணனின் விவாகம் நடந்திருப்பதைக் கொண்டு லக்ஷ்மணன் பரதனுக்கு மூத்தவன் என்றே வால்மீகி அறிவித்திருப்பதாய் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

(3) பின் பரதன் தன் தாய் மாமன் யுதாஜித்ராஜனின் வீட்டிற்கு கேகயதேசத்திற்கு செல்ல விடைபெறும் சந்தர்ப்பத்தில் "அபிவாத்ய குரும் ராமம் பரிஷ்வஜ்ய ச லக்ஷ்மணம் | கமனாயாபிசக்ராம சத்ருக்ன ஸஹிதஸ்ததா||" (பால 77 சர் 19 சுலோ) ராகவனையும் லக்ஷ்மணனையும் நமஸ்கரித்து சத்ருக்கனனுடன் சேர்ந்து பிரயாணம் புறப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. லக்ஷ்மணனையும் சேர்த்து நமஸ்கரித்தான் என்பதைக்காட்டவே ச என்ற சப்தம் ஸ்வாரஸமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. லக்ஷ்மணனை ஆலிங்கனம் செய்துகொண்டதாய்ச் சொல்லியிருப்பது லக்ஷ்மணன் மூத்தவனென்று காட்ட கூடியதாயாகாது என்றில்லை. "வவந்தே பல்குண: க்ருஷ்ணம்" என்று அர்ஜுனன் தன் வயதால் ஜேஷ்டரான க்ருஷ்ணரை நமஸ்காரம் செய்ததாய் பல சந்தர்பங்களில் சொல்லப்பட்டிருப்பினும், சிற்சில சந்தர்ப்பங்களில் "அர்ஜுனேன பரிஷ்வக்த: யமாப்யாம் அபிவந்தித:" க்ருஷ்ணரை அவன் ஆலிங்கனம் செய்ததாயும் நகுல சகதேவர்களால் வணங்கப்பட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பிரேமை மிகுந்திருக்கும் காலத்தில் நமஸ்காரம் செய்யத்தகுந்தவர்களையும் ஆலிங்கனம் செய்வது சம்பிரதாயமென்றும் அது தோஷமாகாதென்றும் செவ்வனே புலப்படுகிறது. தமயனை விட்டுப்பிரியும் சமயம் பிரேமையின் ஆதிக்கத்தால் லக்ஷ்மணனை வணங்கியதுமன்றி ஆலிங்கனம் செய்ததாய் ஏற்படுகிறது. முன்னாடி பரதன் லக்ஷ்மணனுக்கு நமஸ்காரம் செய்வதாய் நிச்சயம் செய்துகொண்டதாயும் அவ்வாறே நமஸ்காரம் செய்ததாயும் பிரமாணங்களை அறிவிக்கப்போவதால் இச்சந்தர்ப்பத்தில் பரதன் லக்ஷ்மணனை நமஸ்காரம் செய்ததாய் சொல்வது முற்றிலும் பொருந்துமென்று அறிய வேண்டும். ஆதலால் இந்த வாக்யமும் லக்ஷ்மணன் பரதனுக்கு மூத்தவனென்பதற்கு பிரமாணமே.



(4) தசரதனுடைய சாமக்கிரியைகள் ஆனபின்பு மந்திரிமார்கள் பரதனை ராஜ்யம் அநாயகமாய் போகாமலிருக்க ராஜ பதவியை ஒப்புக்கொள்ளும்படி கேட்கும் சந்தர்ப்பத்தில் "ராமம் ப்ரவ்ராஜ்ய வைஜேஷ்டம் லக்ஷ்மணம் ச மகாபலம் | த்வமத்யபவ நோ ராஜா ராஜபுத்ர மகாயச:||" (அயோ 79 சர் 2 சுலோ) உனது தந்தையான தசரதர் உன் ஜேஷ்டனான ராகவனையும் உனது ஜேஷ்டனான லக்ஷ்மணனையும் காட்டிற்கு அனுப்பி இறந்துவிட்டார். பிறகு அவர்களுக்கு அடுத்த தம்பியான நீ ராஜாவாய் அமரவேண்டும் என்று சொன்னதாய் வால்மீகி அறிவித்துள்ளார். இங்கு ஜேஷ்டம் என்றபதம் காகாக்ஷி நியாயத்தின்படி இருவர்களுக்கும் பொருந்தும்படி ராமனுக்கு பின்னாடியும் லக்ஷ்மணனுக்கு முன்னாடியும் உபயோகப் படுத்தப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. ஆதலால் இந்த வாக்யமும் லக்ஷ்மணன் மூத்தவன் என்பதற்கு பிரமாணமாகும்.

(5) பரதன் தான் பட்டாபிஷேகம் செய்துகொள்ள மறுக்கும் சந்தர்ப்பத்திலும் இந்த காரணத்தையே கைக்கொண்டு எங்கள் இக்ஷ்வாகு வம்சத்தில் ஜேஷ்டன்தான் ராஜாவாய் இருப்பது உசிதம். எல்லாம் அறிந்த நீங்கள் என்னை ராஜாவாய் இருக்கச்சொல்லலாகாது என்று சொல்லி, "ராம: பூர்வோ ஹி நோ ப்ராதா பவிஷ்யதி மஹீபதி:|| அஹம் த்வரண்யே வத்ஸ்யாமி வர்ஷாணி நவபஞ்ச ச" (அயோ 79 சர் 8 சுலோ) என் தமையனான லக்ஷ்மணனுக்கும் மூத்த தமையனான ராகவனே உங்களுக்கு ராஜாவாய் ஆகப்போகிறார். நான் அவருக்கு பதிலாக அரண்யத்தில் பதினான்கு வருஷம் வசிக்கிறேன் என்று அறிவித்ததாக வால்மீகி கூறியிருக்கிறார். இவ்விடத்தில் ராமன் பூர்வப்ராதா என்று பரதன் சொன்னதாய் அறிவித்திருப்பது கவனிக்கத்தக்கது. ஆதலால் இந்த வாக்யமும் லக்ஷ்மணன் பரதனுக்கு ஜேஷ்டன் என்பதற்கு பிரமாணமேயாகும்.

(6) இதே ப்ரகரணத்தில் பரதன் தன் அபிப்பிராயத்தை நகர மகா ஜனங்களின் சபையில் அறிவிக்கும்பொழுது "யதி த்வார்யம் ந சக்ஷ்யாமி விநிவர்த்தயிதும் வனாத் | வனே தத்ரைவ வத்ஸ்யாமி யதார்யோ லக்ஷ்மணஸ்ததா||" (அயோ 82 சர் 18 சுலோ) நான் அரண்யத்தினின்றும் என் அண்ணாவான ராகவனை அழைத்துக்கொண்டு வரமுடியாமற் போய் விட்டால், என் அண்ணா லக்ஷ்மணன் எப்படியோ அப்படியே அவருடனே வனத்திலேயே வசிக்கப்போகிறேன் என்று சொன்னதாய் வால்மீகி அறிவித்துள்ளார். இங்கு ஆர்ய: என்ற பதம் ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் தனித்து சமானமாய் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது கவனிக்கத்

தக்கதாகும். ஆதலால் லக்ஷ்மணன் பரதனைவிட மூத்தவன் என்பதை வால்மீகி ஒப்புக்கொண்டதற்கு இந்த வாக்யமும் பிரமாணமாகும்.

(7) இச்சந்தர்ப்பத்திற்கு அடுத்தாற்போல், பாத்வாஜ மகரிஷி சதுரங்க சைனியத்துடன்கூடிய பரதனுக்கு விருந்து நடத்தியபொழுது பலவகை ஆஸனங்கள் போட்டு விசித்ரமாயிருந்த ராஜசபையை பிரவேசித்து அங்கு உட்கார பரதனை பாத்வாஜர் கேட்டுக்கொள்ள, "ஆஸனம் பூஜயாமாஸ ராமாய அபிப்ராணம்ய ச ॥ வாலவ்யஜனமாதாய ந்யஷீதத் ஸசிவாஸனே॥ ஆனுபூர்வ்யான் நிஷேதுஸ்ச ஸர்வே மந்த்ரி புரோஹிதா:" (அயோ 91 சர் 38 சுலோ) நடுவில் போட்டிருந்த அரசன் உட்காரத்தகுந்த ஸிம்ஹாஸனத்தைக்கண்டு ராகவனை தியானித்து அவனை நமஸ்கரித்து அந்த ராஜாஸனத்துக்கும் மரியாதை செய்துவிட்டு அதில் உட்காராமல் கையில் சாமரம் எடுத்துக்கொண்டு மந்திரிஉட்கார வேண்டிய ஸசிவாஸனத்தில் அவன் உட்கார்ந்ததாயும், இதை அனுஸரித்து எல்லாமந்திரிமார்கள் புரோஹிதர்கள் கிரமமாய் அவரவர்களின் அந்தஸ்துக்குத்தகுந்த ஆஸனங்களில் வரிசைக் கிரமமாய் உட்கார்ந்தனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜாஸனத்திற்கு அடுத்த தாழ்ந்தது யுவராஜனுடைய ஆஸனம். அதற்கு அடுத்த தாழ்ந்ததுதான் மந்திரியின் ஆஸனம். பரதன் மந்திரியின் ஆஸனத்தில் சுயமாகவே உட்கார்ந்ததாய் சொல்லப்பட்டதால் அந்த ஆஸனத்திற்கு மேற்பட்ட ராஜனின் ஆஸனம் யுவராஜனின் ஆஸனம், இவைகளை தன் மூத்தவர்களான ராம லக்ஷ்மணர்களுக்கு ஒதுக்கிவிட்டதாய் ஏற்படுகிறது. யுவராஜாவுக்கும் மந்திரிக்கும் பேதமில்லை என்று சொல்வதற்கில்லை. யுவராஜா வேறு; மந்திரி வேறு. பின்னடி ராகவன் பட்டாபிஷேகமானவுடன் லக்ஷ்மணனை யுவராஜாவாய் பட்டாபிஷேகம் செய்து கொள்ளக்கேட்டதாய் அறிவிக்கப்படுகிறது. மேலும் ஸுக்ரீவன் ராஜாவாய் அமர்ந்திருக்க அங்கதன் யுவராஜாவாகவும் யக்ஷன் ப்ரபாவன் என்ற கபிகள் மந்திரிகளாயும் இருந்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. (கிஷ் 31 சர் 43 சுலோ) இதனால் வால்மீகி யுவராஜ பதவியையும் மந்திரி பதவியையும் பிரித்துச் சொல்பவரென்று ஏற்படுவதால் பரதன் தானாக மந்திரியின் ஆஸனத்தில் அமர்ந்தான் என்று சொன்னதைக்கொண்டு தனக்கு மூத்தவர்களான ராம லக்ஷ்மணர்களுக்கு ராஜாஸனம் யுவராஜாஸனம் இவைகளை ஒதுக்கி இவைகளுக்கு தாழ்ந்ததான மந்திரியின் ஆஸனத்தில்தான் உட்கார்ந்தான் என்று ஏற்பட்டு லக்ஷ்மணனுக்கு பரதன் இளையதம்பி என்பதை அறிவித்ததாய் சித்தமாகிறது. ஆதலால் இந்த வாக்யமும் லக்ஷ்மணர் ஜ்யேஷ்டர் என்பதற்கு ஓர் முக்யமான பிரமாணமாகும்.



(8) பரதன் சித்ர கூடத்தில் ராமலக்ஷ்மணர்களின் வசதியைப் பார்த்து பரிதவித்து தான் இனி செய்யப்போவதை அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் "மத்நிருதே வ்யஸனம் ப்ராப்த: லோகநாதோ மகாத்யுதி:। ஸர்வான்காமான் பரித்யஜ்ய வனே வஸதி ராகவ:॥ இதிலோக ஸமாக்ருஷ்ட: பாதேஷ்வத்ய ப்ரஸாதயன் । ராமஸ்ய நிபதிஷ்யாமி ஸிதாயா: லக்ஷ்மணஸ்ய ச ॥ (அயோ, 99 சர். 16. 17 சுலோ.) எனக்காக லோகநாதனும் மகா காந்தியுடைய ராகவன் எல்லா வகை சுக போகங்களையும் விட்டு கேவலம் வனத்தில் வசிக்கிறார் என்று நான் உலக நிந்தனைக்கு ஆளாயிருக்கிறேன். ஆதலால் அவரை சமாதானம் செய்ய இப்பொழுது ராமச்சந்திரனின் காலில் விழுந்து நமஸ்கரிக்கப்போகிறேன். பிறகு லக்ஷ்மணருடைய காலில் விழுந்து நமஸ்கரிக்கப்போகிறேன் என்று லக்ஷ்மணருக்கு நமஸ்காரம் செய்யப்போவதாய் பரதன் முன்னடியே யோசித்ததாய் வால்மீகி ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார். தனது எண்ணம் நிறைவேற தசரதன் கைகேயிக்கு நமஸ்காரம் செய்வதாய் யோசித்ததுபோல் பரதன் லக்ஷ்மணனை நமஸ்காரம் செய்ய யோசித்திருக்கலாமென்று சொல்வதற்கில்லை. ஒருவனிடமிருந்து ஒரு காரியம் சித்திக்க அவன் தகாதவனாயினும் சங்கடப்படுபவன் சங்கடம் மேலிட்டு அவனைத் தான் வணங்கக்கூடுமேயல்லாது அவனை சமாதானப்படுத்த இதரனை வணங்குவது உலக அனுபவத்திற்கு ஒட்டிய யுக்தியாயில்லை. இதற்குப் பிரமாணமும் இல்லை. இந்த சந்தர்ப்பத்திற்கு முன்னடியும் பின்னடியும் பரதன் லக்ஷ்மணனுக்கு நமஸ்கரித்ததாயும் ஸ்பஷ்டமாய் பிரமாணங்கள் இருந்துவருவதால் பரதன் லக்ஷ்மணனை நமஸ்கரிப்பதாய் எண்ணியது தன் குற்றத்தை மன்னிப்பதற்காக என்பது முற்றிலும் பொருந்தும். ஆதலால் லக்ஷ்மணன் பரதனைவிட மூத்தவன் என்பதற்கு இந்த சுலோகமும் சரியான பிரமாணமேயாகும்.

(9) இதே பிரகரணத்திலேயே சித்ரகூடத்தில் அண்ணன் தம்பிகள் சேர்ந்திருந்தனர் என்று சொல்லும்பொழுது "ஸ ராகவ: ஸத்யத்ருதிஸ்ச லக்ஷ்மணோ மகானுபாவோ பரதஸ்ச தார்மிக:। வ்ருதா: ஸுஹ்ருத்பிஸ்ச விரேஜுரத்வரே யதா ஸதஸ்யை ஸஹிதா: த்ரயோக்னய:॥" (அயோ. 103 சர். 32 சுலோ.) யக்ஞத்தில் எப்படி சபையிலுள்ளவர்களுடன் ஆஹவனீயம், கார்ஹபத்யம், தக்ஷிணம் என்னும் மூன்று அக்னிகள் விளங்குமோ அப்படி சித்ரகூடத்தில் பந்துக்களுடன் சேர்ந்து ராமன், லக்ஷ்மணன், பரதன் ஆகிய மூவர்களும் பிரகாசித்தனர் என்று ராமாதிகள் மூவர்களின் பெயரை அண்ணன் தம்பி வரிசையாய் வால்மீகி கூறியிருக்கிறார். இதனால் லக்ஷ்மணன் பரதனுக்கு

மூத்தவனென்பதை வால்மீகி ஒப்புக்கொண்டிருப்பதாய் ஏற்பட்டு இந்த சுலோகமும் பிரமாணமாகிறது.

(10) ஸுந்தர காண்டத்தில் ஹனுமார் ஸீதையைக் காணாமல் பலவாறு யோசிக்கும்பொழுது ஸீதையை தான் காணவில்லை என்று சொன்னால் ராகவன் பிராணனை விட்டுவிடுவார். அவர் இறக்கப்போவது தெரிந்தால் லக்ஷ்மணன் இறந்துவிடுவான். 'விநஷ்டௌ ப்ராதரௌ ச்ருத்வா பரதோபி மரிஷ்யதி 1 பரதம்ச ம்ருதம் த்ருஷ்ட்வா சத்ருக்னோ ந பவிஷ்யதி II'' (சுந். 13 சர். 25—26 சுலோ.) இரண்டு அண்ணன்மார்களும் இறந்ததாய் தெரிந்தால் பரதன் இறந்துவிடுவான். பரதன் இறந்ததாய் தெரிந்தால் சத்ருக்னன் இறந்துவிடுவான் என்று ஹனுமார் ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் என்று அண்ணன் தம்பிகளின் பெயரை கிரமமாக அறிவித்திருக்கிறார். முன் சுலோகத்தில் சொன்ன வரிசை இந்த சுலோகத்திலும் தாங்கி பேசியிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டியதாகும். ஆதலால் லக்ஷ்மணன் ஜேஷ்டனென்பதற்கு இந்த சுலோகமும் பிரமாணமே.

(11) ஸீதையின் பிரலாபத்தை சொல்லும்பொழுது "நாஜாநாத் ஜீவதீம் ராம: ஸ மாம் லக்ஷ்மண பூர்வஜ: II (சுந். 26 சர். 39 சுலோ.) நான் இன்னமும் உயிருடன் இருப்பதை அந்த லக்ஷ்மணனுக்கு அடுத்த முன்னடி பிறந்த ராகவன் அறியமாட்டாரென்றும்,

(12) 'நூநம் மமைவ சோகேன ஸவீரோ லக்ஷ்மணாக்ரஜ: II தேவலோகமிதோயாத: த்யக்த்வா தேகம் மஹீதலே'' (சுந். 26 சர். 46 சுலோ.) லக்ஷ்மணனுக்கு அடுத்த முன்னடி பிறந்த வீரரான அந்த ராகவன் என்னுடைய துக்கத்தால் தன் சரீரத்தை பூமியில் விட்டு ஸ்வர்க்கம் சென்றிருப்பார் என்றும் அடுத்தடுத்த இரண்டு சுலோகங்களில் லக்ஷ்மணன் ராமனுக்கு அடுத்த தம்பி என்பதை வால்மீகி ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார்.

(13) இதே ப்ரகரணத்தில் 'யத்ரார்யபுத்ரம் விஸஸர்ஜ மூடா ராமானுஜம் லக்ஷ்மண பூர்வஜம் ச'' (சுந். 18 சர். 10 சுலோ.) நான் புத்தியிழந்து ராகவனையும் லக்ஷ்மணனையும் ஆசிரமம் விட்டு தூர அனுப்பித்தேனே என்று ஸீதை வருந்தியதாய் அறிவித்திருக்கிறார். இந்த ஒரே சுலோகத்தில் ஒரே பாதத்தில் ராம லக்ஷ்மணர்களை இன்றொன்று வர்ணித்திருப்பது நன்றாய் கவனிக்கத்தக்கது. 'லக்ஷ்மணன் என்று அறிவிக்க ராமானுஜன் அதாவது ராமனுக்கு அடுத்து பின்னடி பிறந்தவன் என்றும், ராமன் என்று அறிவிக்க லக்ஷ்மணபூர்வஜன் லக்ஷ்மணனுக்கு அடுத்து முன்னடி பிறந்தவன் என்றும் அழுத்தமாய் அறிவித்திருக்கிறார். இதைவிட வால்மீகி எப்படித்தான் ஸ்பஷ்டமாய் அறிவிக்கமுடியுமென்பதை வாசகர்கள் கண்டுகொள்வார்களாக. ஆதலால் இந்த சுலோகமும் லக்ஷ்மணன் ஜேஷ்டனென்பதற்கு ஸ்பஷ்டமான பிரமாணமாகும்.

(தொடரும்)



ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

ஸ்ரீம. வே. பாகவத ரங்கனாதசாரியாரின் மொழிபெயர்ப்பு.

(முன் 265ம் பக்கம் தொடர்ச்சி.)

## இருபத்தி எட்டாவது அத்தியாயம்.

### அசுவத்தாமா செய்த ராத்திரி படுகொலை.

அந்த அசுவத்தாமாசாரியார் ரதத்தில் ஏறிக்கொண்டு கிருபர் கிருதவாமாவுடன் சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ணர் பீமார்ஜுனர்களின் பயத்தாலேயே மறுபடியும் பயங்கரமான வனத்தை பிரவேசம் செய்தார். துரோணாசாரியாரின் சம்ஹாரத்தையும் துரியோதனனின் வதத்தையும் சிந்தித்துக்கொண்டிருக்கும் அசுவத்தாமாவுக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை. பாதி ராத்திரி வேளையில் மகா பலம் கொண்ட ஒரு கோட்டான் ஆல மரத்தில் உறங்கிக்கொண்டிருந்த அநேக ஆயிரம் காகங்களைக் கொன்றதைப்பார்த்து அசுவத்தாமாசாரியார் கிருப கிருதவர்மாவிடம் இவ்வாறு சொன்னார். இந்த கோட்டான் காகங்களின் திருஷ்டாந்தத்தைக் கொண்டு பகவான் என்னை யுத்தத்திற்கு போகும்படி பிரேரிபித்தார். நான் பாண்டவர்களைக் கொல்லச் செல்கிறேன் என்று ரதத்தின்மீது ஏறினார். கிருபாசாரியாரும் கிருதவர்மாவும் இது அக்ரமம் இப்பொழுது செல்லாதே என்று தடுத்தபோதிலும் அசுவத்தாமா பாண்டவர்களின் டேராவுக்குச் சென்றார். கிருபாசாரியாரும் கிருதவர்மாவும் அசுவத்தாமாவின் பின்சென்றார்கள். முன்னடி சென்ற அசுவத்தாமா பாண்டவர்களின் டேராவின் வாசலில் க்ரூரமான ரூபத்தை தரித்திருக்கும் தன் ரூபமாயும் அநேக கோடி கிருஷ்ண ரூபங்களால் சூழப்பட்டிருப்பதுமாயுள்ள ருத்திரனைக் கண்டார். கிருபீ தேவியின் மகனான அசுவத்தாமா கிருஷ்ணரைக் கண்டு பயந்தார். பாண்டவர்களின் டேரா வாசலில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆக்ஞையால்தான் சதாசிவனான ருத்திரன் தன் ஸ்வரூபமாயுள்ள அசுவத்தாமாவுடன் யுத்தம் செய்தார். அசுவத்தாமா பிரயோகம்

செய்த எல்லா ஆயுதங்களையும் விழுங்கினார். விஷ்ணுவின் சக்தி எண்ண முடியாததால் உலகில் ஜனங்கள் தம்மைத்தாமே கொல்பவர்களாய் காணப்படுகின்றனர். சிந்திக்க முடியாததாயுள்ள விஷ்ணுவின் சக்தியால் பிரேரிபிக்கப்பட்ட தன் ஸ்வரூபமாயுள்ள பரமசிவன் தன் எல்லா ஆயுதங்களையும் விழுங்கிவிடவும் அசுவத்தாமா தன் அந்தர்யாமியான விஷ்ணுவின் ப்ரீதியின் பொருட்டு தன்னை யக்ஞபசுவாய்ச்செய்துகொண்டு மானஸயக்ஞத்தைச்செய்தார். இந்த யக்ஞத்தால் சந்தோஷமடைந்த விஷ்ணுவால் பிரேரிபிக்கப்பட்ட பரமசிவன் தன் ஸ்வரூபனான அசுவத்தாமாவிடம் அவர் விழுங்கிய எல்லா ஆயுதங்களையும் திருப்பிக்கொடுத்தார். அப்பொழுது சதாசிவன் இவ்வாறு சொன்னார். ஸமர்த்தரான விஷ்ணுவால் ஆக்ஞாபிக்கப்பட்டவனாய் இவ்வளவு காலம் வரையில் பாண்டவர்களின் சேனையை சம்ரக்ஷித்து வந்தேன். பகவானுடைய இச்சையால் தூண்டப்பட்டவனாய் இப்பொழுது உனக்கு வழியையும், உறங்கிக்கொண்டிருக்கும் எல்லா ஜனங்களைக்கொல்ல எல்லா ஆயுதங்களையும் கொடுத்திருக்கிறேன். என்று விருஷபத்வஜரான பரமசிவன் அசுவத்தாமாவிடம் சொல்லி எல்லா ஆயுதங்களையும் கொடுத்து சீக்கிரமே அங்கு மறைந்தார். அசுவத்தாமா கிருபாசாரியாரையும் கிருதவர்மாவையும் பார்த்து சேனையைவிட்டு யார் வெளியே வருகிறார்களோ அவர்கள் எல்லோரையும் நீங்கள் இருவர்கள் கொல்லுங்கள் என்று சொல்லி, தனுஸ்ஸையும் கத்தியையும் தரித்தவராய் யமனைப்போல் சேனாவுக்குள் பிரவேசித்தார். அப்பொழுது அவர் அங்கு படுத்திருக்கும் புராவின் வர்ணம் போலுள்ள ரதக் குதிரைகளுள்ள திருஷ்டத்யும்னனிடம் வந்து அவனுடைய மார்பில் காலால் உதைத்தார். திருஷ்டத்யும்னனும் தூக்கத்தைவிட்டு விழித்துப் பேசினான். நீ குரு புத்ரன் அசுவத்தாமாவென்று தெரிந்துகொண்டேன். நான் எழுந்து கையில் ஆயுதங்களை தரித்தபின் என்னை ஆயுதத்தால் கொல், நீ வீரன். ஆயுதம் பிடித்தவனைக் கொல்வதுதான் வீரனுடைய தர்மமாகும். ஆயுதத்தால் இறந்தவர்களுக்கு எந்த புனிதமான லோகங்கள் உண்டோ அவைகள் எனக்கும் வரட்டும் என்று சொன்ன திருஷ்டத்யும்னனைப்பார்த்து அசுவத்தாமா கோபத்துடன் இவ்வாறு பேசினான். மகா பாபியே! பிராம்மணனைக் கொன்றவர்களுக்கு



நல்ல லோகங்களில்லை, குருஹத்தி செய்தவர்களுக்கு நல்லலோகங்களில்லை என்று சொல்லவும் வேண்டுமோ. உன்னைப்போன்ற மகாபாபிகள் தர்மயுத்தத்தால் கொல்லப்பட அருகர்களாகமாட்டார்களென்று சொன்னார். திருஷ்டத்யும்னன் இதைக்கேட்டு தன் மரணம் இச்சமயம் அவசியம் ஏற்படத்தகுந்ததுதானென்று சும்மாயிருந்துவிட்டான். ஸ்வப்னத்தில் அசுவத்தாமாவால் தினமும் தன் மரணத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். துரோணாசாரியாரின் மரணத்தின்பின் த்ருஷ்டத்யும்னன் ஸ்வப்னத்தில் அசுவத்தாமா கொல்வதாகவும் காளராத்ரி என்ற பெயருள்ள ம்ருத்யு தேவதை தன்னை இழுத்துப் போவதாயும் பார்த்தான். அசுவத்தாமா த்ருஷ்டத்யும்னனின் கழுத்தில் தனுஸ்ஸின் நாண்கயிற்றை மாட்டினார். அவனுடைய மார்பில் உட்கார்ந்து அவனுடைய கழுத்தை கட்டி அந்த கயிற்றால் கடைந்தார். அக்னியின் அம்சமான த்ருஷ்டத்யும்னன் உயிர் துறந்து தன் சரீரத்தைவிட்டு தன் ஸ்தானத்திற்குச் சென்றான். பிறகு சிகண்டியையும் யுதாமன்யு உத்தமௌஜஸ்ஸு ஜனமேஜயன் இவர்களையும் அசுவத்தாமா கொன்று அசுவத்தாமா கோபத்துடன் ஜொலித்துக்கொண்டு திரௌபதி குமாரர்களிடம் சென்றார். படுக்கையை விட்டெழுந்த திரௌபதி குமாரர்களின் பாணங்களால் அடிவிழுந்த அசுவத்தாமா கத்தியால் திரௌபதி புத்ரர்கள் ஐந்துபேர்களையும் வலது புரம் இடது புரமாய் கத்தியை வீசி சம்ஹாரம் செய்தார். அப்படியே பீமசேனரின் பிள்ளையாயும் காசி ராஜனின் பெண்ணான காளி தேவியிடம் பிறந்தவனுமான சர்வத்ராதா என்பவனைத் தவிர, மற்ற பாண்டவர்களின் பிள்ளைகள் எல்லோரையும் அசுவத்தாமா ஸம்ஹாரம் செய்தார். அசுவத்தாமா சேனாவுக்குள் பிரவேசித்த சமயத்தில் பரமசிவன் ஒருவர் கண்ணுக்கும் படாமல் உள்ளேவந்து காளியிடம் பீமசேனருக்கு பிறந்த மகனை அக்ஷணமே கைலாஸத்திற்கு அழைத்துப்போனார். ஆதலால் அந்த பீமசேனரின் மகனுக்கு சர்வத்ராதா என்று ருத்திரனால் அவன் சம்ரக்ஷிக்கப்பட்டதால் பெயர் ஏற்பட்டது. அந்த சர்வத்ராதன் கைலாஸத்திலேயே வசித்து வந்தான். முன்பு காசி ராஜன் தன் தௌஹித்ரனுக்கு மரணம் ஏற்படாமல் செய்யவேண்டுமென்று பரமசிவனை பிரார்த்தித்தான். ஆகையால் பரமசிவன் கருணைகொண்டு

இந்த பீமசேனரின் மகனை ஸம்ரக்ஷித்தார். அபிமன்யுவின் மகனை பரீக்ஷித் ராஜனுக்கு சக்கரவர்த்தி பதவியைத் தரவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணரின் அபிப்பிராயம் இருப்பதாய் தெரிந்துகொண்டு, பரமசிவன் பீமசேனரின் பிள்ளையை பூலோகத்திற்கு செல்லாதே என்று தடுத்தார். அசுவத்தாமா பாண்டவ ஸந்ததி நாசமடையட்டுமென்று பிரம்மசிரோ அஸ்திரத்தை சாமான்யமாய் எண்ணினார். அசுவத்தாமாவின் ஸ்வரூபமான பரமசிவன் இந்த சர்வத்ராதனைத் தவிர மற்ற பாண்டவ சந்ததியை இந்த அஸ்தரம் நாசமாக்கட்டும் என்று யோசித்தார். அசுவத்தாமனும் பரமசிவனும் ஒன்று ஆதலால் அசுவத்தாமா பிரயோகம் செய்த பிரம்மசிரோ அஸ்திரம் சர்வத்ராதனை ஸம்ஹாரம் செய்யவில்லை. அசுவத்தாமா சேகிதான ராஜன் முதலான மற்ற எல்லோர்களையும் ஸம்ஹாரம் செய்தார். வீரரான அசுவத்தாமா சேதி ராஜர்கள் பாஞ்சாலராஜர்கள் கரூச ராஜர்கள் காசிராஜர்கள் இவர்களைச்சேர்ந்த மற்ற எல்லோரையும் ஸம்ஹாரம் செய்து சிசுக்களையும் ஸ்திரீ ஜனங்களையும் கொல்வதற்காக கடூர சித்தமுள்ளவராய் பாண்டவர்களின் டேராவுக்கு சுற்றிலும் நெருப்பு வைத்தார். பிழைக்க ஆசைப்பட்டு டேராவிலிருந்து ஓடும் ஜனங்களை கிருபாசாரியாரும் கிருதவர்மாவும் டேராவின் வாசலிலிருந்துகொண்டு எல்லா இடத்திலும் கொன்று வந்தார்கள். த்ருஷ்டத்யும்னனின் சாரதி ஒருவன் மட்டில்தெய்வயிச்சையால் உயிர்துறக்காமல் தப்பினான். கிருதவர்மா பிரஹாரம் செய்ததைப்பார்த்து த்ருஷ்டத்யும்னனின் ஸாரதி அவனுக்கு கத்தியால் பிரஹாரம் விழுவதற்கு முன்னாடியே பூமியில் விழுந்துவிட்டான். இருட்டாய் இருந்ததால் இவன் விழுந்தது கிருதவர்மாவுக்கு தெரியவில்லை. கிருதவர்மா மற்றொருவனைக் கொல்வதில் ஈடுபட்டிருக்கையில் அந்த த்ருஷ்டத்யும்னனின் சாரதி மெதுவாய் எழுந்து துரௌபதி வசிக்கும் உபப்லாவ்ய நகரத்திற்கு ஓடிப்போனான். அவள் எதிரில் அவளுடைய ஐந்து குமாரர்களையும் அசுவத்தாமா கொன்ற விருத்தாந்தத்தைச் சொன்னான். துரௌபதி துக்கப்பட்டு தன் புத்திரர்கள் வதம் செய்யப்பட்ட சமாசாரத்தை பீமசேனரிடம் சொன்னாள்,



பீமசேனர் ரதத்தில் ஏறிக்கொண்டு தனுர்தாரியாய் அசுவத்தாமாவை துரத்தினார். பீமசேனர் வருவதற்குள்ளாக அசுவத்தாமா சந்தோஷமுள்ளவராய் துரௌபதி பிள்ளைகளின் தலைகளை எடுத்துக்கொண்டு கிருபர் கிருதவர்மாவுடன் போய் சாகுந்தருவாயிலிருந்த துரியோதனனிடம் சேர்ந்தார். பாபியான துரியோதனன் துரௌபதி பிள்ளைகளின் சிரஸ்ஸுகளைப் பார்த்து அசுவத்தாமா சொன்ன வார்த்தையைக்கேட்டு ஸந்தோஷம் அடைந்து நல்ல காரியம் செய்தாய் என்று அசுவத்தாமனைவப் பார்த்து சொல்லி சரீரம் விட்டான். பிறகு அசுவத்தாமா கிருபர் கிருதவர்மா இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணர் பீமசேனன் அர்ஜுனன் இவர்களால் பயந்தவர்களாய் சீக்கிரமே தனித்தனியே பிரயாணம் செய்தார்கள். ஸௌதிகபர்வதத்தின் கதை முடிந்தது.

## அசுவத்தாமாவின் பிரம்மசிரோஸ்திரம்.

அம்மூவர்களில ஒருவராய் ரதத்தில் ஏறிக்கொண்டுபோகும் அசுவத்தாமாவை பீமசேனர் ரதத்தில் ஏறிக்கொண்டு பின்னாடி துரத்தினார். பின்னாடிவரும் பீமசேனரைப்பார்த்து பயந்தவரான அசுவத்தாமா மிக்க வேகமுள்ள குதிரைகளுடன் ஓடினார். மீண்டும் ஓடிவரும் பீமசேனரைப் பார்த்து அசுவத்தாமா கோபத்துடன் திரும்பி வந்து யுத்தம் செய்து தோல்வியடைந்து பிரம்மசிரோஸ்திரத்தை எடுத்தார். இச்சமயம் ஸ்ரீ கிருஷ்ணர் பிரம்மசிரோஸ்திரத்தையும் பீமசேனரையும் அமோகமாய் செய்பவராய் தர்மபுத்திரருடனும் அர்ஜுனனுடனும் சேர்ந்து அசுவத்தாமா விருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தார். பீமசேனர் கொல்லமுடியாதவரென்றும் பிரம்மசிரோஸ்திரம் வீணன்று என்றும் இவ்விரண்டையும் விஷ்ணுதான் ஸங்கல்பித்திருக்கிறார், பிரம்மாஸ்திரத்தில் காயத்ரி மந்திரம் மந்திரமாகும். அங்கு த்யானம் செய்யும் தேவதை அதாவது த்யான தேவதை ப்ரம்மா. ஜகத்தை உற்பத்திசெய்யும் நாராயணன் இந்த காயத்ரி மந்திரத்தால் த்யானம்செய்யப்படும் தேவதை அதாவது த்யேய தேவதை. ஆகவே இந்த பிரம்மாஸ்திரம் பீமசேனரால் அபிமானிக்கப்பட்ட அஸ்திரமாகும். இதனால் பீமசேனரைக்கொல்ல முடியாது. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் முன்பு அசுவத்தாமா செய்த காரியத்தை தர்மபக்

கிரரிடமும் அர்ஜுனனிடமும் இவ்வாறு சொன்னார். இந்த அசுவத்தாமா த்வாரகைக்கு வந்திருந்தான். நான் ஸமுத்ரக் கரையில் உட்கார்ந்து என்னுடைய மேலான ஸ்வரூபத்தை தியானம் செய்து கொண்டிருக்கும்பொழுது என் ஆயுதங்கள் தனக்கு வேண்டுமென்று கேட்டான். அவைகளை எடுத்துக்கொள் என்று நான் சொன்னேன். அவைகளை எடுத்துத் தூக்கவும் அவனால் முடியவில்லை. ஏன் இந்த ஆயுதங்களை யாசித்தாய் என்று அப்பொழுது அசுவத்தாமாவைக் கேட்டேன். அதற்கு அசுவத்தாமா பதில் சொன்னதாவது. ஹே கிருஷ்ணா! உன் சக்ராயுதத்தால் உன்னையே கொன்று துரியோதனனுக்கு ஸம்பூர்ண பூமியைக் கொடுக்க உத்தேசங்கொண்டு உன்னைக்கேட்டேன் என்றான். இனி இப்பேர்ப்பட்ட அக்கிரமம் செய்யாதே என்று நான் சொன்னேன் என்றார். பூமியில் பாண்டவர்களின் சந்ததியை நாசம் செய்யும் அபிப்பிராயத்தால் அசுவத்தாமா பிரயோகம் செய்த விசேஷமாய் ஜொலிக்கும் பிரம்மசிரோ அஸ்திரத்தைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணரால் தூண்டப்பட்ட அர்ஜுனன் துரோண புத்ரனை அசுவத்தாமாவுக்குக்ஷேமமுண்டாகட்டும். பிராணிகளுக்கும் எனக்கும் க்ஷேமமுண்டாகட்டும், என்று சொல்லிக்கொண்டு பிரம்மாஸ்திரத்தை நிவிருத்திசெய்ய தன்னிடமுள்ள பிரம்மாஸ்திரத்தையே பிரயோகம் செய்தான். அந்த பிரம்மாஸ்திரத்தை அறியாதவர்களிடம் பிரயோகம் செய்தால் அது பிரயோகம் செய்தவனையே கொல்லும். ஆகையால் இந்த அஸ்திரம் அறியாத தர்மபுத்திரர் முதலானவர்களிடம் பிரயோகம் செய்த அசுவத்தாமாவுக்கு க்ஷேமமுண்டாகட்டும் என்று குருவிடம் பக்தியை அடைந்து அர்ஜுனன் அவ்வாறு சொன்னான். இந்த இரண்டு பிரம்மாஸ்திரங்களும் சேர்ந்துவிட்டால் பிராணிகளுக்கு நாசம் ஏற்படுமென்று பயத்தால் தயாளுவான அர்ஜுனன் பிராணிகளுக்கும் க்ஷேமமுண்டாகட்டும் என்று அஸ்திர ப்ரயோகம் செய்த காலத்தில் அபேக்ஷித்தான். எப்படி அபேக்ஷித்தாலும்கூட அந்த இரண்டு அஸ்திரங்களும் சேர்ந்து பிராணிகளை நிச்சயமாய்க் கொல்லும். ஆகவே அந்த அஸ்திரங்களின் சம்பந்தத்தை தடுப்பதற்காக அந்த அஸ்திரங்களின் நடுவில் எல்லை இல்லாத சக்தியைக்கொண்டவரும் உத்தமரும் ஸத்யவதி குமாரருமான ஸ்ரீ வேதவியாஸர் அக்ஷ



ணமே வந்து நின்றார். புருஷோத்தமனான ஸ்ரீ வேதவியாஸர் அவ்விரண்டு அஸ்திரங்களையும் தூரத்திலேயே நிறுத்தி, ஹே! அசுவத்தாமா! அர்ஜுனா! முற்காலத்திலிந்த அஸ்திரம் அறிந்தவர்களிருந்தனர். அவர்கள் உலகமழியும்காரியத்தை அநேகமாய்செய்யவில்லை. ஸாது ஜனங்கள் எந்த ஆபத் காலத்திலேயும் இப்பேர்ப்பட்ட நாசகரமான காரியத்தை எப்படிச்செய்வார்கள்? என்று சொன்னார். நான் மகா ஆபத் காலத்தில்தான் அசுவத்தாமா பிரயோகம் செய்த அஸ்திரத்தை அணைப்பதற்காக இந்த அஸ்திரத்தை பிரயோகம் செய்தேன். ஆகையால் விபுவே! நீங்கள் க்ஷமிக்கவேண்டுமென்று அர்ஜுனன் சொன்னான். நீங்கள் போட்ட அஸ்திரங்களை நீங்களே எடுத்து விடுங்கள் என்று வியாஸர் சொன்னார். அர்ஜுனன் தான் போட்ட பிரம்மசிரோ அஸ்திரத்தை உபஸம்ஹாரம் செய்தான். தான் போட்டிருக்கும் பிரம்மசிரோ அஸ்திரத்தை எடுக்க சக்தியில்லாத அசுவத்தாமாவைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். அர்ஜுனன் பால்யம் முதற்கொண்டு க்ஷத்திரிய தேஜஸ்ஸுடன் கூடியவன். தன் பத்னியிடம் ருது காலத்தில் புணர்தலாகிய பிரம்மசரியத்தோடு கூடியவன். ஆகையால் பிரம்மசிரோ அஸ்திரத்தை திருப்பி எடுக்கசக்தனானான். அசுவத்தாமா துரோணரின் பிள்ளையானாலும் துரியோதனனின் பத்னியிடம் பிள்ளையை உண்டாக்குகிறேன் என்று ப்ரதிக்ஞையை செய்ததால் பிரம்மசரியம் இல்லாமற் போனான். ஆகையால் அவன் போட்ட பிரம்மாஸ்திரத்தை திருப்பி எடுக்க சக்தனன்று, என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லவும் ஸ்ரீவியாஸர் அசுவத்தாமாவைப் பார்த்து சொன்னார். அஸ்திரத்தை திருப்பிப்பெற அஸமர்த்தனான நீ அஸ்திர ப்ரயோகம் செய்யும் முன்பே பீமசேனனால் தோல்வியடைந்தபடியால் பீமசேனனுக்கு மகா காந்தியுள்ள உன்னுடன் இயற்கையாகவே பிறந்ததான உன் தலையிலுள்ள மாணிக்கத்தைக் கொடு. வெறும் வார்த்தையாலே பாண்டவர்களிடம்போட்ட அஸ்திரத்தை எடுத்துவிடு. என்று இவ்வாறு ஸ்ரீ வியாஸரால் சொல்லப்பட்ட அசுவத்தாமா ஜராமரணத்தை போக்கடிப்பதாயும் பசிதாகம் சிரமங்களை போக்கடிப்ப[illegible] விலக்ஷணமாயும் துர்நாற்றத்தையும் இருட்[illegible]கரமான தாயும் தன் தலையிலே [illegible]றந்ததாயுமுள்ள [illegible]க்கத்தைப்

208171

பிடுங்கி பீமசேனரிடம் கொடுத்தார். ஐந்து பாண்டவர்களும் அஸ்திரத்தால் விடுபட்டார்கள் என்று வாயால் சொன்னார். பிறகு வேதநாயகரான ஸ்ரீ வேதவியாஸர் ஹே அர்ஜுனா! அசுவத்தாமா பிரயோகம் செய்த பிரம்மசிரோஸ்திரத்தை நீயே உபஸம்ஹாரம் செய் என்று அர்ஜுனனைப் பார்த்து சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட அர்ஜுனன் ஸ்ரீ வியாஸரை நமஸ்கரித்து அசுவத்தாமாவின் பிரம்மசிரோஸ்திரத்தை சீக்கிரம் நிவிருத்தி செய்தான்.

## ' அசுவத்தாமாவுக்கு சாபம்.

பிறகு யாதவர்களின் அதிபதியான ஸ்ரீ கிருஷ்ணர் கிருபி தேவியின் மகனான அசுவத்தாமாசாரியாரைப்பார்த்து பாண்டவர்களின் ஒரே சந்ததியாக இருந்துவரும் உத்தரா தேவியின் கர்ப்பத்தில் நீ போட்டிருக்கும் ப்ரம்மசிரோ அஸ்திரத்தை கேவலம் உன் வார்த்தையால் நிவிருத்தி செய் என்றார். இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லவும் அசுவத்தாமா சொன்னார். ஹே கிருஷ்ணா! கேவலம் பக்ஷபாதம்கொண்டு உன் தங்கை மகனான அபிமன்யுவின் சந்தானத்தை நீ விரும்புகிறாய். நான் உத்தரா தேவியின் கர்ப்பத்தை அழித்துப்போட அபிமன்யுவின் சந்தானத்திலேயே அஸ்திரத்தைப் போடுகிறேன் என்றார். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் மீண்டும் சொன்னார். நீ அந்த கர்ப்பத்தை நாசம் செய்யவேண்டுமானால் இந்த உத்தரையின் கர்ப்பத்தில் அஸ்திரத்தைப் போடாதே. மானங்கெட்டவனே! இறந்துபோன அபிமன்யுவின் சரீரத்தில் உன் அஸ்திரத்தைப்போடுகிறதுதானே. நீ அந்த அஸ்திரத்தால் அந்த கர்ப்பத்தை நாசம் செய்தாலும் நான் அதை உயிர்ப்பிக்கிறேன் என்றார். அதற்கு அசுவத்தாமா நான் உத்தரையின் கர்ப்பத்தில்தான் அஸ்திரத்தைப் போடுகிறேன் என்றார். பிறகு பிரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் அசுவத்தாமா தன் பக்தன் ஆகலால் அவரிடம் சிறிது கோபங்கொண்டவர்போல் காட்டிக்கொண்டு பேசினார். ஹே துர்புத்தி பிடித்த அசுவத்தாமாவே! என் சாமர்த்தியத்தைப்பார். உன்னால் என்ன செய்ய முடியுமோ அவைகளை எல்லாம் செய்து பார். உன் சக்தியைக் கொண்டு நீ அதைக்கொல்ல எத்தனம் செய்தாலும் நான் அந்த



கர்ப்பத்திற்கு உயிர் தருகிறேன். பாண்டவர்களின் வம்சம் பூமியில் ஆயிரம் வருஷம் இருக்கப்போகிறது. என்னால் சம்ரக்ஷிக்கப்பட்ட பாண்டவர்களின் சந்ததியை அதுவரையிலும் கொல்ல யாரும் எந்த இடத்திலேயும் சக்தர்கள் ஆகப்போவதில்லை. பாண்டவர்களின் சந்தானத்தை நாசமாக்க விருப்பங்கொண்டவனும் மறுபடியும் உண்டாக்க முடியாததான துரியோதனனின் சந்தானத்தை உண்டாக்க விருப்பங்கொண்டவனுமான உன் துரெண்ணத்தை நான் அறிவேன். விஷ்ணு பக்தி இல்லாதவனுக்கு மோக்ஷம் வேண்டுமென்ற ஆசை எவ்வாறு நிஷ்பலமோ அவ்வாறுதான் உன்னுடைய விருப்பம் என் ஆக்ஞையால் நிஷ்பலமாகப் போகிறது, நீ எனது விருப்பத்திற்கு விரோதம் செய்ததால் உனக்கு இனி மனுஷ்யர்கள் சஞ்சரிக்கும் பூப்பிரதேசம் உன்னால் போகமுடியாததாய் ஆகட்டும். பாண்டவர்களின் வம்சம் பூமியில் இருக்குமளவும் நீ துர்நாற்றம் உள்ளவனாயும் விரணங்களுள்ள தேகமுள்ளவனாயும் துர்பலனாயும் எப்பொழுதும் வனத்திலேயே சஞ்சரித்துவா என்றார். ஸ்ரீ வேதவியாஸரும் அப்படியே ஆகட்டும் என்று அசுவத்தாமாவைப் பார்த்துச் சொன்னார். பகவானுடைய இரண்டு ரூபங்களாலும் இவ்வாறு சொல்லப்பட்ட அசுவத்தாமா காளீ புத்ரனான வேதவியாஸரை இவ்வாறு பிரார்த்தித்தார். விபுவே! எனக்கு தங்களுடன் சேர்க்கை என் இஷ்டப்படி எனக்கு ஏற்படவேண்டும். இதில் சிறிதும் எனக்கு தடை கூடாது என்றார். இப்படி அசுவத்தாமாவால் கேட்டுக்கொண்ட பகவான் வேதவியாஸர் அப்படியே ஆகட்டுமென்றார்.

பிறகு அசுவத்தாமா ஸ்ரீ வேதவியாஸரை நமஸ்கரித்து ஸ்வப்னத்தில் கண்ட விருத்தாந்தத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு வனத்திற்கு பிரயாணம் செய்தார். ஸ்வப்னத்தில் துரௌபதி குமாரர்களை தான் இராத்திரி காலத்தில் கொன்றதாய்க்கண்டார். அர்ஜுனன் துரௌபதியின் எதிரில் அசுவத்தாமாவைக் கொல்வதாய் சபதம் செய்ததும் அர்ஜுனன் தன்னை கயிற்றால்கட்டி டேருவுக்கு தூக்கிக்கொண்டுபோனதும் துரௌபதி அவரை அவிழ்த்துவிடும்படி சொன்னதும் *பீமசேனர் அவிழ்த்துவிட வேண்டாம் என்று தடுத்ததும் ஸ்ரீகிருஷ்ணரின் வார்த்தையால் தன் தலையிலுள்ள மாணிக்யத்தை அபஹாரம்செய்து தேசப்ரஷ்ட

னாய் தூரத்தினாலும் இவை முதலான ஸ்வப்னத்தில்கண்ட விருத்தாந்தமெல்லாம் அநேகமாய் வாஸ்தவமாயிற்று என்று பகவானை த்யானம்செய்துகொண்டு, ஆயுதம் பிடிப்பவர்களில் சிரேஷ்டனான அசுவத்தாமா வனத்திற்கு பிரயாணம் செய்தார். அவர் ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னபடி துர்காற்றம் முதலான சங்கடத்தை அடைந்து ஸ்ரீ வியாஸரின் சிஷ்யத்தன்மையைப்பெற்று இனி வரப்போகும் த்வாபர யுகத்தில் வேதங்களை விபாகம் செய்யப்போகிறார். பிறகு ஸ்ரீ வேதவியாஸரின் அனுக்ரஹத்தால் இனி வரப்போகும் மன்வந்தரத்தில் ஸப்த ரிஷிகளில் ஒருவராகி விஷ்ணு பக்தியிலுள்ள உறுதியால் தன் ஸ்வரூபனான சிவனுடைய ஐக்யத்தை அடையப்போகிறார். பிறகு கிருபாசாரியார் பாண்டவர்களிடம் வந்து கௌரவத்துடன் அவர்களால் பூஜிக்கப்பட்டவராய் பாண்டவர்களின் வம்சத்தில் ஜனிக்கப்போகும் க்ஷேமகாந்தன் வரையிலுள்ள ராஜர்களுக்கு ஆசாரியனாக அமர்ந்தார். பிறகு அவர் ஸ்ரீவியாஸரின் சிஷ்யத்தன்மையை அடைந்து அவரை ஆராதித்துக்கொண்டு பிறகு அவருடைய சகோதரியின் பிள்ளையான அசுவத்தாமாவுடன் சேர்ந்து இனி வரப்போகும் மன்வந்தரத்தில் ஸப்த ரிஷிகளில் ஓர் ரிஷியாக ஆகப்போகிறார். கிருதவர்மா ஸ்ரீ கிருஷ்ணரின் அனுமதியைப்பெற்று த்வாரகைக்கு போய் சேர்ந்தான். பீமசேனர் அந்த அசுவத்தாமாவின் சிரோமாணிக்யத்தை த்ரௌபதிக்கு கொடுத்து அவளை சமாதானம் செய்தார். பீமசேனரின் வார்த்தையால் த்ரௌபதி தன் பிள்ளைகளை வதம் செய்த கோபமில்லாதவளாய் அந்த சிரோமணியை தர்மராஜனுக் கொடுத்தாள். ராஜ யோக்யமான இந்த சிரோமணியை பீமசேனர் எனக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் சாமானியர்கள் பீமசேனருக்கு ஸ்திரீ பக்ஷபாதமுண்டு என்று சந்தேகிப்பார்கள். அவ்வாறு சந்தேகம் சம்பவிக்கக்கூடாது என்று பீமசேனரின் பிரியஹிதத்தில் ஈடுபட்டவளாய் த்ரௌபதி அந்த சிரோமணியை தர்மபுத்திரருக்கே கொடுத்தாள். தர்மபுத்திரர் அந்த சிரோமாணிக்கத்தை தன் சிரஸ்ஸில் தரித்து கிரணங்களுக்கு ஆசனான ஸூர்யனைப்போல் பிரகாசித்தார். இத்துடன் ஐஷிக பர்வத்தின் கதை முடிந்தது.

(தொடரும்)



# ஆசாரமாலை.

(முன் 272ம் பக்கம் தொடர்ச்சி.)

**பிராணாயாமம்** இது அவசியமென்பதை நாம் புதிதாக வற்புறுத்த வேண்டியதில்லை. ஆராய்ச்சி மிதந்திருக்கும் இந்நாளில் எமது ப்ராசீனர்களின் இந்தப் பழக்கத்தைத் தாங்கிப்பேசாத மேனாட்டார்கள் யாருமில்லை எனலாம். யோகசாஸ்திரமே இதை அடிப்படையாக கொண்டிருக்கிறது. சரீர வலிமை உள்ளவர்கள் யாவரும் இதைப் புகழ்ந்து நூற்றுக்கணக்கான பக்கங்களைக்கொண்ட நூல்களை எழுதியிருக்கின்றனர். ஆரோக்கியத்திற்கு இது முக்யமான வழி என்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஹிருதய சுத்தி ஏற்படுவதை நிரூபித்திருக்கின்றனர். அடிவயிற்றிலிருந்து சுவாசம் விடுவது இதனால் நின்று போய்மார்பிலிருந்து சுவாசம்விடும்படி ஏற்படுகிறதென்றும் மார்புவிரிந்து அழகான அமைப்பை அடைகிறதென்றும் மனதிற்கும் தேகத்திற்கும் ஏற்பட்ட களைதீருவதுடன் மனதிற்கு உத்தீபனம் உண்டாகிறதென்றும் பலமும் சுறுசுறுப்பும் ஓங்குமென்றும் மனதில் நிலை உண்டாகி எந்த தொழிலையும் மனோதிடத்துடனும் உற்சாகத்துடன் செய்துமுடிக்கலாம் என்றும் இவ்வாறு பலவகையான அனுகூலங்களை அநேக வைத்திய நிபுணர்கள் கண்டிருக்கின்றனர். பிராணாயாமம் செய்யும்பொழுது பிரம்மசாரி சுண்டுவிரல், மோதிரவிரல், கட்டை விரல்களைச்சேர்த்து செய்யப்பட்ட ஓம்கார முத்திரையைக்கொண்டும், கிருகஸ்தாசிரமி ஐந்துவிரல்களையும் சேர்த்தும் மூக்கின் நுனியைப்பிடித்துக்கொள்ள வேண்டும். வலது நாஸிகையை கட்டை விரலால் அமுக்கி இடது நாஸிகை வழியாய் சுவாசத்தை முப்பத்திரண்டு மாத்திரை காலம் இழுத்து அறுபத்திநான்கு மாத்திரைகாலம் சுவாசக்காற்றை வெளி விடாமல் மூச்சை அடக்கிவைத்துக்கொண்டு, மெள்ள மெள்ள பதினாறு மாத்திரை காலம் வலது நாஸிகையின் வழியாய் விடவேண்டும். இம் மாதிரி மூன்று தடவை மூச்சு அடக்கி விடவேண்டும். மூச்சுக்காற்றை இழுத்து நிரப்புவதற்கு பூரகம் என்றும், மூச்சை விடாமல் அடக்கி வைத்துக்கொண்டிருப்பதற்கு கும்பகம் என்றும், வெளியே மூச்சு விடுவதற்கு ரேசகம் என்று பெயர். இந்த கும்பகக்கிரமத்தில் சுவாசத்தை சரீரத்திலுள்ள ஸுஷும்னை நாடியில் நிறுத்தி பாரதீரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீ விஷ்ணுவிடத்தில் மனதை செலுத்தவேண்டும். இந்த ப்ராணாயாமம் மட்டில் கேவலம் ஹிருதயபுஷ்டி சித்தசுத்தி தேக ஆரோக்

ஷியம் வியாதிகளை எதிர்க்கும் சக்தி முதலியவைகளைக்கொடுப்பதாய் இருந்து இத்துடன் காயத்ரீ மந்திரத்தின் பிரபாவமும் சேர்ந்தால் அதன் பலன் எவ்வளவென்று வர்ணிக்க முடியும். இஷ்டசித்தி யாதும் உண்டாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. நடுக்காட்டில் வசிக்கும் மக ரிஷிகள் சிம்ஹம், வியாக்ரம், கிருஷ்ணஸர்பம முதலிய கொடிய பிராணிகளின் நடுவில் இருந்தும் அவைகள் ஹிம்சிக்காமல் செய்வதும், பசிதாகம் பிணி முதலியவை இல்லாமல் செய்வதும், காற்று மழை பனி வெய்யில் முதலியவைகளின் பாதை சரீரத்துக்கு இல்லாமல் செய்வதும் விசேஷமான தேஜஸ் ஆத்ம சக்தி முதலியவைகளைக்கொடுப்பதும் அவர்கள் தினம் செய்யும் காயத்ரீ கலந்த பிராணாயாமந்தான். அதனால் நம்மவர்கள் இதில் நாளடைவில் சிறிது கவனத்தை செலுத்திவந்தால் ஈசுவர அனுக்ரஹத்திற்கு இவர்களின் சரீரம் பாத்திரமாவதுடன் மேற்கண்ட நன்மைகளை பிரத்யக்ஷமாய் அடையலாம். இந்த ப்ராணாயாம மந்திரத்தால் பகவானுடைய குணங்கள்தான் புகழப்படுகிறது. நாம் அந்த மந்திரத்தில் அந்தந்த பதங்களை உபயோகிக்கும்பொழுது அந்தந்த பதங்களின் அர்த்தங்களை ஞாபகத்திற்கு கொணர்ந்து பகவானுடைய அந்தந்த குணங்களை தியானத்திற்கு கொண்டுவரவேண்டியதவசியம் அப்போதுதான் மந்திரத்தை உச்சரித்ததற்கு விசேஷமான பலன் உண்டு. ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓம் ஸத்யம் ஓம் தத்ஸவிது: வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோதயாத் ஓமாபோ ஜ்யோதி ரஸோ அமிர்தம் ப்ரம்ம பூர்புவஸ்வரோம் என்பது அந்த பிராணாயாமத்தின் காயத்ரி. இம்மந்திரத்தால் பகவானுடைய அந்தந்த குணங்கள் துதிக்கப்பட்டு தன்னை உத்தாரம் செய்யும்படி கோரப்படுகின்றன. (ஓம்) பகவன்! தாங்கள் அநந்தகல்யாண குண பரிபூர்ணர். (பூ:) எல்லாம் நிறைந்தவர் (புவ:) மகாலட்சுமிக்கும் ச்ரேஷ்டர். (ஸுவ:) தங்கள் சுகத்திற்கு அளவேயில்லை. அநந்தமான ஸுகமுள்ளவர். (மஹ:) எல்லோராலும் பூஜிக்கப்படுகிறவர். (தப:) ஆலோசனையுள்ளவர். (ஸத்யம்) உத்தமமான ஆனந்தம் ஞானம் இவைகளைக்கொண்டவர். தாம் முக்தாமுக்த ஜீவ ராசிகளுக்கு நியாமகருய் இருப்பவர். (ய: ந: திய: ப்ரசோதயாத்) யார் எங்களுடைய புத்தியையும் கார்யங்களையும் தன் விஷயமாக இருக்கும்படி செய்துகொள்வாரோ அப்பேர்ப்பட்ட (தேவஸ்ய ஸவிது:) க்ரீடாதி குணங்களுள்ளவரும் ஜகத்திற்கு சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலான எட்டு வகை காரியங்களைச்செய்பவருமான நாராயணருடைய (தத்) வியாப்தமாயும் (வரேண்யம்) குணங்கள் மிகுந்திருப்பதைக்கொண்டு



ஜனங்களால் பஜிக்கத்தகுந்ததாயும் (பர்க்க:) ஜகத்துக்கு போஷணை பிரேரணை செய்வதாயுமுள்ள அல்லது ஸமஸ்த பாபங்களையும் நாசம் செய்வதாயுமுள்ள ரூபத்தை (தீமஹி) தியானம் செய்கிறோம். அவர் (ஓம்) அநந்த கல்யாண குணபரிபூர்ணர். (ஆப:) நன்கு ஸம்ரக்ஷிப்பவர். (ஜ்யோதி:) ப்ரகாசரூபியானவர். (ரஸ:) ஸாரமானவர். ஆனந்தரூபியானவர். (அமிர்தம்) மோக்ஷத்தைத் தருபவர். (ப்ரம்ம) ஸமஸ்த குண ஸம்பூர்ணர். (பூ:) ஸ்பூர்த்தி ரூபியானவர். (புவ:) அதிகமான வீரியமுள்ளவர். (ஸுவ:) பல ரூபியானவர். (ஓம்) அநந்தகல்யாண குணபரிபூர்ணர் என்று இம்மந்திரத்தின் அர்த்தத்தை அனுஸந்தித்தால் பகவானுடைய அனுக்ரஹம் கட்டாயம் ஏற்படும்.

(தொடரும்)

# பிரம்ம சூத்திரம்.

ஸ்ரீமான் M. ராமராவ் எழுதுவதாவது:—

(முன் 12ம் பக்கம் தொடர்ச்சி.)

## 13. ஓம் விகார சப்தாந்நேதி சேன்னப்ராசுர்யாத் ஓம்

பிந்திய சூத்திரத்திலுள்ள ஆனந்தமயன் விஷ்ணுவாகமாட்டான் என்றும் பொன்மயமான ஆபரணம் என்றால் பொன்னே ஆபரணமாக மாறியிருக்கிறது என்று பொருள்படுவது போலவே விகாரம் என்ற மாறுதலை இயற்கையாகவுடைய ஜடப்ரகிருதியையோ அதன் அபிமானியான லக்ஷ்மி தேவியையோ குறிக்க வேண்டும் என்றும் ஏனெனில் விஷ்ணு நிர்விகாரன் அதாவது மாறுதலில்லாதவன். ஒரேவிதமாயிருப்பவன் என்று சுருதிகளிற் கூறப்படுகிறது என்றும் ஆக்ஷேபணைக்கு சமாதானம் இங்கு சொல்லப்படுகிறது. அதன் அர்த்தமாவது:—

விகார சப்தாத் மாறுதல் என்ற அர்த்தத்தையுடைய 'மயன்' என்ற பதத்தைக்கொண்டு ந ஆனந்தமயன். விஷ்ணுவல்ல. இதி சேத் என்று சொல்லும்பக்ஷத்தில் ந அதுவல்ல. ஏனென்றால் ப்ராசுர்யாத் ஆனந்தப்பெருக்கையுடையவனாயிருப்பதால் என்று. பிராம்மண மயமான ஊர் என்றால் பிராம்மணர்கள் நிறைந்த ஊர் என்று பொருள்படுவதுபோலவே இங்கும் பொருள்கொள்ள

வேண்டும். இம்மாதிரி அன்னமயன், பிராணமயன், மனோமயன் விக்ஞானமயன் என்ற பதங்களுக்கும் பொருள் கூறவேண்டும். இரண்டு எழுத்துக்களாலாகிய பதத்தோடு சேர்ந்த மயன் என்பதற்குத்தான் விகாரம் என்ற பொருள் ஏற்படுமென வியாகரண நூல்களில் கூறப்படுகிறது. ஆனந்தமயன் என்பதோ மூன்றெழுத்துக்களாலாகிய பதத்தோடு சேர்ந்தது. ஆனதால் இந்த ஆக்ஷேபத்திற்கே இடமில்லை என்று கூறவியலாது. அன்னமயன் முதலிய ஈரெழுத்துப்பதங்களும் இங்கு உபலக்ஷணையால் சேர்ந்தவைகள்.

## 14. ஓம் தத்தேதுவ்யபதேசாச்ச ஓம்

ஆனந்தப்பெருக்கையுடையவனுதலால் ஆனந்தமயன் விஷ்ணுவென்று முன் கூறப்பட்டது. இச்சூத்திரத்தில் வேறொரு காரணத்தாலும் ஆனந்தமயன் விஷ்ணுதான் என்று நிரூபிக்கப்படுகிறது. இதன் அர்த்தமாவது:—

தத் அந்த விஷ்ணு (தத் ஆனந்தம் நிறைந்தவன் என்ற விஷயத்தில்) ஹேது உலகங்களை நடத்துவதென்ற காரணமானது வ்யபதேசாத் ச அதே தைத்திரீய சுருதியில் கூறப்பட்டிருப்பதால் என்று. கோஹ்யேவான்யாத் க: ப்ராண்யாத் யதேஷ ஆகாச ஆனந்தோ ந ஸ்யாத் எங்கும் தன்னொளியால் பிரகாசிப்பவரான இந்த விஷ்ணு ஆனந்தம் நிறைந்தவனுயில்லாவிடில் இவ்வுலகத்தை யார் நடத்தமுடியும்? யார்தான் தர்மாதர்மங்களில் ஈடுபடும்படிச் செய்யமுடியும் என்று தைத்திரீய சுருதியில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே ஆனந்தமயன் விஷ்ணுவே.

## 15. ஓம் மாந்திரவர்ணிகமேவ ச கீயதே ஓம்

இதற்குமுன் ஆனந்தமயன் என்றபதம் ஸ்ரீவிஷ்ணுவைத்தான் குறிக்கும் என்று சொல்லப்பட்டது. இந்த சூத்திரத்தில் "ஸத்யம் ஞானம் அனந்தம் பிரம்ம" என்ற சுருதியில் எந்த பரப்ரம்மம் குறிக்கப்படுகிறதோ அந்த பரப்ரம்மமே ஆனந்தமயன் முதலிய பதங்களால் குறிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதன் பொருளாவது.—

ச மேலும் மாந்த்ரவர்ணிகம் ஸத்யம் ஞானம் அனந்தம் என்ற வேதவாக்யத்தில் கூறப்படும் பரப்ரம்மம் ஏவ தான் கீயதே



ஆனந்தமயன் முதலிய ஐந்து பதங்களால் சொல்லப்படுகிறது. ஸத்யம் என்ற பதத்தின் அர்த்தத்தையே அன்ன மயன், பிராண மயன் என்ற பதங்கள் தெரிவிக்கின்றன. இரண்டுக்கும் ஜீவனத்தைக்கொடுப்பவன் நாசம் செய்பவன் என்று அர்த்தம். ஞானம் என்ற பதம் எல்லாவற்றையும் ஸாமான்யமாயும் விசேஷமாயும் அறிந்தவன் என்று அர்த்தம். இதையே மனோமயன், விக்ஞானமயன் என்ற பதங்களும் தெரிவிக்கின்றன. அனந்தம் என்றால் எல்லா தேசங்களிலும் எல்லா காலங்களிலும் எல்லா வஸ்துக்களிலும் நிறைந்திருப்பவன் என்று பொருள்படும். இதை ஆனந்தமயன் என்பது குறிக்கிறது. இவ்விதம் ஆனந்தமயன் விஷ்ணுதான் என்பதை வாதிப்பதற்கு இது மற்றொரு யுக்தியாகும்.

## 16. ஓம் நேதரோ அனுபபத்தே: ஓம்

ப்ரம்மம் என்ற பதம் சதுர்முகன் முதலியோருக்கும் பொதுவாதலால் ஆனந்தமயன் என்பது அவர்களையும் ஏன் குறிக்கக் கூடாது என்ற ஆக்ஷேபணைக்குப்பதில் இச்சூத்திரத்தில் சொல்லப் படுகிறது. இதன் அர்த்தமாவது:—

இதர: விஷ்ணுவைத்தவிர மற்றவர்கள் ந இருக்கமுடியாது. ஏனென்றால் அனுபபத்தே: இவர்களை நாம் அறிந்தால் முக்தி கிடைக்கும் என்றுபொருந்தமாயில்லாததால், 'ஸத்யம் ஞானமனந்தம் ப்ரம்ம' என்ற வாக்யத்திற்கு முன் அந்த சுருதியிலேயே பிரம்ம விதாப்னோதி பரம் இந்த பிரம்மத்தை அறிந்தவன் பரபிரம்மத்தையடைகிறான்—என்று சொல்லப்பட்டிருப்பதாலும் அந்தப் பிரம்மமே ஆனந்தமயன் ஆனதாலும் ஆனந்தமயனை அறிந்தால் தான் மோக்ஷம் கிடைக்குமே ஒழிய மற்றவர்களின் ஞானத்தால் கிடையாதென்று நிச்சயம் ஏற்படுவதாலும் ஆனந்தமயன் என்பது சதுர்முகாதிகளைக் குறிக்காது.

## 17. ஓம் பேதவ்யபதேசாச்ச ஓம்

ஆனந்தமயன் என்பது விஷ்ணுவைத்தவிர மற்றவர்களைக் குறிக்காது என்பதையே மற்றொரு யுக்தியால் இங்கு ஸ்தாபிக்கப் படுகிறது. இந்த சூத்திரத்தின் அர்த்தமாவது:—

ச மேலும், பேதவ்யபதேசாத் ஆனந்தமயனுக்கும் சதுர்முக பிரம்மன் முதலியோருக்குமுள்ள வித்தியாசம் சொல்லப்பட்டிருப்பதால் என்று. ஆனந்தமயன் பிரம்மாதிகளல்ல. அதாவது ஷடி தைத்திரீயசுருதியில் மனிதன் முதற்கொண்டு பிரம்மதேவன்முடிய ஒவ்வொரு உத்தமருடைய ஆனந்தமும் தாழ்ந்தவனைக்காட்டிலும் நூறுமடங்கு என்று சொல்லி 'தே யே சதம் ப்ரஜாபதேரானந்தா: ஸ ஏகோ ப்ரம்மண ஆனந்த:' பிரம்மதேவனின் அந்த நூறு ஆனந்தம் உண்டோ அது பரப்ரம்மத்தின் ஒரு ஆனந்தமாகும் என்றும் 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ' அந்தப் பிரம்மத்தின் ஆனந்தத்தை வர்ணிக்க முடியாமல் மனோவாக்குகள் திரும்பிவிடுகின்றன என்று அபரிமிதமான ஆனந்தமுடையவன் என்றும் ஆனந்தபேதம் சொல்லப்பட்டிருப்பதாலும் பிரம்மாதிகள் ஆனந்தமயன் என்பதைக் குறிக்காது.

## 18. ஓம் காமாச்ச நானுமானாபேக்ஷா ஓம்

ஆனந்தமயன் முதலியோர் பிரம்மமாகவே இருக்கட்டும். ஆனால் ஷடி சுருதியில் சொல்லப்பட்ட பேதமானது அவனுக்கும் மற்றவர்களுக்குமுள்ள அனுமானங்களால் பாதிக்கப்படுகிறது. பேதம் பொய். பேதமாயிருப்பதின் நிமித்தம், சந்திரபேதம்போல் என்ற பல அனுமானங்களைக்கூறலாம். ஆகவே அவ்வனுமான விரோதமும் ஏற்படுவதில்லை என்று இச்சூத்திரத்தில் கூறப்படுகிறது. இதன் அர்த்தமாவது:— அனுமானாபேக்ஷா சுருதி ஒன்றினாலேயே நிச்சயிக்கப்படவேண்டிய விஷயத்தில் அனுமானத்தை அபேக்ஷிப்பது தகாது. ஏனெனில் காமாத் இஷ்டப்படியெல்லாம் அனுமானம் செய்யலாமாதலால் ச தான். மற்றொரு விதமாகவும் இச்சூத்திரத்தைப் பதம்பிரித்து அர்த்தம்செய்யலாம். ஷடி அனுமானமானது நாபேக்ஷா தத்வஞானத்தையுண்டுபண்ணுவதற்குக் காரணமாகாது. ஏனெனில் அது நானுமா ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களுக்கு விருத்தமான அனுமானமாகும். அது எப்படியெனில் காமாச்ச இஷ்டப்படியெல்லாம் அனுமானம் செய்ய முடியுமாதலால்தான். இவ்விஷயத்திலே கடோபநிஷத்தின் ஆதாரமுமிருக்கிறது. இந்த பரப்ரம்ம விஷயமான அறிவை அனுமானத்தினால் உண்டுபண்ணவோ அல்லது தடுக்கவோ முடியாது.



நைஷா தர்க்கேண மதிராபனேயா என்று ஷடி உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

## 19. ஓம் அஸ்மின்னஸ்ய ச தத்யோகம் சாஸ்தி ஓம்

ஆனந்தமயனுக்கும் மற்றவர்களுக்கும் முற்கூறப்பட்ட பேதத்தையும் ஒப்புக்கொண்டு விடுகிறோம். ஆயினும் அந்த பேதமானது இச்சம்சாரவாழ்க்கையில்தான் உண்டு. முக்தியடைந்த பின்னர் கிடையாது என்ற ஆக்ஷேபத்தின் சமாதானம் இச்சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. அஸ்ய இந்த மற்ற ஜீவர்களுக்கு, அஸ்மின் இந்த சுருதியிலேயே, அஸ்மின் இந்தமோக்ஷத்தில், தத்யோகம் அந்த ஆனந்தமயனோடு கூட ஸம்பந்தத்தை, சாஸ்தி பல சுருதியில் உறுதி கூறுகிறது. அதாவது தைத்திரீய சுருதியில் 'ஸோச்னுதே ஸர்வான்காமான் ஸஹ ப்ரம்மணா விபஸ்சிதா' அந்தப்ரம்ம ஞானியானவன் எல்லாவற்றையுமறிந்த பிரம்மதேவனோடு தன் யோக்யதைக்குத்தகுந்த எல்லா விருப்பங்களையும் முக்தியில் அடைகிறான் என்றும் பிறகு ஏதமானந்தமயமாத்மான முப ஸங்க்ராமதி இந்த ஆனந்தமயன் என்ற பரமாத்மாவை அடைகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவனை மற்றொருவன் அடைகிறான் என்றால் இருவருக்கும் பேதம் அவசியமில்லையா? இருவரும் வெவ்வேறாயிருந்தாலல்லவோ ஒருவன் மற்றவனை அடையமுடியும். இவ்வாறாக ஆனந்தமயனுக்கும் மற்றவர்களுக்குமுள்ள பேதம் முக்தியிலும்கூட உண்டென்பது ஸித்தம். அவ்வாறு எல்லாவற்றிலிருந்தும் பின்னர்களான ஆனந்தமயன் முதலியோர் பரப்ரம்மமான ஸ்ரீமந்நாராயணன்தான் என்பதும் ஸித்தம்.

6வது ஆனந்தமயாதி கரணம் முடிவு.

(தொடரும்)

# விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 241ம் பக்கத்தொடர்ச்சி)

1. விச்வம் [ஓம் விச்வாய நம:] ஜகத்தில் பிரவேசித்தவர். தத்ஸிருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் என்று வேதம் அறிவிக்கிறது. எங்கும் பிரவேசித்தவர். ஞானரூபியானவர். விவேச

பூதானி சராசராணி, விக்ஞானமானந்தம் பிரம்ம என்று வேதம் அறிவிக்கிறது. கருடனுடன் செல்பவர். விசேஷமாய் வியாபிப்பவர். விசேஷமாய் வளர்கிறவர். வாயு பகவானை அந்தர்யாமியாயிருந்து நடத்துகிறவர். உலகத்தை நடத்துகிறவர். ஜீவர்களுக்கு நியாமகராயிருப்பவர். சரீரங்களில் பிரவேசமடைந்திருப்பதால் ஜீவனுக்கு விச்வன் என்று பெயர். அந்த ஜீவன் விஷ்ணுவுக்கு அதீனமாயிருப்பதால் அவர் விச்வம் எனப்படுகிறார் என்று ஸ்மிருதி இருப்பதைக்கொண்டு ஜீவனை அதீனமாக உடையவர். ப்ரளய காலத்தில் பிராணிகள் எல்லோராலும் பிரவேசம் செய்யப்படுபவர். மேலான சுகம் ஞானம் இவைகள் ரூபமாகவுள்ளவர். எல்லாவற்றையும் பிரவேசித்து எங்கும் நிரந்தரமாயிருப்பவர். பரிபூர்ணமாயிருப்பவர். இவ்வாறு நூறு அர்த்தங்களிருப்பதை ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் வியாகரண விதிப்படி பெரிய வித்வத் சபையால் நிரூபித்திருப்பதாய் மத்வ விஜயம் ஸ்பஷ்டமாய் கூறுகிறது.

2. விஷ்ணு: [ஓம் விஷ்ணவே நம:] எங்கும் வியாபித்திருப்பவர். எதிலும் பிரவேசித்திருப்பவர். த்ரிவிக்ரம ரூபத்தால் உலகளந்தவர். அதிகமான காந்தியுள்ளவர். அதிபூதாதிகளின் சம்பந்தமான ஜன்மாதிகளின் இச்சைகொண்டவர், எல்லா பிராணிகளுக்கும் கதியானவர். ஆகாயத்தை வியாபித்தவர்.

3. வஷட்கார: [ஓம் வஷட்காராய நம:] ஐசுவரியம், வீரியம், யசஸ், ஸ்ரீ க்ஞானம் வைராக்யம் ஆகிய ஆறு குணங்களைக் கொண்டு பிரகிருத்திப்பவர். வேதங்களாய் இருப்பவர்.

4. பூதபவ்யபவத்ப்ரபு: [ஓம் பூதபவ்யபவத் ப்ரபவே நம:] முன் நடந்தது இனி நடக்கப்போகிறது தற்போது நடைபெறுகிறது என்ற முக்காலத்திற்கும் ப்ரபு. அத்யந்தம் அதிகமான மங்களம் யாரிடமிருந்து உண்டாகிறதோ அப்பேர்ப்பட்ட ப்ரபு. கால வேறுபாடின்றி எப்போதுமிருக்கும் ஸ்வாமி.

5. பூதகிருத் [ஓம் பூதகிருதே நம:] பூதாதி துஷ்டகிரஹங்களின் உபத்ரவத்தை பரிகாரம் செய்பவர். பிராணிகளை சிருஷ்டிப்பவர்.

6. பூதபிருத் [ஓம் பூதபிருதே நம:] பிராணிகளை போஷிப்பவர். காப்பாற்றுகிறவர். தாங்குகிறவர்.



7. பாவ: [ஓம் பாவாய நம:] ஜகத்தை சிருஷ்டிப்பவர். சந்திராதிகளுக்கு காந்தியைத்தருகிறவர். நக்ஷத்திரங்களை ஸம்ரக்ஷிப்பவர். அவைகளில் பிரவேசிப்பவர் எல்லாவற்றிற்கும் இருப்பாயிருப்பவர்.

8. பூதாத்மா [ஓம் பூதாத்மனே நம:] பிராணிகளுக்கு நியாமகனாய் இருப்பவர்.

9. பூதபாவன: [ஓம் பூதபாவனாய நம:] பிராணிகளின் மனதை அடைபவிப்பவர். பிராணிகளை வாழச்செய்பவர். பூமியில் காந்தியுடைய சம்ரக்ஷகர்.

10. பூதாத்மா [ஓம் பூதாத்மனே நம:] ஜீவன்களை பரிசுத்தப் படுத்துகிறவர். பரிசுத்தர்களின் மனதைக்கவர்ந்தவர்.

(தொடரும்)

# கிருத யுகத்தில் துவைதாத்வைத விவாதம்.

---

## துவைதத்திற்கு தீர்ப்பு நரஸிம்மாவதாரமே.

ஸோஹம் நானே அந்த பிரம்மம், சிவோஹம் நானே அந்த சிவன்; நானே விஷ்ணு, நானே பிரம்மா, பிரம்மமே சத்யம் மற்றது எல்லாமே கல்பிதம். பொய், முக்காலத்திலுமில்லை, வேதமில்லை, சாஸ்திரமில்லை, உபதேசிக்கும் குருவில்லை, யாகயக்ஞங்கள் பொய், தானம் பொய், தீர்த்தம் பொய், புண்யமில்லை, பாபமில்லை! அதனால் ஏற்படும் ஸ்வர்க்கம் பொய், நரகம் பொய், பிராம்மணாதி வர்ணங்கள் பொய் பிரம்மசரியாதி ஆசிரமங்கள் பொய், நான் ஒருவனே ஸத்யம் என்று அத்வைதம் போதிக்கிறது.

துவைதமோவெனில் எல்லாம் மெய். சாஸ்திரம் மெய், இதுசெய்ய வேண்டும், இது செய்யத்தகாது என்னும் விதி நிஷேதங்கள் மெய், புண்ய பாபங்கள் ஸத்யம் அதனால் ஏற்படும் ஸ்வர்க்க நரகாதிகள் ஸத்யம், நான் வேறு, பிரம்மம் வேறு, சிவன் வேறு, விஷ்ணு வேறு, பிரம்மா வேறு, எல்லா பிராணிகளும் வெவ்வேறு, விஷ்ணுதான் லக்ஷ்மீ பிரம்மா

சிவன் முதலிய எல்லோருக்கும் ஸர்வோத்தமர். அவர்தான் எல்லோர் ஹிருதயகமலத்திலும் இருந்துகொண்டு ஸர்வ நியாமகராய் பிரேரேபிக்கிறார். அவரால்தான் ஸம்ஸாரத்தினின்றும் முக்தி ஏற்படுகிறது. அவரை சரணமடையவேண்டும். ஸோஹம் என்ற உபாஸனை கூடாது. தாஸோஹம் அவனுடைய தாஸன் நான். நான் அஸ்வதந்திரன், ஸ்வதந்திரன் என்று உபாஸிக்கவேண்டும் என்று போதிக்கிறது.

துவைத மதத்தை பின்பற்றுபவர்கள் தேவர்கள். இதை பகவத் கீதாதிகளில் உபதேசித்த கிருஷ்ணர், விஷ்ணு. அவர்களுக்கு தெய்வம். ஈசுவரோஹம் நான்தான் ஈசுவரன் "அஸத்யமப்ரதிஷ்டம் தே" ஜகத் அஸத் என்று அஸுரர்கள் சொல்வதாய் ஸ்ரீ கிருஷ்ணர் முதலியோர் அறிவித்திருப்பதை முன்னிட்டு அத்வைதத்தைபின்பற்றுபவர்கள் அஸுரர்கள். விஷ்ணுத்வேஷிகளுக்கு தெய்வம் பரமசிவன். எப்பவும் விரோதிகளாயுள்ள தேவதைத்யர்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கும் துவைதாத்வைத விவாதத்தை செய்துகொண்டிருந்தனர்.

ஸ்ரீமத் பாகவதம் கருட புராணம் முதலியவைகளை விமரிசை செய்தால் அடியிற்கண்டவாறு கிருத யுகத்தில் த்வைதாத்வைத விவாதம் நடைபெற்றதாயும் துவைதத்திற்கு வெற்றியும் அத்வைதத்திற்கு விநாசமும் ஏற்பட்டதாய் தெரியவருகிறது.

அஸுர குலத்தில் ஹிரண்யன் தோன்றினான். சிவ பக்தனானான். பிரம்மாவிடமிருந்து அஸாத்தியமான வரங்களைப் பெற்றதுமன்றி அதி அற்புத யோக சித்திகளைப்பெற்றான். தைத்யாக்ராந்தம் ஹிருதயகமலம் என்றபடி எல்லோர் ஹிருதயகமலத்திலும் புகுந்துவியாபித்தான். வெளியிலும் யாகயக்ஞாதிகளைச் செய்யவொட்டாமல் தடுத்தான். வேதாத்யயனம் வர்ணாசிரமாசார அனுஷ்டானம் முதலிய புண்யங்களைச்செய்யாமலும் அப்படிச்செய்தாலும் அவைபோய்ச்சேராதபடி தேவபித்ராதிகளின் உள்ளேயிருந்தும் தடுத்தான். இவனுடைய பராக்கிரமத்திற்கு எல்லா உலகும் வசமாயிற்று. ஸோஹம் சிவோஹம் என்னும் அத்வைத தத்வம் இவனுடைய மனதில் நிலைநின்றது. விஷ்ணுத்வேஷம் அதிகரித்தது. சிவபக்தி பெருகியது. உலகெங்கும் அத்வைத தத்துவமே நிலைநிற்கச் செய்தான். இதைக்கண்டு துவைதிகளான தேவர்கள் தத்தளித்தார்கள். அவர்களால் எதும் மாளவில்லை. அவர்கள் தம் தெய்வமான விஷ்ணுவை சரணமடைய அவனுடைய மகனே த்வைதத்தை ஸ்தாபிக்கப்போவதாயும் அவனுக்கு தீங்கு ஏற்படும்பொழுது தான் வருவதாகவும் விஷ்ணு வாக்களித்தார். அவனுக்கு மகன் எப்போது பிறப்பானென்று எல்லா த்வைதிகளும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஹிரண்யனின்பாரியாள் சுசிஷ்மதியும் கர்ப்பிணியானாள். கர்ப்பம் வளர்ந்தபின் துவைதிகளின் ஹிதராய் நாரதர் வந்து ஹிரண்யன் இல்லாதிருக்கும் சமயம் ஏகாந்தத்தில் அவளை சந்தித்தார். அச்சமயம் ஜனங்களுக்கு அபூர்வமாயிருந்த விஷ்ணுவின் மாகாத்மியத்தைக்கேட்க அவள் பிரியங்கொண்டாள். இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைக்கொண்டு நாரதர் விஷ்ணுவின் மகிமையை விளக்கி அவருடைய பிரசாதம் ஏற்படக்காரணமாயுள்ள துவைத சித்தாந்தத்தை வெகு அழுத்தமாய் உபதேசம் செய்தார். அவளுடைய கர்ப்பத்திலிருந்த குழந்தை இதைக்கேட்டு ஆனந்த கோலாகலத்துடன் பிறந்தான். அதனால் அவன் பிரக்லாதன் எனப்பெயர் பூண்டான். உடனே துவைதாசாரியனான வாயுபகவான் அவனிடம் பிரவேசித்தார். பிரக்லாதன் நினைவு தெரிந்தமுதல் மகாக்ஞானியானான். விஷ்ணுவின் மகாபக்தனான். உட்காரும்போதும் நிற்கும்போதும் நடக்கும்போதும் பேசும்போதும் சாப்பிடும்போதும் சிறிக்கும்போதும் தும்பும்போதும் கொட்டாவிவிடும்போதும் உறங்கும்போதும் எப்போதுமே கோவிந்தா கோவிந்தாவென்று விஷ்ணுவின் பெயரையே சொல்லிவந்தான். விஷ்ணுவின் ஸ்மரணை எக்காலத்திலும் இவனை விட்டகலவில்லை. இந்த பாலனின் பக்தியை மெச்சி இவனுக்கு ஹரி எப்பொழுதும் பிரத்யக்ஷமாயிருந்தார். சிறிதும் அவனிடம் அஸுர புத்தியோ அஸுர மதமோ அஸுர கர்மமோ யாதும் இருந்திருக்கவில்லை. தேவ ஸ்வபாவமே மேலிட்டிருந்தது. தேவர்களின் கர்மவையே செய்துவந்தான். தேவர்களின் மதத்தையே பின்பற்றியிருந்தான். ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாக்ஷரி தான் அவனுக்கு பெரும் தனமாக இருந்தது.



ஹிரண்யனுக்கோ இதுஒரு பெரும் நாராசமாய் காதுகளைதொளைத்துக்கொண்டிருந்தது. ஓம் நம: சிவாய என்று தன் மைந்தன் வாயால் சொன்னால் போதுமென்று எண்ணினான். அதற்காக சுயம் அரும்பாடுபட்டான். தன் குரு புத்ரர்களான சண்டாமர்க்களை பிரேரிபித்தான். நம: சிவாயேதி வதிஷ்யஸே யதா। ததாதருத்வம் மமபாலகஸ்ய என்று அவர்களை மன்றாடி கேட்டான். அவர்கள் எவ்வளவோ சைவாகமங்களை போதித்து சிவனிடம் பக்தி வளரும்படிசெய்து மாயாவாதத்தைப்புகவிடப்பார்த்தும் முடியவில்லை. ஒருசமயம் ஹிரண்யன் பிரக்லாதனை உனக்கு எது சரியான மதம் என்று தோன்றுகிறது என வியக்தமாய் கேட்டும் விஷ்ணு தான் மோக்ஷத்தையளிப்பவர், வனம் சென்று பெரியோர்களிடமிருந்து உபதேசம்பெற்று அவரை சரணமடைவதுதான் சரியான மதமென்று தோன்றுகிறதாய் பிரக்லாதன் பதில் சொன்னான்.

நீயே பரப்ரம்மம். அக்ஞானத்தால் தான் நீவேறு ஈசுவரன் வேறு என்று தோன்றுகிறது. மோக்ஷமென்பது தனியாய் இல்லை. அது உனக்கு கிடைக்கவேண்டியதுமில்லை. தற்போது உனது தந்தை ஹிரண்யன் தான் ஈசுவரன், அவன்தான் ஸ்வதந்திரன். அவனால் எதுவும் பெறலாம் என்று பலவாறு அத்வைத ஸித்தாந்தத்தை குருபுத்ரர்கள் சொல்லி பார்த்தார்கள். இந்த உபதேசம்பெற்று பிரக்லாதனுடைய பக்தி திரும்ப சிறிதுகாலம் குருவின் வீட்டிலேலேயே பிரக்லாதனை விட்டிருந்தான்.

பிறகு ஒரு சமயம் பிரக்லாதனின் புத்திமாறியிருக்குமென்று நம்பி சபையில் உட்கார்த்திவைத்துக்கொண்டு ஹிரண்யன் பிரக்லாதனை இவ்வளவு காலம் குருகுலவாசம் செய்தாயே எதை அறிந்தாய் என்று கேட்டதற்கு விஷ்ணுவிடம் ஞான பூர்வகமான ஸ்நேகமாகிய பக்தி ஏற்பட ஒன்பதுவகை சாதனமென்று "ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:" என்று த்வைத ஸித்தாந்தத்தை பலமாய் பேசினான். இதைக்கேட்டு ஹிரண்யன் தன் தனயனே தனக்கு சரியான சத்ருவானான் என்று உறுதிகொண்டான். வைரிகள் ஸிரிப்பார்களே என்று லஜ்ஜைப்பட்டான். தானே பிரம்மம் தானே ஈசுவரன் என்று நிரூபிக்க கங்கணம் கட்டினான். உடனே கோரமான உத்திரவுகளை பிறப்பித்தான். ஆயுதங்களைக்கொண்டு தன் ஆட்களால் பிரக்லாதனை அடித்து கொல்லச்செய்தான். ஆட்களின் கைகளும் ஆயுதங்களும் முறிந்தனவேயல்லாது பிரக்லாதனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை. இதனால் ஹிரண்யன் ஸ்வதந்திரனில்லை என்றும் ஈசுவரனில்லை என்றும் அவனுக்கு மேற்பட்டு பலனைத்தரும் ஸ்வதந்திரர் ஒருவரிருக்கிறார் என்பதும் வெளியாயிற்று. ஆனால் இந்த தத்வத்தை ஹிரண்யன் அறியவில்லை. பிறகு ப்ரக்லாதனின் ஆகாரத்தில் சமையற்காரர்களைக்கொண்டு காளகூட விஷத்தைக் கலக்கச்செய்து அவனைக்கொல்லப்பார்த்தான். அவனுடைய அந்த எத்தனமும் பலிக்கவில்லை. அப்பொழுதும் தனக்கு மேலாய் பலனைத் தரும் ஈசுவரனிருப்பதாய் அறியவில்லை. அத்வைத மயக்கம் அவ்வளவு தலைமுண்டியிருந்தது. விநாசகாலே விபரீத புத்தி என்பது சரிதான். திக்கஜங்களைக்கொண்டு பிரக்லாதனை முட்டி மிதிக்கச்செய்தான். அவைகளின் கால்களும் தந்தங்களும் முறிந்துபோய் வீறிட்டுக்கொண்டு அவைகள் ஓடிவிட்டன. பிரக்லாதன் சிறிதும் ஹிம்ஸையடையவில்லை. அன்றே ஹிரண்யனின் பட்டத்துயானை செத்துவிழுந்தது. இவன் எண்ணியது நடைபெறாததோடு இவன் எண்ணாததும் நடந்ததைக்கண்டு நான் ஈசுவரனில்லை நான் ஸ்வதந்திரனில்லை என்றாவது எண்ணினானா இந்த மூடன், அப்பொழுதும் அத்வைதபாவனை இவனை விடவில்லை.



நாகலோகங்களிலிருந்து கிருஷ்ண ஸர்ப்பங்களை வரவழைத்து பிரக்லாதனிடம் கடிக்கவிட்டான். ஸர்ப்பங்களின் பற்கள் உதிர்ந்துபோய் ஓடிவிட்டன. பிரக்லாதனுக்கு யாதொரு ஹிம்ஸையும் ஏற்படவில்லை. திடீரென்று இவனுடைய வாயினின்றும் எல்லாபற்களும் உதிர்ந்துபோயின. அப்பொழுதும் த்வைத ஸித்தாந்தம் மங்களகரம் என்று தோன்றவில்லை. எப்படியாவது அத்வைதத்தை ஸ்தாபிக்க பெருமுயற்சி கொண்டான். மலையின் உச்சியிலிருந்து பிரக்லாதனை உருட்டினான். அப்பொழுதும் த்வைதியான பிரக்லாதனுக்கு சங்கடமேற்படவில்லை. அத்வைதியான ஹிரண்யனின் தலையிலுள்ள கிரீடம் திடீரென்று கீழே விழுந்து பொடியாய் போய் அபசகுனமாயிற்று. அத்வைதம் நிலை நிற்காதோவென்ற சம்சயம் அப்பொழுது தான் உதித்தது. சந்தேகப்பட்டு அஸுரகுமாரர்களும் பிரக்லாதனை பிரசனம் செய்தார்கள். பிரக்லாதனும் அது சரியான சந்தர்பமென்று த்வைதஸித்தாந்தத்தை எல்லோர் நடுவில் வெகுவாய் பிரசாரம் செய்தான். [பிரக்லாதனின் உபதேசாதிகள் மற்றொரு சந்தர்ப்பத்தில் பிரசுரிக்கப்படும்] தன் அனுபவத்தை எல்லாம் அத்தாக்ஷியாய் எடுத்துக்காட்டினான். விஷ்ணு பக்தி ஏற்படச்செய்தான். தன் சகாக்களைத் தன்னைப்போல் த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்களையும் சங்கு சக்ராதி முத்திரைகளையும் தரிக்கச்செய்தான். துளசிமாலைகளை அணியச்செய்தான். கோவிந்தா கோவிந்தாவென்று நாமோச்சாரம் செய்யச்செய்தான். அஸுர பாலகர்கள் கூவும் கோவிந்தா கோவிந்தாவென்ற விஷ்ணுவின் நாமாவளி பத்து திக்கிலும் கேட்டது. ஹிரண்யன் இதைக்கண்டான். தான் கெட்டதுமன்றி சந்திரபுஷ்கரிணியையும் கெடுத்தான் என்ற கதை சரியாய் விட்டதே என்று தன்னை நிந்தித்துக்கொண்டான். அடங்கா கோபங்கொண்டான். ஹே மூடா! யாருடைய பலத்தைக்கொண்டு என்னை இப்படி அவமதிக்கிறாய் என்று ப்ரக்லாதனைக்கேட்டான். தந்தையே! அவர் எனக்கு மட்டில் பக்கபலமன்று. உமக்கும் இந்த மகத்வத்தைக்கொடுத்தவர் அவர் தான். உமக்கு மட்டிலன்று. "த்வத்தேவருத்ரஸ்ய பலம் முராரி:" உம்முடைய தெய்வமாகிய பரமசிவனுக்கும் பக்கபலமாயிருப்பவர் அந்த நாராயணர்தான். பரமசிவனுக்கு மட்டிலன்று. அவருடைய தந்தையான பிரம்மாவுக்கும் அவர்தான் பலம். பிரம்மாவுக்கு மட்டிலன்று. அவருடைய தாயான மகாலட்சுமிக்கும் அவர்தான் பலம் என்றிவ்வாறு அடுக்கிக்கொண்டு ஹிரண்யன் பதில் சொல்லமுடியாதபடி த்வைதத்தை வாதித்தான்.

ஹிரண்யன் ஒன்றும் பேசமுடியவில்லை அத்வைதம் வாதத்திற்கு நிலைநிற்கமாட்டாதுதான். சேஷம் கோபேண பூரயேத் என்று பேச

முடியாமற்போனால் உடனே கோபம்தான். உன் வாதத்தைக் கேளேன். நான்தான் ஈசுவரன். என்னைத்தவிர ஈசுவரன் மற்றெவனுமில்லை. அப்படியிருந்தால் அவனை பிரத்யக்ஷமாய் காட்டு வெறும் வாதம் வேண்டாம். அப்படி நீ காட்டாவிடில் இதோ உன்னைக் கொல்கிறேன் என்று கத்தியை உருவிக்கொண்டு பிரக்லாதனின் சமீபம் ஓடிவந்தான். அப்பொழுது த்வைதாசாரியனான வாயுபகவான் உடனே ஓர் பக்ஷி ரூபங்கொண்டு எதிரில் தோன்றி, ஹிரண்யா! இந்த அத்வைத பாவனையை விடு. த்வைத தத்வத்தை அவலம்பனம் செய். ஹரியை வணங்கு. ஹரிபக்தனான பிரக்லாதனுக்கு துரோகம் செய்யாதே. இல்லையேல் இம்மூன்று யாமத்திற்கு பின் நீ இறக்கப்போவது நிச்சயம். என்று புத்திமதி சொன்னார். பிழைப்பவனாயிருந்தால் த்வைதாசாரியனின் உபதேசம் காதுக்கேறும். விநாசமடையும் ஹிரண்யன் இதைக் கேட்டு பரிகசித்தான். பிறகு யுக்திகளைக்கொண்டும் அவனை நல்வழிப் படுத்த முயன்றார். "ஸிவோஹ மித்யேவ தவாஸ்தி தத்வம் தேனைவத்வம் யாஸ்யஸிஹ்யுத்தம் தம:" ஸிவோஹம் ஸோஹம் என்ற இந்த அத்வைத பாவனையால்தான் நீ அந்தம் தமஸ்ஸை அடையப்போகிறாய். சிவன் ஸர்வோத்தமனாய் இருக்கும்பக்ஷத்தில், அவனுடைய அனுக்ரஹம் மேலானதாய் இருக்கும்பக்ஷத்தில், நீ ஜகதீசுவரனாய் இருக்கும்பக்ஷத்தில், பிரக்லாதனை உன்னால் கொல்லமுடிந்ததா? நீ எவ்வளவு எத்தனம் செய்தாய்? அல்லது உன் பிரியமான பட்டத்துயானை முதலியவைகளைக் காப்பாற்ற முடிந்ததா? யோஜித்துப்பார். மூடா! உன் தெய்வமான சிவனுக்கே ஸ்வாதந்திரியமில்லை. அவனே விஷ்ணுவுக்கு அடங்கியவன் அஸ்வதந்திரன் என்று வாயுபகவான் சொல்ல, அதிகப்ரஸங்கியான உன்னைக்கொன்றுவிடுவேன். நீ ஓடிப்போ என்று பக்ஷியைப்பார்த்து ஹிரண்யன் சொன்னான். முதலில் ஓர் த்வைதியிடம் பந்தயம்போட்டு அவனைக்கொல்லமுடியாமல் நீ தோல்வியடைந்திருக்கிறாய். மற்றொரு த்வைதி நான் வந்திருக்கிறேன். என்னிடமும் உனக்கு பராஜயம் நிச்சயம். பிறகாவது இந்த பாழான அத்வைதத்தைவிட்டு த்வைதத்தை அடைந்து க்ஷேமமாயிரு, என்று பக்ஷிசொல்ல, மகா கோபாவேசத்துடன் ஹிரண்யன் கோரமான பாணங்களையும் ஆக்னேயாதி அஸ்திரங்களையும் பக்ஷியிடம் பிரயோகம் செய்தான். அப்பக்ஷி எல்லாவற்றையும் விழுங்கி விட்டு, ஹிரண்யா! பார்த்தாயா? "தவேசத்வம் க்ஷுத்ரயாதோபூத் பஜேச பாதம் ப்ரம்மதேவாதி வந்த்யம்" நீ ஈசுவரன் என்றாயே? உன் ஈசுவரத் தன்மை எங்கே பறந்துபோயிற்று. ஓர் சிறு பக்ஷியைக்கொல்ல உன்னால் முடியவில்லை. நீ ஈசுவரனல்ல என்பதை இப்போதாவது தெரிந்து



கொண்டாயா? லக்ஷ்மி பிரம்மாதிகளுக்கும் ஈசன், ஸர்வஜகதந்தர்யாமி நாராயணர் ஒருவர் இருக்கிறார். த்வைதமே சரி. அத்வைதம் தப்பு. வீணாய் இறக்காதே என்று சொல்லி மறைந்தார்.

அப்பக்ஷியின் வார்த்தையின்படி விஷ்ணு இருப்பதாய் சந்தேகம் வந்ததால் அவரைக்கொல்ல இச்சைகொண்டான். விஷ்ணுவின் ப்ரதீகங்களை நாசமாக்க எத்தனித்தான். விசிஷ்டாத்வைதம் போதிக்கிறபடி கோயில்களிலுள்ள விஷ்ணுவின் விக்ரஹங்களே சாக்ஷாத் விஷ்ணுவென்று அம்மூடன் எண்ணினான். அந்த விக்ரஹங்களை எல்லாம் உடைத்தெறிந்தான். விஷ்ணு ஒழிந்தான் என்று நிச்சயித்தான். தானம்வாங்க ஓர் தரித்திர பிராம்மணன் வந்துசேர்ந்தான். உடனே அவன் தலையை சீவினான். மடிந்தான் அப்பாவி விஷ்ணு என்றான். கொட்டிலில் கட்டியிருந்த பெரும்பசுவை கத்தியால் ஒரே வெட்டு வெட்டினான். தொலைந்தான் அந்த விஷ்ணு என்று கர்ஜித்தான். பாரியாளின் அந்தப்புரத்திற்கு ஓடி வந்து அங்கு கட்டியிருந்த துளஸீ பிருந்தாவனத்தைக்காலால் உதைத்து கீழே தள்ளினான். மிதித்தேன் விஷ்ணுவை என்று உரக்க கூவினான். அதன் எதிரிலுள்ள ஸாலக்ராமத்தை இருகைகளில் வைத்து நெறித்து தூள்தூளாக்கினான். விஷ்ணுவைப் பொடியாக்கிவிட்டேன் என்று அட்டகாசம் செய்தான். பிறகு மகாவேகத்துடன் பிரக்லாதனிடம் ஓடி வந்தான். அடே மூர்க்கா! நான்தான் எங்கும் வியாபித்திருக்கிறேன். நான்தான் ஈசுவரன், நான்தான் ப்ரம்மம், நான்தான் சிவன், நான் அத்வைதத்தை தழுவியிருக்கிறேன். நீ த்வைதத்தைவாதிக்கிறாய். மற்றொரு ஈசுவரன் இருக்கிறான் என்கிறாய். "யஸ்த்வயா மந்தபாக்யோக்த: மதன்யோ ஜகதீசுவர:| க்வாஸௌ யதிஸர்வத்ர கஸ்மாத் ஸ்தம்பே நத்ருச்யதே" அவன் எங்கே சீக்கிரம் சொல் என்றான். தந்தையே! அவர் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை என்றான் பிரக்லாதன். அப்படியா? இந்த கம்பத்தில் இருக்கிறாரா? இல்லையேல் உனது த்வைதம் தப்பு. என் அத்வைதம் உண்மை. த்வைதத்தைப் பிரசாரம் செய்யும் உன்னைக்கொல்வது நிச்சயம், என்று சொல்லி ஹிரண்யன் கம்பத்தை முஷ்டியால் அடித்தான். பதினான்கு லோகங்களிலுமுள்ள த்வைதிகள் யாவரும் திகிலுடன் த்வைதத்திற்கு ஜயமேற்பட பகவானை பிரார்த்தித்திருந்தனர். அத்வைதிகளும் யாதுவேற்படுமோவென்று மிகுந்த பரபரப்புடன் பார்த்திருந்தனர். உடனே த்வைதிகளின் ஸ்வாமியான விஷ்ணு அந்த கம்பத்தினின்றும் மிக்க பயங்கரமான நரஸிம்ம ரூபங்கொண்டு அஷ்ட மகாபுஜங்களுடன் த்ரிநேத்ரதாரியாய்வெளிவந்து அத்வைதியான ஹிரண்யனை கிழித்தெறிந்தார். த்வைதியான பிரக்லாதனை

ஸம்ரக்ஷித்தார். அத்வைதம் அனர்த்தத்தை கொடுக்கக்கூடியதென்றும் த்வைதம் மங்களகரமானதென்றும் நிரூபித்து இந்த மாயாவாதமதத்தை த்வம்ஸம் செய்து த்வைதத்திற்கே தீர்ப்பு அளித்தார். இந்த அற்புதமான த்வைதாத்வைத விவாதத்தை ஆவலுடன் பார்த்திருந்த த்வைதிகளான தேவர்கள் யாவரும் அவரவர்களுக்கு தீர்ப்பாணைக்குறித்து தனித்தனியே மகாஸ்தோத்திரம் செய்தனர். த்வைதியான பிரக்லாதனுக்கு பெருங்கௌரவம் ஏற்பட்டது. ஸ்ரீநரஸிம்ஹர் த்வைதத்தை ஸ்தாபித்தார். நரஸிம்ஹ ஜயந்தியன்று மாத்வர்கள் யாவரும் இதைத் தான் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இதுவே அவருடைய மகா பூஜையாகும். ஆகவே ஸ்ரீபகவத்பாதாள் மாயாவாதகண்டனத்தில் "நரஸிம்ஹோ அகிலாக்ஞான மதத்வாந்த திவாகர:" என்றார்.

அத்வைதம் ஒழிக, த்வைதம் வளர்க.

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# விவாக விளம்பரம்.

பெண்ணின் வயது 13. நல்ல அழகு. ஜாமதக்னி கோத்திரம். உத்தியோகத்திலிருக்கும் வரன் வேண்டும். ஜாதகம் முதலியவைகளுக்கு மாத்வ மித்திரன் மானேஜருக்கு எழுதவும்.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 31—5—37 | சோமவாரம் | சிரவண உப, இல்லை, விஷ்ணு ப. உப. |
| 5—6—37 | சனிவாரம் | ஏகாதசி உப. [இல்லை |
| 6—6—37 | பானுவாரம் | த்வாதசி. ஸாதனி காலை மணி 7-18க்குள் பாரணை |
| 8—6—37 | மங்களவாரம் | அமாவாசை திலதர்ப்பணம் விஷ்ணு ப. உப. |
| 19—6—37 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 23—6—37 | புதவாரம் | பௌர்ணமி, விஷ்ணு ப. உப. வடஸாவித்ரி பூஜை |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்**:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திகைக்கும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் கண்டோர் பலர். மேலும் பலர், விருத்தர்களை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிரதி வெகு குறைந்திருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்**:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி**:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதாம் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்**:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்**:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

**திருவசரித்திர நாடகம்**:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்**:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**

...ட சந்தா ரூ. 3.

# டி. எஸ். ஆர்.
அண்டு
# கம்பெனி,
கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனா திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்
மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.





# மாத்வமித்திரன்.
# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 9. புஸ்தகம் | ஈசுவர ஸம்வத்ஸரம். ஜேஷ்ட மாஸம். (23-6-1937) புதவாரம். | No. 11 நெ. 11. |
|---|---|---|

| எண். | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மணன் பரதனுக்குக் குறையனே | 321 |
| 2. | ஸ்ரீபாகவத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 327 |
| 3. | விஷ்ணு ஸஹஸ்ரநாமம் | 332 |
| 4. | ஆசாரமாலை | 337 |
| 5. | ஹரிநாம கீர்த்தனையின் பிரபாவம் | 340 |
| 6. | செய்திகள் | 343 |
| 7. | விளம்பரம் | 344 |
| 8. | விசேஷ தினங்கள் | 344 |

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 9 } ஈசுவர ஸம்வத்ஸரம். ஜேஷ்ட மாஸம். { No. 11

## லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே.

(முன் 294ம் பக்கம் தொடர்ச்சி.)

14. சீதை ராகவனையும் லக்ஷ்மணனையும் தன் குலத்தையும் நினைத்து வருந்திக்கொண்டிருக்கையில் சுபசகுனங்கள் உண்டானதாய் அறிவிக்கும்பொழுது "தஸ்யாஸ்து ராமம் ப்ரவிசிந்தயந்த்யா: ராமானுஜம் ஸ்வம் ச குலம் சுபாங்க்யா:" (சுந். 28 சர். 20 சுலோ.) என்பதில் லக்ஷ்மணனை ராமானுஜன் என்று அழைத்திருப்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

15. சீதை ஹனுமாருக்கு தன் விருத்தாந்தத்தை அறிவிக்கும்பொழுது, "ப்ராகேவது மகாபாக: ஸௌமித்ரி: மித்ரநந்தன: பூர்வஜஸ்ய அனுயாத்ரார்த்தே த்ருமசீரை: அலங்க்ருத:" தனக்கு முன்னுடியே ஸுமித்ரையின் குமாரரான லக்ஷ்மணர் தனக்கு அடுத்த மூத்த தமையனான ராகவனைப் பின்தொடர்ந்து செல்ல மர உரியைக்கட்டிக் கட்டிக்கொண்டிருந்தார் என்று அறிவித்திருக்கிறார். இங்கு ராகவன் லக்ஷ்மணனுக்கு பூர்வஜன் என்ற பதம் தனித்து உபயோகப்படுத்தப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

16. "ஜனஸ்தானே விஹ்ருதே ப்ராதா சத்ரு: கஸ்ய ... விஜேத்" (சுந். 37 சர். 14 சுலோ) என்பதும்,

17. ப்ராதுராதேசமாதாய லக்ஷ்மணோ வாபராக்ரம: (சுந். 38 சர். 46 சுலோ)

18. "அனுகச்சதி காகுத்ஸ்தம் ப்ராதரம் பாலயன் வனே" (சுந். 38 சர். 59 சுலோ) என்றும் தனித்து லக்ஷ்மணனை ராமனுக்கு ப்ராதா என்றும் லக்ஷ்மணன் ராமனுக்கு ப்ராதா என்பதும் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது கவனிக்கவேண்டியவைகளே. இவ்வாறு லக்ஷ்மணர் ராமனுக்கு அனுஜர் என்றும் ப்ராதா என்றும் ராமர் லக்ஷ்மணருக்கு பூர்வஜர் என்றும் வால்மீகி ஸ்பஷ்டமாய் உபயோகித்திருப்பதால் இந்த சுலோகங்களெல்லாம் லக்ஷ்மணன் பரதனுக்கு ஜ்யேஷ்டன் என்பதற்கு பிரமாணங்களே.

19. இம்மட்டிலல்ல. லக்ஷ்மணன் பரதாக்ரஜன் என்றே ஸ்பஷ்டமாய் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அயோத்தியா காண்டத்திலேயும் 'ஸீதாமாதாய கச்ச த்வம் அக்ரதோ பரதாக்ரஜ'' என்று லக்ஷ்மணனைப்பார்த்து, "பரதனுக்கு அடுத்து முன்னோடி பிறந்த அவன் தமையனான லக்ஷ்மணனே! ஸீதையை அழைத்துக்கொண்டு முன்னோடி செல். நான் பின்னோடி வருகிறேன்" என்று ஸ்ரீ ராமர் சொல்லியிருப்பதாய் வால்மீகி அறிவித்திருக்கிறார்.

20. இவ்வாறு லக்ஷ்மணன் பரதனுக்கு தமயன் என்பதை ஸ்பஷ்டமாய் அறிவித்ததுமல்லாமல் எல்லோரும் ஸ்பஷ்டமாய் ஊகிக்க நிர்விவாதமாய் நிச்சயிக்கும்படி கதையின் சந்தர்ப்பத்தையும் வால்மீகி எடுத்துக்காட்டியிருக்கிறார். ராகவன் அயோத்திக்கு திரும்பிவந்தவுடன் பரதன் ராகவனை ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்துவிட்டு "ததோ லக்ஷ்மணமாஸாத்ய வைதேஹீம் சாப்யவந்தயத்| அபிவாத்ய தத: ப்ரீத: பரதோ நாம சாப்ரவீத்" (யுத்த. 130 சர். 39 சுலோ.) பிறகு லக்ஷ்மணனிடம் வந்து அவனை நமஸ்கரித்தான். பிறகு வானர ஸ்திரீகளின் நடுவில் உட்கார்ந்திருந்த ஸீதையிடம் வந்து அவளையும் நமஸ்கரித்தான். சந்தோஷமாய் இவ்வாறு நமஸ்கரித்து பரதன் நான் நமஸ்கரிக்கிறேன் என்று தன் பெயரைச் சொல்லிக்கொண்டான் என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையாய் லக்ஷ்மணன் பரதனுக்கு தம்பியாய் இருந்தால் பரதன் தன் நாமகோத்திரத்தைச் சொல்லி அஹம் போ: அபிவாதயே என்று காதைப் பிடித்துக்கொண்டு லக்ஷ்மணனுக்கு சாஷ்டாங்கம் நமஸ்கரித்திருப்பானா என்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். வால்மீகி இதைவிட ஸ்பஷ்டமாய் விஷயங்களை எடுத்துச்சொல்ல முடி-



யாதாதலால் இந்த வாக்யம் பரதனுக்கு லக்ஷ்மணன் தமயன் என்பதற்கு யாவரும் ஆக்ஷேபணை சொல்ல முடியாததான நிரவகாசமான பிரமாணமாகும்.

21. இதற்கு அடுத்த சந்தர்பத்தில் நடந்த நிகழ்ச்சியாலும் லக்ஷ்மணன் பரதனுக்கு தமயன் என்பது ஏற்படுகிறது. ராகவன் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்டவுடன் தனக்கு அடுத்த ஸ்தானமான யுவராஜ பதவி தன் அடுத்த தம்பியான லக்ஷ்மணனுக்குத்தான் நியாயமாய் கிடைக்கவேண்டியது முறை என்று கருதி, "உவாச லக்ஷ்மணம் ராம: தர்மக்ஞம் தர்மவத்ஸல:| ஆதிஷ்ட தர்மக்ஞ மயா ஸஹேமாம்காம் பூர்வராஜாத்யுஷிதாம் பலேன| துல்யம் மயாத்வம் பித்ருபி: த்ருதா யாதாம் யௌவராஜ்யே துரமுத்வஹஸ்வ| ஸர்வாத்மனா பர்யனுனீயமான: யதா ந ஸௌமித்ரி: உபைதியோகம்| நியுஜ்யமானோபி ச யௌவராஜ்யே ததோப்யஷிஞ்சத் பரதம் மஹாத்மா" (யுத்த. 131 சர். 88-89 சுலோ.) லக்ஷ்மணனை யௌவராஜ்ய பதவியை ஏற்றுக்கொள்ளும்படி பலவாறு கேட்டு அவர் ராம கைங்கர்யத்தைத்தவிர வேறெந்த பதவியையும் வேண்டேன் என்று நிர்ணயாசாரியான் அறிவித்தவிதமாய்ச்சொல்லி அதை ஏற்க முற்றிலும் மறுத்தவிட்டபிறகுதான் பரதனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்யப்பட்டதென்று வால்மீகி ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார். இதும் லக்ஷ்மணர்தான் ஜேஷ்டர் என்பதற்கு நிரவகாசமான பிரமாணமாகும்.

22. பிற்பாடும் உத்தர காண்டத்தில் லவணாஸுரனை ஸம்ஹரிக்க சத்ருக்னன் புறப்பட்ட சமயத்தில் "ராமம் ப்ரதக்ஷிணீ க்ருத்ய சிரஸாபி ப்ரணம்ய ச| லக்ஷ்மணம் பரதம் சைவ ப்ரணிபத்ய க்ருதாஞ்ஜலி:"|| (உத். 64 சர். 17 சுலோ.) ராமன் லக்ஷ்மணன் ப்ரதன் இவர்களை வரிசைக்கிரமமாய் நமஸ்கரித்ததாய் அறிவித்திருக்கிறார். பரதன் லக்ஷ்மணனுக்கு தமயனாயிருக்கும் பக்ஷத்தில் ஸர்வ கனிஷ்டனான சத்ருக்னன் பரதனை நமஸ்கரித்த பிறகுதான் லக்ஷ்மணனை நமஸ்கரித்திருக்கவேண்டும். இதனால் லக்ஷ்மணன் பரதனுக்கு தமயன் என்பதை வால்மீகி ஸ்பஷ்டமாய் அறிவித்திருப்பதாய் நிச்சயிக்கவேண்டும். ஆகவே இந்த வாக்யமும் பிரமாணமாகும். இன்னமும் ஆராயப்புகுந்தால் எண்ணிறைந்த பிரமாணங்கள் லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்பதற்கு வால்மீகி ராமாயணத்தில் இருந்துவருகின்றன. மேற்கண்ட சில பிரமாணங்கள் மட்டில் திருஷ்டாந்தமாக இங்கு கூறப்பட்டிருக்கின்றன.

வால்மீகியின் வாக்யங்கள் பலசந்தர்பங்களில் பரதத்வ விஷயத்தை அறிந்துகொள்வதிலும் ஸ்ரீராகவனுடைய ஸர்வோத்தமத்தன்மையை அறி-

வதிலும் சாமானியர்கள் மோஹிக்கும்படி காணப்படுவதால் அந்தவால்மீகியின் ஸ்ரீமத்ராமாயணத்திற்கு வியாக்யான ரூபமாயும் மூலராமாயணத்தின்படி காட்டிய ஸ்ரீபகவத் பாதாளின் நிர்ணயத்துக்கு ஒட்டினதாயும் ஸ்ரீபகவத்பாதாளின் சாக்ஷாத்சிஷ்யரின் குமாரரும் அவரை நேரில் பார்த்து அவருடைய உபதேசாதிகளைப் பெற்றவரும் ஸம்சாரத்தைக்கடந்தவரும் ஜயதீர்த்தாதிகளுக்கும் வெகு ப்ராசீனருமான ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய அற்புதமானதும் நம்மவர்களின் பிரமாண கிரந்தமானதுமான ஸப்தகாண்டங்களடங்கிய ஸ்ரீ ஸங்கிரஹ ராமாயணத்தை விமரிசை செய்தாலும் லக்ஷ்மணன்தான் பரதனுக்கு ஜேஷ்டன் என்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. திருஷ்டாந்தமாய் இங்கு சில பிரமாணங்கள் காட்டப்படுகின்றன.

(1) "கௌஸல்யாமத கல்யாணீம் அஹூய மஹிஷீம் ப்ரியாம் || பாமான்னம் ததௌ அர்த்தம் பரம் தஸ்யை நராதிப:|| அர்த்தாதர்த்தம் ததோ யக்தம் விபக்தம் பக்திமான் ஹரௌ || பவித்ரம் ஸௌமித்ராயை ஸுஸ்மிதாயை ததாவத || தஸ்மாத் அர்த்தாத் அவௌ அர்த்தம் கைகேய்யை ப்ராதி தத்தவான் || பரமர்த்தம் ஸௌமித்ராயை புனரேவ ப்ரதத்தவான் || (பால. 3 சர். 6-8 சுலோ.) என்று கௌஸல்யைக்கு பாயஸத்தின் பாதிபாகமும் அடுத்தபடி ஸௌமித்ரைக்கு கால்பாகமும் அடுத்தபடி கைகேயிக்கு அரைக்கால் பாகமும் அடுத்தபடி மீண்டும் ஸௌமித்ரைக்கே பாக்கி அரைக்கால் பாகமும் கொடுபட்டதாய் வால்மீகி அறிவித்தபடியே அறிவித்திருக்கிறார். கால்பாகம் கொடுக்கப்பட்டவுடன் ஸௌமித்ரை தன் முகத்தை சுணக்கிக்கொண்டாள் என்று ஒருவர் சந்தேகித்தது சரியல்லவென்று காட்டத்தகும், அவள் அச்சமயமும் புன்சிரிப்புடனிருந்ததாக இங்கு சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

(2) நாமகரண ப்ரகரணத்திலேயும் பரதனுக்கு முன் லக்ஷ்மணனுக்கு பெயரிடப்பட்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது. (பால. 3 சர். 45-46 சுலோ.)

(3) விவாக ப்ரகரணத்திலேயும் வால்மீகியின் வசனத்தின்படியே லக்ஷ்மணனுக்கு பிற்பாடுதான் பரதனுக்கு விவாகமானதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (பால. 8 சர் 37 சு.)

(4) அயோத்யைக்கு ராகவனை திரும்ப அழைத்து வருவதாய் பரதன் சபதம்செய்யும் ப்ரகரணத்தில் "ஆர்யாப்யாம் நகரே ஸ்தேயம் தெய்வம் தத்ரானுமோததாம் (அயோ. 12 சர். 42 சுலோ.) என் ஜேஷ்ட ப்ராதாக்களான ராமலக்ஷ்மணர்கள் ஊரிலேயே இருக்கும்படி தெய்வம்தான் துணைபுரிய வேண்டுமென்று பரதன் சொன்னதாய் அறிவித்திருக்கிறார். இதில் ராமலக்ஷ்மணர்களை பரதன் ஆர்யர்கள் மூத்தவர்கள் என்று அழைத்தது குறிப்பிடத்தக்கது.



(5) ராகவன் பதினான்கு வருஷம் வனவாஸம் முடித்து அயோத்திக்கு வந்ததும் பரதன் ராகவனுக்கு நமஸ்காரம் செய்ததுமன்றி "வைதாயா: லக்ஷ்மணஸ்யாபி வவந்தே சரணௌ வெவள" (யுத். 15 ஸர். 52 சுலோ.) சீதையுடையவும் லக்ஷ்மணனுடையவும் கால்களில் நமஸ்கரித்தான் என்று வால்மீகியின் வார்த்தையை ஒட்டியே அறிவித்திருக்கிறார்.

(6) ராகவன் தனக்கு பட்டாபிஷேகமானதும் லக்ஷ்மணனை யுவராஜாவாய் அபிஷேகம் பெற கேட்டுக்கொண்டதாயும் ராகவனின் பாத ஸேவையைத்தவிர வேறு எதும் வேண்டாமென்று அவர் மறுத்துவிட்டதால் பரதனுக்கு யுவராஜ்யாபிஷேகம் செய்ததாயும் வால்மீகி அறிவித்தபடியே அறிவித்திருக்கிறார். (உத். 2 சர். 1-3 சுலோ.)

(7) லவணாஸுர வதத்தைச் சொல்லும் பிரகரணத்தில் ராகவன் கேட்டதற்கு லக்ஷ்மணன் அவனைக்கொல்ல முந்திக்கொள்ள, சத்ருக்னன் அந்த சபையில் எழுந்துநின்று "ஆர்யோமே மத்யமோ தன்ய: த்வச்சுச்ருஷாம் வனே அகரோத் || பரதேன மஹார்யேண மயி ஜீவதிஸிங்கரே | சதுர்தச ஸமா: தப்தம் த்வத்ப்ரீத்யை பூமிசாயினா||" (உத். 3 சர். 32 சுலோ.) அண்ணா! தங்களுக்கு என் நடு அண்ணாவான லக்ஷ்மணர் வனவாஸத்தில் விசேஷமான கைங்கரியத்தைச் செய்தார், என் அடுத்த அண்ணாவான பரதன், அவருக்கு எதையும்செய்ய தாஸனாய் காத்திருக்க நான் பிழைத்திருக்கையில், பதினான்கு வருஷம் தரையில் படுத்து தங்கள் பிரீதிக்காக கைங்கரியம் செய்தார். நான் தங்கள் கைங்கரியமாக இப்போது லவணாஸுரனை சம்ஹரிக்கிறேன்" என்று சொன்னதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சத்ருக்னனுக்கு அண்ணன்மார்கள் ராமன் லக்ஷ்மணன் பரதன் ஆவர்கள். இந்த அண்ணன்மார்களில் லக்ஷ்மணன் மத்யம அண்ணாவான், வனவாஸத்தில் ராகவனுக்கு மகா சேவை செய்தவன் மத்யமனான ஆர்யன் அண்ணா என்று வியக்தமாய் சொல்லியிருப்பதைக்கொண்டும் அடுத்தபடி பரதனையும் வியக்தமாய் சொல்லியிருப்பதைக்கொண்டும் லக்ஷ்மணன் நடுவிலுள்ள அண்ணா என்று ஏற்படுவதோடு ராமன் லக்ஷ்மணன் பரதன் ஆகிய இம்மூவர்கள் வரிசைக்கிரமமாய் சத்ருக்னனுக்கு தமையனார்களென்றும் பரதனுக்கு லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்பதும் நிர்விவாதமாய் அனைவரும் அறிந்துகொள்ளும்படி ஸ்ரீநாராயண பண்டிதாசாரியான் அறிவித்திருக்கிறார்.

ஆகவே (1) மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (2) வால்மீகி ராமாயணம் (3) ஸங்கிரஹ ராமாயணம் இம்மூன்று நூல்களும் லக்ஷ்மணன்

பரதனுக்கு ஜ்யேஷ்டன் என்பதையே வியக்தமாய் அறிவிக்கின்றன. அப்படியேதான் இந்நூல்களுக்கு வியாக்யானம் செய்த ஆத்யம் வாதிராஜாசாரியார், ஜநார்த்தன பட்டர், இவருடைய வியாக்யானத்திற்கு மூலபூதமான வியாக்யானம் செய்த வேதாங்க தீர்த்தர், தாம்ப்ரபர்ணி விட்டலாசாரியாரின் சிஷ்யர் ஸ்ரீநிவாஸ தீர்த்தர், ஸ்ரீ ஸத்யதர்மஸ்வாமிகள், ஸ்ரீபதி தீர்த்தர், விச்வபதி தீர்த்தர் முதலான ப்ராசீன வியாக்யாதாக்களான நம்மவர்கள் எல்லோரும் ஏகோபித்து லக்ஷ்மணன் பரதனுக்கு தமையன் என்றே அபிப்ராயப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு நம்மவர்களின் நூல்கள் யாவும் சரியே, ஸ்ரீ வால்மீகி ராமாயணமும் சரியே லக்ஷ்மணன் பரதனுக்கு தமையன் என்று அறிவிப்பதாயிருக்கும் பக்ஷத்தில் அதற்கு மாறாக பரதன் ஜேஷ்டன் என்று நம்மவர்களில் ஒரு சிலர் வாதிப்பதற்கு காரணம் என்னவென்று யாவரும் பிரச்னம் செய்யக்கூடும். ஆதலால் அதைப்பற்றி நாம் சிறிது இங்கு சொல்லவேண்டியிருக்கிறது. ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திற்கு செய்திருக்கும் வியாக்யானத்தில் பரதன் லக்ஷ்மணனுக்கு ஜேஷ்டன் என்று சொல்லியிருப்பதாய் நம்மவர்களில் ஒரு சிலர் தப்பாய் அர்த்தம் செய்துகொண்டனர். ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகள் பிரம்மபதவிக்கு வரப்போகும் ருஜுகணத்தார்களில் ஒருவர் என்றும் ஆதலால் வாயுபகவானின் அவதாரமான ஸ்ரீமத்வாசாரியாருக்கு ஸமமானவர் என்றும் அவர்கள் அபிப்ராயங்கொண்டிருப்பதால் மற்றவர்கள் யாவரும் லக்ஷ்மணனை பரதனைவிட ஜேஷ்டன் என்று அறிவித்திருப்பினும் ருஜுகணத்தாராகிய ஸ்ரீ வாதிராஜரின் வாக்யம் பரமப்ரமாணம் என்றும் இதரர்களின் வாக்யம் அதற்கு மாறாயிருந்தபோதிலும் சிரமப்பட்டாவது இதரர்களின் அந்த வாக்யங்களை இவருடைய அபிப்ராயத்துக்கு ஒத்துவரும்படி அர்த்தம் செய்யவேண்டியதவசியமென்றும் அவர்கள் வாதித்தனர். அவ்வாறே அந்த சாரார்களில் பிரசாரம் செய்தனர் ஆகவேதான் நம்மவர்களில் அபிப்ராயபேதம் ஏற்பட்டதென்று சுருக்கமாய்ச் சொல்லவேண்டும்.

ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் ஸ்ரீமத்வாசாரியாருக்கு ஸமமானவர் என்பதும் ருஜுகணத்தார்களில் சேர்ந்தவர் என்பதும் இந்த வகுப்பார் காட்டும் பிரமாணங்களைகொண்டு ஏற்படுவதில்லையாதலால் இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட இடமில்லை என்று பல வருஷங்களுக்கு முந்தி நம்மவர்களில் அநேக மடாதிபதிகளுள்பட பெருங்கோஷ்டியினர் பலமாக ஆக்ஷேபித்தார்களாயினும் ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகள் அநேக அரிய பெரிய நூல்களைச்செய்த ஞானிவர்யர் என்பதும் ஸ்ரீ ஹயக்ரீவரை ப்ரத்



யக்ஷமாக்கிக்கொண்ட மகாயோகீசுவரர் என்பதும் யாவரும் ஒப்புக்கொண்டதேயாகும். ஆகையால் ஸ்ரீவாதிராஜர் சொல்லிவிட்டார் என்பதைக்கொண்டு மட்டில் காரணங்களை விசாரியாமல் ஸ்ரீ பகவத்பாதாளின் வார்த்தைகளை ஏற்பதுபோல் ஏற்றுக்கொள்ள நம்மவர்களில் அபிப்ராயபேதமிருப்பினும் மகாஞான அவருடைய வாக்யங்களில் ப்ராமாண்ய புத்தியை யாவரும் விசேஷமாய் வைத்திருக்கின்றனர். ஆகவே அவருடைய வியாக்யானமும் லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்பதற்கு ஸாதகமா பாதகமா என்பதை சிறிது ஆராய்வோம்.

(தொடரும்)

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(முன் 304ம் பக்கம் தொடர்ச்சி.)

## இருபத்தி எட்டாவது அத்தியாயம்.

### பாண்டவர்கள் வெற்றியுடன் திரும்பியது.

வேதங்களுக்கு ஸ்வாமியும் யாதவச்ரேஷ்டனும் கிருஷ்ணரென்னும் பெயரால் சொல்லப்படுகிறவருமான ஸ்ரீகிருஷ்ணர் வேதவியாஸர் இவர்களுடன் சேர்ந்த பாண்டவர்கள் பிறகு சத்ருக்களைக்கொன்று, சாதுக்களுக்குள் இருந்துவரும் சத்ருக்களான காமக்ரோதாதிகளை நாசம்செய்து, பகவானுடைய ராஜ்யமான மோக்ஷத்தை அடைவதுபோல், பத்னிமார்களுடன் தன்னுடைய ராஜ்யமான ஹஸ்தினாபுரத்தை அடைந்தார்கள்.

### திருதராஷ்டிரனின் பகை.

தர்மபுத்திரரை நமஸ்காரம் செய்தபின் திருதராஷ்டிர ராஜாவின் பாதத்தில் நமஸ்காரம்செய்யும் பீமசேனரை ப்ரமேச்வரனை ஸ்ரீகிருஷ்ணர் பின்னடி இழுத்து எஃகினால் செய்யப்பட்டதான பீமசேனரின் விக்ரஹத்தை திருதராஷ்டிரனின் முன்புவைத்தான்.

துரியோதனன் கதாவித்யையை அப்யஸிக்கும் காலத்தில் துரியோதனனால் செய்யப்பட்டதான பீமசேனனுடைய விக்ரஹத்தை திருதராஷ்டிரராஜன் இறுக அணைத்து அதை பொடியாக்கினன். திருதராஷ்டிரன் ரக்தத்தைக் கக்கிக்கொண்டு அய்யோ! குழந்தாய் பீமசேனா என்று சொல்லிக்கொண்டு பூமியில் விழுந்தான். அப்பொழுது திருதராஷ்டிரனைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னதாவது:—இப்பொழுது பீமசேனர் கொல்லப்படவில்லை. உன்னாலும் மற்றதேவாசுரர்களாலும் பீமசேனன் கொல்லப்படமுடியாதவன். இப்பொழுது உன்னுடைய துர்புத்தி பிரஸித்தமாயிற்று. உன்னுடைய பிள்ளைகள் இறந்தபோயும் உன்னுடைய புத்தி பாபத்திலேயே ஈடுபட்டிருக்கிறது. உன்னுடைய புத்தி தோஷத்தால் மகாபாப ஸ்வபாவமுள்ள உன் பிள்ளைகள் என்ற பாபங்களை விருத்தியாக்கி அவர்களுக்கு அதீனனானாய். இப்பொழுது அந்த பாபபலனை அனுபவிக்கிறாய். பீமசேனனிடம் கோபம் செய்யத்தகுதியுள்ளவனாய் ஆகாதே என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லவும் திருதராஷ்டிரனால் ஸாந்தமான புத்தியாலேயே அழைக்கப்பட்ட பீமசேனர் திருதராஷ்டிர ராஜாவின் பாதங்களை நமஸ்காரம் செய்தான். பீமசேனரின் தம்பிகளான அர்ஜுனாதிகளும் துரௌபதி முதலான ஸ்திரீ ஜனங்களும் நமஸ்காரம் செய்தனர். பீமசேனர் கொல்லமுடியாதவராய் இருக்கும்பொழுது அவரை ஸ்ரீ கிருஷ்ணர் ஏன் பின்னடி இழுத்தார் என்றால் வஜ்ஜிராயுதத்தை விட திடமான சரீரம் கொண்டதால் பீமசேனரைக் கொல்லவேண்டுமென்று திருதராஷ்டிரன் யத்தனப்பட்டாலும் அவர் விகாரமற்றிருந்தால் திருதராஷ்டிர ராஜனுடைய புத்திதோஷம் வெளிக்கெரியமாட்டாது என்றும் அது வெளியாகவேண்டுமென்றும் ஸ்ரீகிருஷ்ணர் பீமசேனரின் லோஹ விக்ரஹத்தை உருட்டினர்.

## காந்தாரியின் கோபம்.

பிறகு திருதராஷ்டிரன் ஐந்து பாண்டவர்களையும் ஸ்நேகத்தால் ஆலிங்கனம் செய்துகொண்டு ஆசீர்வாதம் செய்தார். நான் குலநாசம் செய்த பாபி. உன் சாபத்திற்கு அருகனானவன் என்று சொல்லிக்கொண்டு நமஸ்காரம் செய்யும் தர்மபுத்திரனின்



அழகான கால் விரல்களை மகா கோபிஷ்டளாய் காந்தாரி தேவி தன் கண்களுக்கு கட்டியிருக்கும் வஸ்திரத்தின் ஓட்டை வழியாய் பார்த்தாள். அவளுடைய கோபாக்னியால் விரல் நகங்கள் சுட்டுப்போய் தர்மபுத்திரர் கந்திப்போன நகமுள்ளவரானர். பிறகு நமஸ்காரம் செய்த பீமசேனரை கோபத்தால் நடுங்கும் காந்தாரி "ஹே பீமா! என் மகனை துரியோதனனை அதர்மத்தால் எப்படிக்கொன்றாய்" என்று கேட்டாள். இப்படிச்சொல்லப்பட்ட பீமசேனர் காந்தாரியின் கோபத்தை சமனம் செய்ய துவக்கத்தில் இவ்வாறு சொன்னர். பிராணன் நிற்குமோ நிற்காதோ வென்ற சந்தேகம் ஏற்படும் காலத்தில் பாபியை அதர்மத்தால் கொன்றால் பாபமில்லை. என்று பதில்சொல்லி அவனுடைய தொடையை சேதிக்காமல் இருக்கும்பக்ஷத்தில் என் ப்ரதிக்ஞைக்கு பங்கம் ஏற்படுமேயல்லாது தன் பிராண சந்தேகம் இல்லை என்ற அறிந்த பீமசேனர், மறுபடியும் பேசினர். நான் செய்த பிரதிக்ஞையின்படி சத்ருக்களை யுத்தத்தில் ஸம்ஹாரம் செய்த க்ஷத்திரிய ஜாதியான எனக்கு அதர்மம் ஏது? ப்ரதிக்ஞையை விட்டால் நான் உயிரோடிருப்பது வீண். மற்றொரு காரணமும் உண்டு. பாபிகளை சுத்தமான தர்மத்தைக்கொண்டு கொல்லகூடாது என்று வேதமிருக்கிறது. தர்மிஷ்டர்களை கொல்வதுபோல் பாபிஷ்டர்களைக்கொல்வது பாபஸாதனம் என்று வேதம் சொல்கிறது. ஆகையால் வஞ்சகர்களான தைத்யர்களை தேவர்கள் வஞ்சனையால் கொல்கின்றனர். கபடத்தால் கபடமுள்ளவர்களைக் கொல்ல வேண்டும். கபடத்துடன் தர்மிஷ்டர்களை ஸம்ஹரிக்கலாகாது என்று அபௌருஷேயமான சுருதி பைங்கி என்னும் ரிஷி கணத்தால் ஒரேவிதமாய் படனம்செய்யப்பட்டிருக்கிறது. என்றிவ்வாறு பீமசேனரால் சொல்லப்பட்ட காந்தாரி, ஹேபீமா! நீ மனுஷ்யனாய் இருந்து மனுஷ்யனை துச்சாசனனுடைய ரக்தத்தை எப்படி குடித்தாய் என்று கேட்டாள். அதற்கு பீமசேனர் நான் அந்த ரக்தத்தை குடிக்கவில்லை. உன்மகனின் ரக்தம் என் பற்களில் போகவில்லை. நான் செய்த ப்ரதிக்ஞையைக்காப்பாற்றிக்கொள்ளவும் துரௌபதி வஸ்திராபஹரணம் முதலியவைகளுக்கு பதில் செய்வதற்காகவும், இந்த காரியம் செய்தேன். சத்ருக்களுக்கு பயத்தை உண்டுபண்ணுவதற்காக ரக்தபானம் செய்ததுபோல்

காட்டிக்கொடுத்தேன். பாபிகள் விஷயத்தில் ப்ரதிக்ஞையை சம்ரக்ஷித்துக்கொள்வதே தர்மம் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று பீமசேனர் பதில் சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட காந்தாரி தேவி, ஹே பீமசேன! நூறு பிள்ளைகளையும் சம்ஹரித்த நீ இரண்டு குருடர்களான எங்களுக்கு ஊன்றுகோலாக ஒரு பிள்ளையையும் கொல்லாமல் ஏன் பாக்கி வைக்கவில்லை என்று கேட்க, பீமசேனர் சொன்னதாவது,—உன் எல்லா பிள்ளைகளும் பாபிஷ்டர்கள். சம்ஹாரத்திற்கு யோக்யமான குற்றத்தைச் செய்தவர்கள். ஆகவே அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்றார். மறுபடியும் காந்தாரி பேசினாள். உனக்கு அபராதம் செய்யாத என் மகன் ஒருவனுமில்லையா என்று கேட்க பீமசேனர் சொன்னதாவது,— உன்னுடைய பிள்ளைகள் நூறு பேர் சேர்ந்துதான் ஸ்ரீகிருஷ்ணனை கட்ட நிச்சயித்தார்கள். இந்த யுத்தத்திலேயும் பால்ய சமயத்திலேயும் எல்லோரும் சேர்ந்துதான் மற்ற மகா பாப காரியங்களை செய்திருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணர் சபையில் உட்கார்ந்துகொண்டு தர்ம சாஸ்திரத்தை எடுத்துச் சொல்லும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனை அலக்ஷியம்செய்து அடிக்கடி ஸபையைவிட்டு வெளியே போய்க்கொண்டிருந்த துரியோதனனின் பின்னாடி இவர்கள் எல்லோரும் போனார்கள். இது முதலான அகார்யங்களை நிச்சயித்துத்தான் எனக்கு குற்றம்செய்யாத ஓர் பிள்ளையும் இல்லை என்றேன். அந்த உன் பிள்ளைகளை சுயம் கண்டிக்க சாமர்த்தியமில்லாதிருந்த காந்தாரியே! என்னிடம் ப்ரயோஜனமின்றி ஏன் கோபம் செய்தாய் என்று பீமசேனரால் சொல்லப்பட்ட காந்தாரி சும்மாயிருந்தாள். பிறகு ப்ரியமாய் எல்லா பாண்டவர்களாலும் நமஸ்காரம் செய்யப்பட்ட காந்தாரி தேவி ஸ்ரீவேதவியாஸரின் வாக்யத்தால் சிறிது கோபத்தை தணித்துக்கொண்டாள். இத்துடன் விசோக பர்வகதை முடிந்தது.

## ஸ்ரீகிருஷ்ணருக்கு காந்தாரியின் சாபம்.

எல்லா நாட்டுப்பெண்களுடன் கூடிய காந்தாரியையும் திருதராஷ்டிரர் விதுரர் இவர்களையும் முன்னிட்டுக்கொண்டு பத்னிமார்களோடும் குந்தியோடும் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ வேதவியாஸர் இவர்களோடும் சேர்ந்து எல்லா பாண்டவர்களும் யுத்தபூமிக்கு வந்தார்



கள். காந்தாரியின் தபஸ்ஸின் சக்தியை அறிந்து பாண்டவர்களை காப்பாற்றுவதற்காக காந்தாரியின் தபஸ்ஸை நாசம் செய்ய இச்சைப்பட்டவராய் ஸத்யவதீ புத்ரரான ஸ்ரீ வேதவியாஸர் காந்தாரிக்கு திவ்ய கண்களைக்கொடுத்தார். அதனால் யுத்தபூமியில் கிடந்த எல்லா சவங்களையும் பார்த்து துக்கமடைந்து காந்தாரி ஸ்ரீ கிருஷ்ணனுக்கு சாபம் கொடுத்தாள் கிருஷ்ண! நீ எங்கள் குலத்தை நாசம் செய்ததால் உன் குலமும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு நாசமடையட்டும். இவ்வாறு சொல்லப்பட்ட ஸ்ரீகிருஷ்ணர் தானே இச்சித்த யாதவகுலத்தின் நாசம் நீ சாபம் கொடுத்தபடியே ஆகட்டும் என்று சொல்லி அந்த சாபத்தை மாற்ற சாமர்த்தியமுள்ளவராயினும் விபுவாயினும் பகவானாயினும் அதையே ஆமோதித்தார். ஸ்ரீகிருஷ்ணனுக்கு சாபம் கொடுத்ததால் காந்தாரியின் தபஸ் நஷ்டமடைந்தது. அதனால் அவளுடைய பர்த்தாவுக்கு அவள் குறைந்தவளானாள். ஒருவனுக்கு அதிகமான குணங்களை விட அதிகமான குணங்களை ஸ்ரீ விஷ்ணு அளிக்கிறார்.

## ஸ்ரீகிருஷ்ணர் ப்ரதிக்ஞையை ரக்ஷித்தல்.

பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் அவரவர்களின் புருஷர்களின் சவங்களை கட்டிக்கொண்டு அழும் துரியோதனாதிகளின் ஸ்திரீ ஜனங்களை த்ரௌபதிக்கு காட்டினார். த்ரௌபதி ஷட்குணபூர்ணரான அந்த ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்தாள். பிறகு பாண்டவர்கள் ப்ரஸித்தர்களான சல்யராஜன் முதலான ஸாது ஜனங்களின் சரீரத்தை தகனம் செய்தார். சில சரீரங்களை பாண்டவர்கள் தங்கள் ஐந்து சாரதிகளைக்கொண்டு ஸரஸ்வதி நதியில் போடச் செய்தார். தர்மபுத்திரரும் நகுலனும் ஸகதேவனும் இறந்தவர்கள் தங்கள் பந்துக்கள் என்ற சினேகத்தால் இவ்வாறு சவங்களை யுத்தபூமியினின்றும் ஸரஸ்வதியில் போடச்செய்யும் வேலையில் ஸாரதிகளை ப்ரேரிபித்தார். சவங்கள் அதிகமாய் இருந்ததால் பெரும்பாலும் இறந்தவிடத்திலேயே விழுந்திருந்தன. பிறகு திருதராஷ்டிரன் முதலியோர் தங்கள் சொந்த ஜனங்களுக்கு கங்கையில் தர்மோதகம் விடும்பொழுது குந்தி, கர்ணனுக்கும் நீங்கள் தர்மோதகம் விடுங்கள், அவன் உங்களுக்கு தமையன் என்று பாண்டவர்களிடம் சொன்னாள்.

இதைக்கேட்டு தர்மபுத்திரர் ஹா ஹா வென்று சொல்லிக் கொண்டு ப்ரலாபம் செய்து மகா துக்கமடைந்தார். இனி எல்லா ஸ்திரீகளின் மனதில் ரகஸ்ய வார்த்தை நிலைநிற்க வேண்டாம் என்று சாபம் கொடுத்தார். தாயே! உன்னுடைய மகா மைதயத்தால் நாமெல்லோரும் கெட்டுப்போனோம். ஐயோ! தந்தைக்கு ஸமானனை எங்கள் ஜேஷ்ட ப்ராதாவான கர்ணனைக் கொன்று எந்த நரகத்தை நாம் அடையப்போகிறோமோ என்று சொல்லும் தர்மபுத்திரனை, ஸ்ரீ கிருஷ்ணர் நாரதரோடு சேர்ந்து அநேகமான வாக்யங்களால் சமாதானம் செய்தார். நாரதர் கர்ணனுடைய சௌர்யம் முதலிய குணங்களை எடுத்துச்சொன்னார். பிறகு எல்லா பாண்டவர்களும் கர்ணனுக்கு எல்லா ப்ரேத காரியங்களையும் செய்தார்கள். இத்துடன் ஸ்திரீ பர்வம் முடிந்தது. பிறகு தர்மபுத்திரர் எல்லா அரசர்களின் ஸாம்ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் பெற்றார். இது சாந்தி பர்வம் கதை ஆரம்பமாகும்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் இருபத்தி எட்டாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

## விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 313ம் பக்கம் தொடர்ச்சி.)

11. பரமாத்மா (ஓம் பரமாத்மனே நம:) உத்தமமான ஆத்மா. சத்ருக்களை ஹிம்ஸிக்கும் ஸ்வபாவமுடையவர். உத்தமியான ரமாதேவியின் பதி. ஜகத்தை ஸம்ரக்ஷிக்கும் ரமாதேவியின் பதி. தன்னைச்சேர்ந்தவர்களென்று அடியார்களை ஏற்றுக் கொள்ளும் உத்தமர். உலகத்தை நிர்மாணம் செய்வதை ஏற்றுக் கொள்ளும் உத்தமர். க்ஞானத்தை ஏற்றுக்கொள்ளும் உத்தமர். ஸமஸ்த குணங்களுள்ள உத்தமர்.



12. முக்தானாம் பரமாகதி: (ஓம் முக்தானாம் பரமகதயே நம:) உத்தமர்களால் அடைய கூடியவர். முக்தர்களுக்கு உத்கிருஷ்டமான கதி.

13. அவ்யய: (ஓம் அவ்யயாய நம:) சூரியனை போதும்படி செய்பவர். ஆடுபோல் சத்ருக்களிடத்தில் பாய்கிறவர். நாசமற்றவர். விகாரமற்றவர்.

14. புருஷ: (ஓம் புருஷாய நம:) சிருஷ்டிக்கு முன் முதல் இருப்பவர். அதிகமான லீலைகளுள்ளவர். பல தைத்யர்களை நாசம் செய்யும் பரமாத்மா. பூர்ணமான மோக்ஷமாகிய பலனை அல்லது தன்னையேதான் கொடுக்கிறவர். எல்லா தேசத்திலுமிருப்பவர்.

15. ஸாக்ஷீ (ஓம் ஸாக்ஷிணே நம:) எல்லாவற்றையும் நேரில் பார்ப்பவர். ஸகலக்ஞர்.

16. க்ஷேத்ரக்ஞ: (ஓம் க்ஷேத்ரக்ஞாய நம:) ப்ரமாணங்களால் ப்ரஸித்தமாகவுள்ள அவ்யக்த தத்வம் முதலிய சரீரத்தை அறிந்தவர். யஸ்யாவ்யக்தம் சரீரம் என்று வேதம் காட்டுகிறது. மகாபூதான்ய ஹங்காரோ புத்திரவ்யக்தமேவச| இந்திரியாணி தசைகம்ச பஞ்சசேந்திரிய கோசரா:| இச்சாத்வேஷ: ஸுகம் துக்கம் ஸங்காத ஸ்சேதனாத்ருதி:| ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகார முதாஹ்ருதம்|| பிருதிவீ, ஜலம் அக்னி வாயு ஆகாசம் என்னும் பஞ்சமகாபூதங்கள் மகத்தத்வத்துடன் சேர்ந்த அகங்கார தத்துவம், புத்திதத்வம் அவ்யக்ததத்வம் பதினொன்று இந்திரிய தத்வங்கள், சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் என்னும் இந்திரிய விஷயங்கள் இவை இருபத்திநான்கு தத்வங்களும் க்ஷேத்ரமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை அறிந்த க்ஷேத்ரக்ஞன், க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி என்றும் ப்ரமாணத்தின்படி ஸ்ரீ கிருஷ்ணரான நாராயணர் தான். சரீரம் அநித்யமென்னும் ஞானமுள்ளவர்.

17. அக்ஷர: (ஓம் அக்ஷராய நம:) நாசமில்லாதவர். கண் முதலிய இந்திரியங்களில் விளையாடுகிறவர், நாசமில்லாததான வைகுண்டாதிகளைக் கொடுப்பவர். அந்த வைகுண்டாதிகளில் வசிப்பவர்.

18. யோக: (ஓம் யோகாய நம:) யோகிகளால் ஹ்ருதயத்தில் தியானிக்கப்படுகிறவர். தன்னிடம் குணங்களைச் சேர்த்துக் கொள்பவர். பக்தர்களுக்கு ஸம்ஸாரத்தை தாண்டும் உபாயமாயிருப்பவர். முக்திக்கு உபாயமாயிருப்பவர்.

19. யோகவிதாம் நேதா (ஓம் யோகவிதாம் நேத்ரே நம:) சமாதியை அறிந்த ஞானிகளுக்கு மோக்ஷ பலனை அளிப்பவர், ஞானிகளின் யோக க்ஷேமத்தை நடத்துகிறவர்.

20. ப்ரதான புருஷேச்வர: (ஓம் ப்ரதான புருஷேச்வராய நம:) ப்ரக்ருதியான அசித்துக்கும் ஜீவர்களுக்கும் ஈச்வரனாயிருப்பவர். மிகவும் உத்தமமான காரணம் மோக்ஷணம் இவைகளை உண்டாக்குவதால் ப்ரதானனென்றும் புத்ரனான சதுர்முகனுக்கு அச்வரூபமாக இருந்து ரிக்வேதம் முதலிய வித்யையைக் கொடுப்பதால் புருஷேச்வரனென்றும் சொல்லப்படுகிறவர். ப்ரக்ருதியையும் ஜீவர்களையும் எல்லாவகையிலும் நடத்துகிறவர்.

21. நாரஸிம்ஹவபு: (ஓம் நாரஸிம்ஹவபுஷே நம:) நரனுடையவும் ஸிம்ஹத்தினுடையவும் சரீரமுள்ள நாரஸிம்ஹ சரீரமுள்ளவர்.

22. ஸ்ரீமான் (ஓம் ஸ்ரீமதே நம:) மகாலக்ஷ்மியைக் கொண்டவர். மகாலக்ஷ்மியால் தன் கணவனாய்க் கொண்டவர். காந்தியால் தன் ஆசிரியமாய்க் கொண்டவர். சுகரூபியான வாயு பகவானிடம் ஈடுபட்டவளான பாரதியாகிய ஸ்ரீயால் தன் தெய்வமாகக் கொண்டவர்.

23. கேசவ: (ஓம் கேசவாய நம:) பிரம்மாவையும் சிவனையும் நடத்துகிறவர். ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்த ப்ரம்ம ருத்திரர்களை நடத்துகிறவர். அழகான கூந்தலை உடையவர். கேசி என்ற அசுரனைக் கொன்றவர். சூரியனுடையவும் சந்திரனுடையவும் அக்னியுடையவும் கிரணங்களைக் கொண்டவர்.



24. புருஷோத்தம: (ஓம் புருஷோத்தமாய நம:) புருஷர்களுக்கு உத்தமர். புருஷர்களுள் ச்ரேஷ்டர். க்ஷராக்ஷர புருஷர்களைக்காட்டிலும் சிறந்தவர்.

25. ஸர்வ: (ஓம் ஸர்வாய நம:) வேத கோஷத்தால் சொல்லப்படுகிறவராய் அதைக்கொண்டவர். எங்கும் வியாபித்திருப்பவர். எல்லாவற்றையும் அடைபவர். எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவர் ரக்ஷிப்பவர் ஸம்ஹரிப்பவர் நடத்துகிறவர் பிரகாசிப்பவர். ஆதலால் இப்பெயர் கொண்டவர், சிரவணம் செய்பவர்.

26. சர்வ: (ஓம் சர்வாய நம:) ஹிம்ஸிப்பவர். அயோக்யர்களின் க்ஷேமத்தை அபஹரிப்பவர். பக்தர்களின் தீங்குகளை போக்குகிறவர்.

27. சிவ: (ஓம் சிவாய நம:) மங்களத்தைக்கொண்டவர். பக்தர்களுக்கு மங்களத்தை அளிப்பவர். சுகமுள்ளவர்களான முக்தர்களை நடத்துகிறவர். சிவரூபியாயிருப்பவர். மங்கள ரூபியானவர்.

28. ஸ்தாணு: (ஓம் ஸ்தாணவே நம:) எங்குமிருக்கும் அணுவாயுள்ளவர். ஸ்திரமாயிருப்பவர். ஸ்திரமான பலன்களைத்தரும் அனுக்ரஹமுள்ளவர்.

சிவஸ்தாணு: (ஓம் சிவஸ்தாணவே நம:) சிவனிடத்தில் அந்தர்யாமியாயிருப்பவர்.

29. பூதாதி: (ஓம் பூதாதயே நம:) பிராணிகளுக்கு காரணமாயிருப்பவர். எல்லா பிராணிகளாலும் ஸ்வீகரிக்கப்படுகிறவர். எல்லா பிராணிகளையும் பக்ஷணம் செய்பவர்.

30. நிதி: (ஓம் நிதயே நம:) ஸாதுக்களால் ஹ்ருதயத்தில் தரிக்கப்படுகிறவர்.

31. அவ்யய: (ஓம் அவ்யயாய நம:) ஸூர்யனிடத்தில் செல்கிறவர். அன்புடன் ஞானிகளால் தியானிக்கப்படுபவர்.

32. ஸம்பவ: (ஓம் ஸம்பவாய நம:) நன்றாய் நக்ஷத்திரங்களை நடத்துகிறவர். இச்சைப்படி அவதாரம் செய்கிறவர்.

33. பாவன: (ஓம் பாவனாய நம:) அபிப்ராயத்தை அநுபவிப்பவர். ஸூர்யாதிகளுள்ள தன் காந்தியால் பொருள்களை அநுபவிப்பவர். காந்தியின் ப்ராப்தியைக் கொண்டவர். உத்பத்தி இல்லாதவர். ஜனங்களுக்கு ஸுகத்தைத்தந்து வாழச்செய்கிறவர். அநுபவிப்பவர்களுக்கு பலன்களை அளிப்பவர். காந்தியை ப்ரவிருத்திப்பவர்.

34. பர்த்தா (ஓம் பர்த்ரே நம:) போஷகரானவர். மேலான இருப்புக்கு காரணமானவர். ஆதாரமாய் இருப்பவர். காப்பாற்றுகிறவர்.

35. ப்ரபவ: (ஓம் ப்ரபவாய நம:) மேன்மையான இருப்புள்ளவர். மேலான காந்தியுடையவர். எல்லாம் உண்டாக காரணமானவர். உயர்ந்த அவதாரமுடையவர். மேலான காந்தியுடைய ஸூர்யசந்திரர்களை நடத்துகிறவர். மேலான பிறப்புக்கு காரணமானவர்.

36. ப்ரபு: (ஓம் ப்ரபவே நம:) மேலானவராய் ஏற்படுகிறவர். மிக்க ஸாமர்த்தியமுள்ளவர். எந்த பலன்களையும் அளிக்க சாமர்த்தியம் பெற்றவர். மேலானவராய் இருப்பவர்.

37. ஈசுவர: (ஓம் ஈசுவராய நம:) அதிகாரம் செய்யும் குணமுடையவர். தெய்வங்களில் சிறந்தவர். இயற்கையான ஐசுவரியமுள்ளவர்.

38. ஸ்வயம்பூ: (ஓம் ஸ்வயம்புவே நம:) தானாகவே உண்டானவர். தானாகவே பிரகாசிப்பவர். எல்லாவற்றிற்கும் மேலாக இருப்பவர். தாமே அவதரிப்பவர். ஸ்வதந்திரமானவர்.

39. சம்பு: (ஓம் சம்பவே நம:) சுகத்தைத்தருகிறவர்.

40. ஆதித்ய: (ஓம் ஆதித்யாய நம:) ஸூரியனிடத்தில் இருப்பவர். ஸூரியனிடத்தில் இருப்பவராய் பிருதிவீரஸத்தை கைப்பற்றிக்கொண்டு செல்பவர். அதிதி தேவியின் பிள்ளை உபேந்திரென்ற ரூபங்கொண்டவர். அதிதி எனப்படும் பூமிதேவிக்கு பதியானவர்.

(தொடரும்)



# ஆசாரமாலை.

---

## ஸந்தியார்த்த விமரிசம்.

(முன் 307ம் பக்கம் தொடர்ச்சி.)

ஆசமனம் ப்ராணாயாமம் ஸங்கல்பம் இவைகளைச்செய்துகொள்வது ஸந்தியாவந்தனத்தின் ஓர் பாகமாகிறது. ஆசௌசாதி காலங்களிலும் இது செய்யப்படவேண்டியதாகும். இது ஸந்தியாவந்தனத்தின் பூர்வாங்கமாய் கருதப்பட்டிருக்கிறது. இதற்குப்பின் மார்ஜனமும் ப்ராசனமும் சரீர சுத்திக்காக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆபோஹிஷ்டாமயோபுவ: என்னும் மார்ஜன மந்திரத்தின் மூன்று ரிக்குகளால் மார்ஜனம் செய்துகொண்டு ஸூர்யஸ்ச என்னும் மந்திரத்தால் ப்ராசனம் செய்துவிட்டு மார்ஜனம் மீண்டும் செய்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஸூரியனின் சஞ்சாரத்திற்கு ப்ரதிபந்தகமாயிருப்பதைத்தடுக்கும் அர்க்யத்தை விடவும் காயத்ரி மந்திரத்தை ஜபிக்கவும் சரீரத்தின் அந்தச்சுத்தியும், பாஹ்ய சுத்தியும் இந்த மந்திரத்தால் ஏற்படுகிறதென்றால் இதன் மகத்துவம் பிரசித்தமானதாகும். இதன் அர்த்தம் முற்கணவே சொல்லப்பட்டிருக்கிறது. தாத்பர்யத்தை மட்டில் இங்கு சுருக்கிக் கூறுவோம்.

இதரமதத்தார்களைப்போல் நாம் கேவலம் ஜடமான ஜலத்தைபிரார்த்திப்பதாய் நாம் கூறுவதில்லை. அதற்கு பிரம்மஹத்யாதி பாபங்களை தொலைக்ககூடிய சாமர்த்தியமுமில்லை. ஜலத்திற்கு அபிமான தேவர்களும் ஜலத்திலிருந்துவரும் நாராயணரின் மூர்த்திகளும்தான் இந்த மந்திரத்தால் பிரார்த்திக்கப்படுவதாய் நாம் உறுதிகொள்ளவேண்டும். ஸந்தியாவந்தனம் பூராவுமே ஸ்ரீவிஷ்ணுவின் ஆராதனை ரூபமான கர்மவாகும். ஜலாபிமானி தேவர்களே! ஜலத்திலுள்ள நாராயணரின் மூர்த்திகளே! நாம் உங்கள் ஜலத்தை ஸ்பரிசிக்கிறோம். கையில் எடுக்கிறோம். ஸ்நானம் செய்கிறோம். ப்ராசனம் செய்கிறோம். அன்னாதிகளை சமைப்பதிலும் சரியே, அநேக காரியங்களிலும் சரியே உபயோகிக்கிறோம். இந்த சந்தர்ப்பங்களில் எவ்வளவோ உங்களால் அனுகூலங்கள் உண்டாகாதிருக்க கூடும். தீமைகளும் உண்டாகக்கூடும். ஆதலால் நாங்கள் பிரார்த்திப்பது என்னவென்றால் ந: மயோபுவ: ஸ்த எங்களுக்கு யாதொரு தீங்கையும் விளைவிக்காமல் எந்தெந்த காரியங்களில் உங்களை உபயோகப்படுத்துகிறோமோ அவைகளுக்கு நீங்கள் ஸஹாயமா

யிருப்பதுடன் எங்களுக்கு ஆயுராரோக்யாதிகளைக்கொடுத்து யௌவனத்தையே தந்தருளுங்கள். உலகத்திற்கு க்ஷேமத்தையே தந்தருள்வது உங்கள் சுபாவம். அப்பேர்ப்பட்ட நீங்கள் உங்களை ஸ்நானம் பானம் முதலியவைகளில் உபயோகிப்பதால் எங்களுக்கு சரியான ஆகாரத்தையும் பலத்தையும், ஊர்ஜே ததாந அப்படியே கிரமமாய் ஸ்ரத்தா பக்தி முதலியவைகளையும் கொடுத்து அதனால் கிரமமாய் பகவானுடைய உபாஸனையையும் கொடுங்கள். எதற்காக நாம் இவைகளை விரும்புகிறோமென்றால் மஹோரணாய சக்ஷஸே நாம் இந்த ஸம்ஸார பந்தத்தில் சிக்கி பலவகை கஷ்டங்களை அனுபவிக்கிறோம். நாம் இதிலிருந்து விடுபட்டு மகத்தானதும் ரமணீயமானதும் பார்க்கத்தகுந்ததுமான பகவத் தரிசனத்தை அடையப்பெறவேண்டும். பகவானுடைய அபரோக்ஷம் இப்படி ஏற்பட்டால் பவபந்தம் விலகி முக்தி தானாகவே வந்து சேரும். அந்த முக்தி ஏற்படத்தான் சரீர சௌகரியங்களையும் ஆயுராரோக்யாதிகளையும் பரிசுத்தி தியானம் ஸமாதி முதலியவைகளையும் நாம் நாடுகின்றோம். அவைகளை நீங்கள் தாருங்கள். உங்களிடம் ஜனங்களுக்கு க்ஷேமத்தைத் தரும் பலவகை ரஸங்கள் இருக்கின்றன.

யோ வ: சிவதம: ரஸ: தஸ்ய பாஜயதேஹ ந: அவைகளில் சிவம் சிவதரம் சிவதமம் என்று பலவகை தாரதம்மியம் இருந்துவருகிறது. எங்களுக்கு அவைகளில் எது முதல்தரமான ரஸமுண்டோ அதைக்கொடுங்கள். அது நித்யானந்தமான மோக்ஷ ரஸத்தைக் கொடுக்கக்கூடியது. பகவன் மூர்த்திகளே! மிகுந்த க்ஷேமகரமான உங்களுடைய அநந்தமான ரூபங்களில் ஆனந்தமாகிய உங்கள் ரூபத்தை எங்கள் உபாஸனைக்கு பலனாக நீங்கள் என்னிடம் நிறுத்துங்கள். நீங்கள் ஸ்வயமாக எங்கள்மீது கருணைகொண்டு அன்புடன் அதைத்தரவேண்டுமே ஒழிய உங்களைக் கட்டாயப்படுத்தும் சரியான உபாஸனையைச்செய்ய எனக்கு யோக்யதை இல்லை. நீங்கள் தான் என்னிடம் வாத்ஸல்யம் கொள்ளவேண்டும். எப்படி எனில் உசதீரிவ மாதர: தன் கன்று வளர விருப்பங்கொண்ட பசு மிகவும் உத்தமமானதும கன்றின் விருத்திக்கு தகுந்ததாயுமுள்ள தன் தனப்பாலை தானாக வலுவில் கொடுத்து கன்றை வளரச்செய்யும். அதுபோல் நீங்கள் எங்கள் விருத்திக்கு ஏற்றதாயும் உத்தமமுமான ஆனந்தரஸத்தை நீங்களாக எங்களிடம் கருணைகூர்ந்து கொடுக்க பிரார்த்திக்கிறேன். நீங்கள் எங்களுக்கு ஸர்வ விதத்திலும் உதவி சந்தோஷப்படுத்துவது எதற்காகவென்றால் நாம் அந்த நித்யானந்தத்தில் ஸ்திரமாய் வாசம் செய்யவேண்டுமென்றுதான். யஸ்ய க்ஷயாய ஜின்வத தஸ்மா அரங்கமாம வ: அவ்வாறு வசிக்க எங்கள் பாபம் தொலைய நீங்கள்



தொடுக்கும் ரஸத்தை நாம் விரும்பாமல் அதை நாம் நிராகரிப்பதில்லை: நாம் அப்பேர்ப்பட்ட துஷ்டர்களுமன்று. தஸ்மை அரங்கமாம வ: அதற்காக நாம் உங்களை அத்யந்தம் உபஸத்தி செய்கிறோம். உங்கள் கருணையை நாடுகிறோம். உங்களை மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறோம். அந்த ரஸம் எங்களுக்கு ஏற்படச்செய்ய, எங்களுக்கு ஸாதன ஸம்பத்துகள் உண்டாக ஜகத்குருவாகிய வாயுபகவானை ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாளை ஆசாரியனாகக்கொண்ட மாத்வ வைஷ்ணவகுலம் சுத்தமான வம்சம் முதலியவைகளில் நாங்கள் பிறக்கும்படி செய்யுங்கள். என்றிவ்வாறு மார்ஜன மந்திரத்தால் முதலில் பிரார்த்திக்கப்படுகிறது. இந்த ப்ரார்த்தனையுடன் வேதமந்திரத்தைச்சொல்லி முன்பு அறிவித்த விதிப்படி பூமி சிரஸ் ஆகாயம் இவைகளில் மாறிமாறி ஜலபிந்துகளை தெளிக்கப்படுகிறது. ஸ்வயமாக ஜலம் ஆரோக்யத்தைக் தருவதாய் இருப்பினும் மங்களானும் ச மங்களம் என்று ஆரோக்யத்தைத்தரும் வஸ்துக்களுக்கு அந்த யோக்யதையைக்கொடுப்பவர் நாராயணராதலால் சாமானியமாய் சுகத்தைத்தரும் அந்த ஜலமும் எக்காரணத்தாலோ எங்களுக்கு பாதகம் விளைவிக்காமல் க்ஷேமத்தைத்தர இவ்வாறு பிரார்த்திக்கப்படுகிறது.

இதன்பின் சரீரத்தின் உட்புறமும் சுத்தியாக ப்ராசனம் செய்யப்படுகிறது. ஸூர்யஸ்ச மாமன்யஸ் ச என்ற மந்திரம் அதற்கு உச்சரிக்கப்படுகிறது. இதன் தாத்பர்யம் யாதெனில் —மேலே மூன்று ரிக்குகளால் கூறப்பட்ட உத்தம குணமுடையதும் பரிசுத்தமானதும் எங்களுக்கு க்ஷேமத்தைத் தருவதுமான ஜலத்தை கையில் வைத்துக்கொண்டு பரிசுத்தமாகயிருந்து நான் இவ்வாறு பிரார்த்திக்கிறேன். எல்லா தேவர்களும் என்னுடைய இந்த பிரார்த்தனையை காது கொடுத்து கேட்பார்களாக. என்னை சூரியன் காப்பாற்றட்டும். சூரியன் என்றால் கிழக்கில் உதிக்கும் சூரியன் மட்டிலன்று. ஞானிகளால் அடையப்பெறும் பரமாத்மாவும் காப்பாற்றட்டும். நல்ல காரியங்களில் பிரேரிபிக்கும் பகவத் ரூபமும் காப்பாற்றட்டும். மன்யுஸ்ச க்ரோதத்திற்கு அபிமானியான ருத்திரனும் காப்பாற்றட்டும். சதமன்யுவான இந்திரனும் காப்பாற்றட்டும். மன்யு வெனப்படும் நரஸிம்ம மூர்த்தியும் காப்பாற்றட்டும். மன்யுபதய: ச க்ரோதத்திற்கு அபிமானிகளான தத்வாபிமானி தேவர்களும் காப்பாற்றட்டும். க்ரோதத்திற்கு நியாமகர்களாய் இருக்கும்பிரம்மாதி தேவர்களும் காப்பாற்றட்டும். இந்திரனால் காப்பாற்றப்படும் ஸமஸ்த தேவதைகளும் என்னைக்காப்பாற்றட்டும். எதிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டுமென்றால் மன்யுக்ருதேப்ய: பாபேப்ய: நான் கோபங்கொண்டு அநேக பாபங்களைச் எனக்குத் தெரிந்து செய்திருக்கிறேன். தெரியா

மலும் செய்திருக்கிறேன். கோப்ராம்மணர்களை அடித்தல் அதட்டல் திட்டல் ஹிம்சித்தல் முதலியவைகள் உண்ணத்தகாதவைகளை உண்ணல் சொல்லத்தகாதவைகளைச் சொல்லல் முதலான நிஷித்தமான கார்யங்களைச் செய்தல் முதலான ஸமஸ்த பாபங்களினின்றும் என்னைக் காப்பாற்றவேண்டுமென்றால் ஒவ்வொரு பாபத்தின் பலனாக நரகாதி இம்சைகள் அநேகம் ஏற்படக்கூடும். அவைகள் எனக்கு ஏற்படாதிருக்கும்படி மேற்கூறிய ஸமஸ்த தேவர்களையும் நான் பிரார்த்திக்கிறேன்.

(தொடரும்)

## ஹரிநாம கீர்த்தனையின் பிரபாவம்.

ஒரு சமயம் நாரதர் வைகுண்ட லோகம் சென்று அங்கு ஆயிரம் பண முடிகளோடு கூடிய ஆதிசேஷன்மீது ஸ்ரீவத்ஸாங்கனாய் வனமாலாதாரியாய் சதுர்புஜ யுக்தனாய் நீலமேக ச்யாமளனாய் கௌஸ்துப சோபிதனாய் பீதாம்பரதாரியாய் மந்தஹாஸ யுக்த முகாரவிந்தனாய் ஸ்ரீ பூ தார்க்கா ஸமேதனாய் சயனித்திருக்கும் ஆதிமத்யாந்தரஹிதன் க்ஷராக்ஷர புருஷோத்தமன் ஸ்வர்க்காபவர்காதி பலதாயகன் யோகிஹ்ருதயானந்தானுபவமூர்த்தி அப்ரமேயன் ஸ்ரீமன் நாராயணனை கண் குளிரப் பார்த்தும் ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்தும் வாயாரத் துதித்தும் பேரானந்தமடைந்து "இன்று வழக்கம்போல் எல்லா உலகும் சுற்றி வந்தோம். இனி எங்கு செல்வோம்" என்று யோசித்து திக்பாலகர்களின் உலகங்களில் இவருடைய கவனம் செல்ல "இதுவரை யம லோகம் நாம் சென்றதில்லை. இன்று சென்று அதன் சிறப்பை பார்ப்போம்" என்று நிச்சயித்தார். அவ்வாறே அங்கே சென்றார். அங்கு மிக்க பெரிதான பல வகை நரகக் கட்டிடங்கள் ஏராளமாய் இருப்பதைக்கண்டார். எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தார். அங்கு பாபிகளுக்கு விதிக்கப்படும் பலவகை தண்டனைகளையும் அவர்கள் படும் அவஸ்தைகளையும் பார்த்தார். தீயின்மேல் தாம்பிர வாணாய்களில் எண்ணெ கொதிக்க அதில் சிலர் பொரிக்கப்படுகின்றனர். செக்கில் வைத்து சிலர் ஆட்டப்படுகின்றனர். கரும்பு ஆலையில்



சிக்கவைத்து சிலர் பிழியப்படுகின்றனர். ரம்பங்களால் சிலர் கொய்யப்படுகின்றனர். சம்மட்டியால் அடித்து சிலர் சின்னபின்னமாக்கப்படுகின்றனர். அரிவாளால் சிலர் கொத்தப்படுகின்றனர். தலைகீழாய் தொங்கவிடப்பட்டு தோல் உரிக்கப்படுகின்றனர். பாறாங்கல்லின்மீது துவைக்கப்படுகின்றனர். மர்மஸ்தானங்கள் பேதிக்கப்படுகின்றன. அவைகளில் கூர்மையான ஆயுதங்கள் அறையப்படுகின்றன. முதுகு புறமாய் கைகால்கள் கட்டப்பட்டு முட்களும் சப்பாத்துகளும் நிறைந்த மைதானங்களில் சிலர் உருட்டிவிடப்படுகின்றனர். தணல் மழை ஆயுத மழை அம்பு மழை கற்பாறைகளின் மழை பெய்யப்படுகின்றன. அமேத்யக் கிணறுகளிலும் ரத்த சீ நதிகளிலும் மாமிச மடுவிலும் தள்ளப்படுகின்றனர். எண்ணிறைந்த அட்டைகளும் மகர மத்ஸ்யங்களும் ஹிம்சிக்கும் பலவகை புழுக்களும் பருந்து காகம் முதலிய கொத்தும் பறவைகளும் சிம்ஹம் வியாக்ரம் ஓநாய் முதலிய மாம்ஸ பக்ஷணி மிருகங்களும் கூட்டம் கூடியிருந்து அவயவங்களைப்பிடுங்கி சாப்பிடுகின்றன. என்ன கதி நேர்ந்தாலும் பிராணன் போவதில்லை. மயக்கமும் மூர்ச்சையும்தான் அடிக்கடி ஏற்படுகிறது. பசியும் தாகமும் வருத்துகிறது. தம்தம் உடம்பிலிருந்து பெருகும் ரக்தத்தையும் மாமிசத்தையும் தான் புசிக்க நேரிடுகிறது. அய்யய்யோ என்னும் சப்தம்தான் காதைத் துளைக்கிறது, யம தூதர்களின் அதட்டலும் கர்ஜனையும் யாவரையும் நடுங்கச் செய்கிறது. தாம் செய்த தீச்செயல்களை எல்லாம் சொல்லிக்கொண்டு பாபிகள் ஓப்பாரி இடுகின்றனர். தங்களுக்கு சரணம் ஏதாவது உண்டா என்று நாற்புறமும் பார்க்கின்றனர். தம் எதிரிலேயே தம் உற்றார் சுற்றார்கள் ஹிம்சிக்கப்படுவதைப் பார்த்து பரிதவிக்கின்றனர்.

இவைகளை எல்லாம் நாரதர் கண்டார். கண்ணீர் சொரிந்தார். ஓவென்றலறினார். கருணை கொண்டார். உன்னதமான ஓரிடத்தில் நின்றார். நாற்புறமும் பார்த்து "நரகவாஸிகளே! கேளுங்கள் கேளுங்கள். நான் சொல்வதை ஆதரவுடன் கேளுங்கள்! நாராயணேதி மந்திரோக்தி: வாகஸ்தி வசவர்த்தினீ! ததாபி நரகே கோரே பதந்தீத்யேதத்புதம்!! நாராயணனென்னும் திவ்ய நாமம் இருக்கிறது. அதைச்சொல்ல உங்கள் நாவும் உங்கள் வசமிருக்கிறது. அப்படியிருந்தும் அதை ஒரு தரம் கூட சொல்லா

மம் இருந்துவிட்டு இந்த கோரமான நரகத்தில் விழுந்து இவ்வகை அவஸ்தைகளை நீங்கள் அனுபவிப்பதுதான் ஆச்சரியமாய் இருக்கிறது. இப்போதாவது நாராயணா நாராயணாவென்று சொல்லுங்கள். இக்ஷணமே இந்த கஷ்டம் விலகும். நற்காரியங்களை செய்ய முடியாதவர்களுக்கும் சோம்பேரித்தனம் மிகுந்தவர்களுக்கும் துஷ்டபுத்தியுள்ளவர்களுக்கும் கூட நரகத்தின் ஸங்கடம் இல்லாமற்செய்வது ஸ்ரீஹரியின் திவ்விய நாமம் தான். அவர்கள் தப்ப ஹரியின் நாமத்தைத் தவிர வேறு கதியில்லை. இது நிச்சயம் நிச்சயம் என்று உரக்க கூவினார். தம் வீணையை சுருதி சேர்த்தார். சுருதி பக்தமாய் லய பக்தமாய் பக்தி தித்திக்கும்படி சப்தம் ஏற்படும்படியாய் உரக்க "கோவிந்த நாராயண வாஸுதேவ முகுந்த கிருஷ்ணச்யுத யாதவேதி । ந்ருஸிம்ஹ கேசவ ஹரே முராரே ரமேச லோகேச ஜகந்நிவாஸ ॥ அநந்த வைகுண்ட ரதாங்க சக்ரே ஸமஸ்த லோகஸ்ய நிதான மூர்த்தே । நிரஞ்ஜனாந்த குணேச சித்ரூப விச்வேச ஜகத்விகார ॥ நிரூப நித்யாவ்யய நிர்விகார நிராச்ரயானந்த விசித்ரகர்மன் । தாசார்ஹ க்ருஷ்ண ககவாஹன வாரிஜாக்ஷ நாராயணாகிலகுரோ ஜகதாமதீச । விச்வோதயஸ்திதி லயோன்னியதி ப்ரதேதி காயன்முதோ முதமாபிதவான் ஜனனம் ॥" என்று ஹரிநாம ஸங்கீர்த்தனத்தைச்செய்து ஆனந்த பரவசரானார்.

இதைக்கேட்டு எல்லோரும் குதூகலித்தனர். உடனே நரக வேதனை அற்றுப்போய் விட்டது. யமபாசம் துண்டித்தது. யமதூதர்களின் அட்டகாசம் நின்றது. சிக்ஷா பாதை ஒழிந்தது. எல்லோரும் சுகமடைந்தனர். ஆனந்த மனுபவித்தனர். குளிர்ந்த காற்றும் புஷ்பங்களின் மணமும் வீசிற்று. எப்போதும் அங்கு கண்டிராத நறுமணம் பலமாய் வீசுவதைக்கண்டு எல்லோரும் அங்குமிங்கும் பார்க்க கோடிக்கணக்கான புஷ்பக விமானங்கள் வந்து சேர்ந்தன. முன்பு நரகத்தில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் எல்லோருமே சுயேச்சை அடைந்து திவ்ய ரூபங்களைக்கொண்டவர்களாய் அவைகளில் ஏறினார்கள். சத்ர சாமராதி வைபவங்கள் அடைந்தார்கள். எல்லோரும் நாரதருக்கு அஞ்சலி கூப்பி மகா ஸ்தோத்திரம் செய்து ஸ்வர்க்கலோகம் போய்ச்சேர்ந்தனர். யமனுலகில் சிக்ஷையநுபவிக்க ஓர் பாவிகூட அங்கு இல்லை. எல்லா நரகக்கட்டிடங்களும் காலியாகிவிட்டன. யமதூதர்களில் வேலையில்லா திண்டாட்டம் ஏற்பட்டது. அவர்கள் தம் அரசனான யமனிடம் ஓடி அறிவித்தனர். நாரதர் செய்த காரியத்தை மிகைப்படுத்தி கூறினர். இதைக்கேட்டு யமன் பக்தியுடன் நாரதர் இருந்தவிடம் வந்து அவரை நமஸ்கரித்து அர்க்ய



பாத்யாதிகளால் பூஜித்தான். பிரம்மாவின் கட்டளையின்படி பாபிகளுக்கு விதிக்கும் தண்டனையை விலக்கி தன் உலகை இவ்வாறு பாழாக்கினது தருமமாவென்று பரிதாபகரமாய் கேட்டான். நாரதர் தாம்புதிதாய் ஒன்றும் செய்துவிடவில்லை என்றும் எங்கும்போலவே இங்கும் ஹரி நாம ஸங்கீர்த்தனம் செய்ததாயும் அதனால் பாபிகளின் பாபம் நீங்கி ஸ்வர்க்கம் சென்றனர் என்றும் இனி இந்த உலகத்திற்கு தாம் வரப்போவதில்லை என்றும் சொல்ல, யமதேவன் சினந்து இனி அவருக்கு ஓரிடத்திலேயே தங்கியிருக்க இருப்புகொள்ள வேண்டாமென்று சாபம் கொடுத்தார். நாரதரும் தனக்கு சாதகமான இந்த சாபத்தை ஏற்று கைலாஸம் சென்றார்.

நாராயண நாராயண நாராயண நாராயண நாராயண நரஹரியே।
நாராயண நரஹரியே ஹயவதன ஸ்வாமி நீ எனகே தயவாகோ॥

(ஸ்ரீ வாதிராஜர் கீர்த்தனை)

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

## செய்திகள்.

திருநெல்வேலி வீரராகவபுரம் அக்கிரகாரத்தில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் பிருந்தாவன கட்டிடத்தில் சென்ற 3 மாத காலமாய் ஸ்ரீமான் தர்மபுரி D. V. சுப்புராவ் அவர்களால் நிரூபணம்செய்யப்பட்டு வந்த ஸ்ரீமத் பாகவதம் 6—5—37 குருவாரத்தன்று மங்களோற்சவத்துடன் ஸம்பூர்த்தியடைந்ததென்றும் சுமார் 200 பேர்களுக்கு பிராம்மண போஜனம் சிறப்பாக நடத்தப்பட்டதென்றும் சிக்கநரசய்யா கிராமம் ஸ்ரீமான் V. N. ராமச்சந்திர ராவ் அறிவிக்கிறார்.

கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியார் மடத்தில் சேங்காலிபுரம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யர் B.A., B.L., அவர்களின் தலைமையில் தென்னிந்திய பிராம்மண மஹா சபை நாலாவது மே-மீ 25உ முதல் மூன்று தினங்கள் கூடியது. பல ஸநாதனிகள் வெளியூர்களிலிருந்தும் வந்திருந்தனர். அநேக முக்யமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சினிமாக்களிலும் பத்திரிகைகளிலும் நாவல்கள் முதலியவைகளிலும் பிராம்மணர்களையும் பிராம்மண தர்மங்களையும் வேண்டுமென்றே கீழ்படுத்தும் நோக்கத்துடன் படங்களும் கதைகளும் பிரசுரமாவதைக் கண்டித்தும் அவைகளைத்தடுக்க சட்டரீதியான முயற்சி எடுக்கப்படவேண்டுமென்றும் சென்னையில் கூடப்போகும் பண்டித பரிஷத் அநாவச்யமும் அசாஸ்திரீயமென்றும் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆஸ்திக ப்ராம்மணர்களுக்கு பெருங்கேடு விளைவிக்கும் இந்த கோரமான சந்தர்ப்பத்தில் இச்சபை கூட்டப்பட்டு தங்கள் மனோபாவத்தை வெளியிட்டது ஸநாதனிகளுக்கெல்லாம் மிகுந்த ஆறுதலாயிருக்கிறது.

# விளம்பரம்.

## மாத்வமித்திரன்
## ஒன்று முதல் ஏழு வர்ஷியங்கள்

*சுமார் 2200 பக்கங்களைக்கொண்டது. முன் விலை ரூ. 21—0—0 தற்போது விலை ரூ. ஐந்துதான். புஸ்தக வியாபாரத்தை நிறுத்தும் யோசனையின் பேரில் கையிலுள்ள ஸ்டாக்குகளை சீக்கிரம் கொடுத்துவிட இவ்வாறு வெகு ஸ்வல்ப விலைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எட்டாவது வார்ஷியமும் ஒன்பதாவது வார்ஷியமும் தேவைக்குத்தகுந்தபடி வெகு சொல்ப காபிகளே அச்சிடப்பட்டிருப்பதால் பிந்தி அகப்படாது. மாத்வமித்திரன் வார்ஷியங்களில் பிரசுரமாகியிருக்கும் விஷயங்களின் மகத்துவம் மிகவும் பிரசித்தமானது. இந்த சந்தர்ப்பத்தை கைவிட்டால் பிறகு இம்மாதிரியான பிரசுரம் கிடைப்பதரிது. ஆண் பெண் இருபாலர்களும் மத்வமத இரகசியங்கள் அறிய இப்பத்திரிகை ஒன்றே சாதகமானது.*

### ரூபாய் ஐந்து தான்.

*இச்சிறு தொகையை முன்னதாக மணியார்டர் செய்து ரயில்வே பார்ஸல் மூலமாய் தங்கள் செலவில் புஸ்தகங்களைப் பெறலாம். பூராசெட்டு பிரித்தனுப்பப்படமாட்டாது.*

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 27—6—37 | *பானுவாரம்* | *சிரவணம் உப. விஷ்ணு ப. உப.* |
| 4—7—37 | *பானுவாரம்* | *ஏகாதசி உப.* |
| 6—7—37 | *மங்களவாரம்* | *ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் புண்யதினம்* |
| 7—7—37 | *புதவாரம்* | *அமாவாசை திலதர்ப்பணம்* |
| 8—7—37 | *குருவாரம்* | *விஷ்ணு ப. உப.* |
| 16—7—37 | *சுக்ரவாரம்* | *தக்ஷிணாயன புண்யகாலம் காலை மணி 10-59 வரை* |
| 19—7—37 | *சோமவாரம்* | *ஏகாதசி உபவாஸம், சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பம்* |
| 20—7—37 | *மங்களவாரம்* | *த்வாதசி, சாகவ்ரதமாரம்பம்* |
| 23—7—37 | *சுக்ரவாரம்* | *வியாஸ பௌர்ணமி, விஷ்ணு ப. உப.* |
| 24—7—37 | *சனிவாரம்* | *சிரவணம் உப. விஷ்ணு ப. உப.* |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திகைக்கும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆக்யாம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். **Certificate of Posting** பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்நானப்பவுடர்
பேஸ் பவுடர்
அப்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊறுகாய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam





# மாத்வமித்திரன்:

# THE MADHWA MITRAN.


EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 9. புஸ்தகம் 9. | ஈசுவர ஸம்வத்ஸரம். ஆஷாட மாஸம். (23-7-1937) சுக்ரவாரம். | No. 12 நெ. 12. |
|---|---|---|



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்) | 345 |
| 2. | லக்ஷ்மணன் பரதனுக்குதமையனே | 350 |
| 3. | சந்திர வம்சாவளி | 355 |
| 4. | விஷ்ணு ஸஹஸ்ரநாமம் | 364 |
| 5. | ஸ்ரீமஹாபாரத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 368 |
| 6. | ஆசாரமாலை | 373 |
| 7. | சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம் | 375 |
| 8. | விசேஷ தினங்கள் | 376 |


ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வகுருப்புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அத்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலெழுத விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतोभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 9 | ஈசுவர ஸம்வத்ஸரம். ஆஷாட மாஸம். | No. 12

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமத்வ விஜயம்.

(முன் 287ம் பக்கம் தொடர்ச்சி)

### பதினொன்றாவது ஸர்க்கம்.

### ஆதிசேஷன் ஸ்ரீமத்வபாஷியத்தை சிரவணம் செய்தது

1. ஒரு சமயம் ஸ்ரீமத்வாசாரியார் தான் இயற்றிய பிரம்ம ஸூத்திர பாஷியத்தை சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லி வரும் பொழுது ஆயிரம் பணமுடிகளோடு கூடிய ஆதிசேஷன் ஸநகாதி முனிவர்களுடன் வந்து ஆகாயத்திலிருந்துகொண்டு அந்த மத்வ பாஷியத்தை சிரவணம்செய்து வரவும், அச்சமயம் ஆகாயத்தில் சந்திரனின் நிலவுபோன்ற பிரகாசத்தைப்பார்த்து, சிஷ்யர்கள் ஆச்சரியப்பட்டு அகாலத்தில் சந்திரனொளி இருப்பதற்கு காரணமென்னவென்று வினவ ஸ்ரீமத்வாசாரியார் இது ஆதிசேஷனின் சரீரகாந்தி என்று சொல்லவும், பூமியிலிருந்த அந்த சிஷ்யர்களுக்கும், அவ்வாறே பாடம் முடிந்தபின்பு புறப்பட்டுப்போகும் ஆதி

சேஷனுடைய சரீரம் சிறிது கண்ணிற்கு தென்படவும், அவர் அக்ஷணமே சரீரம் காந்தியை முழுமையும் மறைத்துக்கொண்டு தன் இருப்பிடமேகினார்.

2. அவர் சென்றபின் வினயமே பூஷணமாகக்கொண்ட அந்த சனகாதி முனிவர்கள் அதியாச்சரியமான தேஜஸ்ஸுள்ள வசதியில் இருந்துவரும் ஆயிரம் தலைகளுடன் கூடிய அந்த ஆதிசேஷனை சாஷ்டாங்கம் நமஸ்கரித்து பிரார்த்திக்கத்தகுந்ததாயும் அவசியம் கேட்கத்தகுந்ததாயும் இனி சொல்லப்படுவதுமான ஸ்ரீமத்வசாஸ்திரத்தின் சம்பந்தமான பிரமேயத்தை பிரசினம் செய்தனர்.

3. நாகலோகத்திற்கு அதிபதியான சேஷமூர்த்தியே! உலகில் மிகவும் மனோஹரமாயும் சிறந்த அறிவாளிகளென்ற பிரசித்தர்களான தங்களைப் போன்றவர்களாலும் பூஜிக்கப்பட்டதாயுமுள்ள மிக்க மேலானதான குணங்கள் நிறைந்த பூர்ணப்ரக்ஞராகிய ஸ்ரீமத்வாசாரியாரின் ஸூத்ரபாஷியம் முதலான சாஸ்திரத்தை அடிக்கடி அர்த்த பூர்வமாய் சிரவண படனாதிகளை செய்பவருக்கு எவ்வகையான பலனுண்டாகிறது.

4. ஞான பூர்வமாய் ஓர் கர்மா செய்யப்பட்டால் அதற்கு விசேஷமான பலனுண்டு என்றிருப்பதைக்கொண்டு ஸ்ரீமத்வ சாஸ்திரத்தை சிரவண படனாதிகளைச் செய்வதால் ஏற்படும் பலனை நன்கு அறிந்துகொண்ட, அதன் யோக்யதையுள்ளவர்களுக்கு அதில் ஏற்படும் ப்ரவிருத்திக்கு மகா பலனுண்டாகுமாதலால், பலன்களைச்சொல்லிக்கொண்டே ஸம்பாஷணை செய்பவராயும் மகா கருணையுள்ளவராயும் க்ஞானாதிகுணங்கள் பொருந்தியவராயுமுள்ள தாங்கள், அந்த பலனை விரிவாகச் சொல்லவேண்டும்.

5. இவ்வாறு சனகாதிகள் சொன்ன வார்த்தையை மேலான புத்தியுள்ள ஆதிசேஷன் கேட்டு அடியிற்கண்டபடி பதில் கூறினார். ஸனகாதி முனிச்ரேஷ்டர்களே! மகா பூஜ்யமான சொரூபமுள்ள ஸ்ரீமத்வாசாரியாரின் சாஸ்திரத்தின் மிகவும் பூஜிக்கத்தகுந்த பலனை நான் சொல்வதை பக்தியுடன் கேளுங்கள்.



6. ஸ்ரீமத்வ சாஸ்திரத்தை சிரவண படனாதிகளைச் செய்வதால் ஸ்வர்க்கம் முதலியது கிடைக்ககூடியதாய் இருப்பினும் விவஸாயத்திற்கு வைக்கல் கட்டு எப்படி முக்யபலனில்லையோ அப்படி இதுமுக்யபலன் ஆகாது. ஸ்ரீமத்வசாஸ்திரத்தின் சிரவண படனாதிகளுக்கு முக்யபலன் எதுவென்றால் சுகாசாரியாள் ஸரஸ்வதிதேவி முதலான, பரதத்வத்தை அறிந்தவர்களால் புகழப்படும் மோக்ஷ பதவியேதான்.

7. அஜித மூர்த்தியான நாராயணர் சாமான்ய மனுஷரில்லாத தேவோத்தமராயுள்ள வாயுபகவானின் அவதாரமான ஸ்ரீமத்வாசாரியாரால் இயற்றப்பட்ட வேதாதி ஸத் ஆகமங்களின் அர்த்தமாகவுள்ள அந்த உத்தம சாஸ்திரத்தை சிரவண படனாதிகளால் சேவிக்கும் உத்தம வைஷ்ணவர்களின் தன்மையை அடைந்த ஸாது ஜனங்களுக்கு அவர்கள் கிரீடித்திருக்க தன் வைகுண்ட லோகத்தையே அளிக்கிறார்.

## வைகுண்ட வர்ணனை.

8. அந்த வைகுண்ட லோகம் அடியிற்கண்டவாறு இருப்பதாய் வர்ணிக்கப்படுகிறது. அந்த வைகுண்ட லோகத்தில் உலகிலுள்ள எல்லா வைபவங்களுக்கும் முக்ய இருப்பிடமாயுள்ள நாராயணனுடைய பட்டணம் பிரகாசிக்கிறது. அந்த நகரத்திற்கு உவமையான நகரம் கவிகளுக்கு கிடைப்பதுயாதெனில் அந்நகரின் சுற்றிலும் வெளி மதில்கள் இரத்தின மயமானதால் அந்த சுவற்றில் பிரதிபலிக்கும் அந்நகரின் பிரதிபிம்பம் தான்.

9. அந்நகரில் வெளிப்புரம் சுற்றிலும் வெண்மையான ஸ்படிககற்களாலும் புஷ்பராக மாணிக்யங்களாலும் கமல வைரங்களாலும் அரண்மனை கட்டிடங்கள் வரிசையாக கட்டப்பட்டு நடுவில் சிவந்த பத்மராக மாணிக்யத்தால் வரிசையாக வீடுகள் கட்டப்பட்டிருப்பதால், அந்த வெளுப்பால் சோபிக்கும் சிவந்த காந்தியானது, வெளுப்பான என் சரீர மண்டலத்தில் பிரகாசித்திருக்கும் பாலசூரியனை ஒத்த காந்தியுள்ள அஸுர சத்ருவான நாராயணனின் சரீரத்தை அநுகரணம் செய்கிறது.

10. அந்நகரில் ஒவ்வொரு வீட்டின் வெளிச்சுவற்றின் கொடுங்கை, வெண்மையான ஸ்படிக கற்களால் நிர்மாணம் செய்யப்பட்டு, அடி சுவர்களின் வாரி மரகத மாணிக்யத்தால் கட்டப்பட்டிருப்பதால், வெளுப்புடன் கருப்பு சேர்ந்திருப்பது ஒவ்வொரு வீட்டிலும் வெளுப்பான கங்கையின் ஜலத்துடன் கருப்பான யமுனையின் ஜலம் சேர்ந்ததுபோல் இருக்கிறது.

11. இந்த வைகுண்டலோகத்தில் முக்தர்களுக்கு ஒருக்காலும் கலக்கம் இல்லை என்னும் நியமம் இல்லாதிருந்தால், அங்குள்ள வீடுகளின் வரிசைகளில் கட்டப்பட்டிருக்கும் அழகான கொடுங்கைச்சந்துகளில் செய்துவைக்கப்பட்டிருக்கும் பக்ஷி உருவங்களைப் பார்த்து, அவைகள் பொய்யான உருவங்கள் என்று அவர்கள் எந்த வகையிலும் அறியமுடியாதுதான்.

12. ஒவ்வொரு வீட்டிலும் தூண்களின் இடையில் வைக்கப்பட்டிருக்கும் கட்டைகளில் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கும் சித்திர வஸ்திரத்தின் மேல் கட்டின் ஓரங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் பலவர்ணங்களுடன் கூடிய மாணிக்யங்களின் மாலைகளின் குச்சுகள், அந்த வீட்டின் உள்ளே எல்லா இடங்களிலேயும் பூராவாய் நிறைந்து கீழே ஒழுகும் காந்தியைப்போல பிரகாசிக்கிறது.

13. இங்கு நிர்தோஷமான ஸ்வரூபமுள்ள மகாலட்சுமியே அமூல்யமான ரத்தினங்கள் தங்கம் இவைகளின் சொரூபமாகவும் இங்குள்ள ஸமஸ்த வஸ்துக்களின் சொரூபமாகவும் இருப்பதால், கவிகளால் அதிக வர்ணனைகளால் சொல்லப்படும் ஸமஸ்தமான காந்திகளின் அதிசயமும் முற்றிலும் பொருந்துமே தவிர உண்மைக்கு மாறான அதிக வர்ணனையாக இருக்காது.

14. அநாதிகாலம் முதற்கொண்டு மோக்ஷ ஸுகத்தைப் பெற்றுவரும் கணக்கிடமுடியாத சிவன் சேஷன் கருடன் முதலான தேவக்கூட்டங்களின் வரிசைக்குச் சொந்தமான நகரங்கள் பூர்ணமாயிருந்தும், இந்த வைகுண்ட லோகம் நெருக்கடியில்லாததாய் விளங்குவது ப்ரபுவான விஷ்ணுவின் ஆச்சரியமான மகாத்மியம்தான்.



## விஷ்ணுகிருஹத்தின் சிறப்பு.

15. நக்ஷத்திர மண்டலத்திலுள்ள சந்திர மண்டலம்போல் எண்ணிறைந்த சிறந்த வீடுகளின் நடுவில், மூவுலகின்கண் ஆச்சரிய சமூகங்களை மிஞ்சுவதாயிருக்கும் நாராயணரின் வீடு பிரகாசிக்கிறது.

16. ஆயிரக்கணக்கான வேலைக்காரிகளால் சேவிக்கப்படும் மகாலட்சுமியே தன் பர்த்தாவுக்கு பணிவிடை செய்துகொண்டு ப்ரத்யக்ஷமாக தானே தன் கையால் அந்த வீட்டை துலக்குதல் மொழுகுதல் கோலமிடுதல் அலங்கரித்தல் முதலிய வீட்டுக்காரியங்களை செய்துவருகிறாள். இப்படியிருக்க அந்த வீட்டின் சோபையை யார்தான் வர்ணிக்க முடியும்!

17. ஸர்வோத்தமராயும் லக்ஷ்மீபதியாயுமுள்ள நாராயணர் தன்னிடமே தான் ஆனந்தானுபவம் செய்பவராயிருப்பினும் அந்த கிருகத்தில் முக்தரான ஆதிசேஷனின் மிருதுவான சரீர மண்டலமாகிய சயனத்திலிருந்துகொண்டு தோஷமில்லாதவளும் மனோஹரமானவளும் கமலம் போன்ற கண்களுள்ளவளுமான மகாலெட்சுமியுடன் விளையாடுகிறார்.

18. சனகாதிகளே! அங்கு ஆயிரம்பாலசூரியன்களைப்போல் காந்தியுள்ளவரும் பீதாம்பரத்தை தரித்தவரும் நவரத்ன கசிதமான ஆபரணங்கள் பூண்டவரும் புன்சிரிப்புள்ள சந்திரமுகமுள்ளவரும் கமலக்கண்களுள்ளவருமான அந்த சக்ராயுததாரி நாராயணனை தியானம் செய்யுங்கள்.

19. இந்த நாராயணனுடைய எல்லா குணங்களையும் அவருடன் கூட இருந்துவரும் மகாலட்சுமியும் இவ்வளவுதான் என்று கணக்கிட மாளமாட்டாள். பிரம்மதேவன் நான்குமுகம் படைத்தவனாயிருப்பினும் திறமையுள்ள வாக் சாதுர்யமுள்ளவராயினும் அவருடைய எல்லா குணங்களையும் சொல்லமாளார். நான் ஆயிரம் முகமுள்ளவனாயினும் என்னாலும் மாளாது. ஆனால் சுகர் முதலானவர்கள் ஸ்ரீமத் பாகவதாதிகளில் சொல்லப்பட்டதைக் காட்டிலும் சிறிது அதிகமாய் நான் சொல்லமுடியும்.

20. கணக்கில்லாதவர்களான முக்தியடைந்த சதுர்முகன்களென்ன, கணக்கில்லாத முக்தர்களான கருடர்களென்ன, கணக்கில்லாத முக்தர்களான ஆதிசேஷன்கள் முதலான முக்தியடைந்த தேவர்களென்ன இவர்கள் முக்தியடைந்த தம் பத்னிமார்களுடன் அந்த பகவானை தரிசித்து அவருடைய [illegible] பரிபூர்ணரான சுகானுபவமுள்ளவர்களாய் உத்தமமான ஆனந்தத்தை அடைகின்றனர். (தொடரும்)

# லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே.

(முன் 327ம் பக்கம் தொடர்ச்சி.)

கூடவாக்யார்த்த விவிருதி என்று பெயர்கொடுத்து ஸ்ரீ வாதிராஜர் மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திற்கு இயற்றியிருக்கும் வ்யாக்யானத்தில் அடியிற்கண்ட சந்தர்ப்பங்களில் அவர் லக்ஷ்மணன் பரதனுக்கு ஜேஷ்டனென்றே அபிப்பிராயப்பட்டிருப்பதாய் தெரியவருகிறது.

"அகாப்யவர்த்தன் சஹாரா: குமாரா: (4 அ. 1 சு.) என்னும் சுலோகத்தின் வியாக்யானத்தில் "ராமஸ்யதா ப்ராதுர்பாவமாத்ரம்| கலாஸ்து லக்ஷ்மணாதிஷு ஸாக்ஷாத் குமாரத்வமிதி ஸூசநாய புருஷோத்தமபதம்" என்று எழுதியுள்ளார். ராகவன் மட்டில் சுக்ல சோணித சம்பந்தமில்லாமல் கேவலம் ஆவிர்பவித்தவர், அவருடைய தம்பிகள் அப்படி அன்று என்னும் சாமான்ய பிள்ளைகளாக பிறந்தவர்கள் என்றும் சொல்லுவதற்காக ராகவனுக்கு புருஷோத்தமர் என்ற விசேஷணம் ஸ்ரீ பகவத் பாதாளால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்து, அச்சமயம் அவருடைய தம்பிகள் யாரென்றால், லக்ஷ்மணனை ஆதியாக அதாவது முதலாவதாகக் கொண்டவர்கள் என்று ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார். பரதன் தான் ஜேஷ்டன் என்று அவர் அபிப்பிராயப்பட்டிருக்கும் பக்ஷத்தில் லக்ஷ்மணாதிஷு என்று சொல்லியிருக்க மாட்டாரென்றும், பரதாதிஷு என்று தான் சொல்லியிருப்பாரென்றும் யாவரும் அறிவார்கள். இதனால் ஸ்ரீ வாதிராஜர் லக்ஷ்மணனைத்தான் ஜேஷ்டன் என்று எண்ணியிருப்பதாய் நிச்சயம் ஏற்படுகிறது.

2 "தத்வாக்யாத் கைகயீஸா" (5 அ. 2 சு.) என்னும் சுலோகத்தின் வியாக்யானத்தில்" அனுஜ்வானு கூலதயா ஸ்வாதந்த்ராமேவாஜாதேன லக்ஷ்மணேன இதிவா" என்று எழுதியுள்ளார். இந்த சுலோகத்தில் காணப்படும் அனுஜனென லக்ஷ்மணன் எப்படிப்பட்டவன் என்று ஆராயப் புகுந்து அனுஜன் எப்படிப்பட்டவன் என்றால் தனக்கு (ராகவனுக்கு) அனுகூலமாயிருக்கப் பிறந்தவன் அல்லது தனக்கு அடுத்து பிறந்தவன் என்று பொருள்படுவதாய் ஸ்பஷ்டமாய் கூறியிருக்கிறார். இதனாலும் ஸ்ரீ வாதிராஜர் ராமனுக்கு அடுத்த பின்னாடி பிறந்தவன் லக்ஷ்மணன் என்று அபிப்பிராயப்படுவதாய் நிச்சயம் ஏற்படுகிறது.

3 "யேத்ர தேவா இஹோத்பூதா: ந்ரு வானரசரீரிண:" (9அ. 108சு) என்னும் சுலோகத்தின் வியாக்யானத்தில் "ந்ரு சரீரண: லக்ஷ்மணபரத சத்ருக்னா:" என்று எழுதியுள்ளார். மனுஷ்ய சரீரத்தோடும் வானர சரீ



த்தோடும் பிறந்திருந்த தேவர்கள் என்று சொல்லுமிடத்தில் தம் தம் ளை ரூபங்களில் ஐக்யமடைந்த மனுஷ்ய சரீரமுள்ள அந்த தேவர்கள ரென்றால் அவர்கள் லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் என்று கூறியிருக் றார். ஸ்ரீ ராகவனுடைய தம்பிமார்களில் பரதன் ஜேஷ்டனாயிருக்கும் க்ஷத்தில் பரதனைத்தான் முதலாவதாக கூறியிருப்பார் என்றும் லக்ஷ் மணன் ஜேஷ்டனாயிருப்பதால்தான் லக்ஷ்மண பரத சத்ருக்னர்களென்று ரிசைக்கிரமமாய் கூறியிருக்கிறாரென்றும் யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. இதனால் ஸ்ரீ வாதிராஜர் நிர்விவாதமாய் லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்று ஒப்புக்கொண்டதாய் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

இவ்வாறு அநேக ஸந்தர்ப்பங்களில் ஸ்ரீ வாதிராஜர் ராகவனுடைய தம்பிமார்களில் லக்ஷ்மணனை முன்னாடி கூறியிருப்பதை எதிர்வாதம் செய்பவர்களுங்கூட நிர்விவாதமாய் ஒப்புக்கொள்ளும்படி ஸ்பஷ்டமாய் அவருடைய வியாக்யானத்தில் காணப்படுகிறது, ஸ்ரீ பகவத் பாதாளின் அபிப்பிராயத்துக்கு ஒட்டியே வியாக்யானம் செய்திருப்பதும் நன்கு விளங்குகிறது.

ஆனால் ஸ்ரீ பகவத் பாதாள் ஸ்பஷ்டமாய் லக்ஷ்மணாதிகளின் உல் பத்தியைச் சொல்லும் சுலோகங்களுக்கு இவர் செய்த வியாக்யானத்திற் பரதன் லக்ஷ்மணனுக்கு முன்னாடி பிறந்தவன் என்று அறிவித்திருப்ப தாய் எதிர்வாதம் செய்பவர்கள் கூத்தியாடுகின்றனர். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை சிறிது பரிசிலனை செய்வோம்.

ஸ்ரீ பகவத் பாதாள் லக்ஷ்மணாதிகளின் உற்பத்தியை நிர்ணயித்துச் சொல்லும் சுலோகங்களாவன—" தாவேவ ஜாதேள பரதஸ்ச நாம்னா சத் ருக்ன இத்யேவச ராமதோனு|| பூர்வம் ஸுமித்ரா தனயஸ்ச சேஷ: ஸ லக்ஷ்மணோ நாம ரகூத்தமாதனு || கௌஸல்யகாயத்ர உருக்ரமோ ஸௌ ஏகஸ்ததைகோ பரதஸ்ய மாது:| உபௌ ஸுமித்ரா தனயௌ ந்ருபஸ்ய சத்வார ஏதே ஹ்யமரோத்தமா: ஸுதா: ஸங்கர்ஷணாத்யை; த்ரிபிரேவரூபை: ஆவிஷ்ட ஆஸீத் த்ரிஷு தேஷு விஷ்ணு:| இந்த் ரோங்கதேசைவ ததோங்கதோஹி பலீந்தாந்தம் ஸபூவ சச்வத் || யேன்யேச பூபா: க்ருதவீர்ய ஜாத்யா: பலாதிகா: ஸந்தி ஸஹஸ்ர சோபி| ஸர்வே ஹரேஸ் ஸந்நிதி பாவ யுக்தா: தர்ம ப்ரதானஸ்ச குணப்ரதானா:|| (அத். 3 சுலோ 78—81) இதன் அர்த்தமாவது—

தாவேவ சக்ர சங்காதி அபிமானி தேவதைகளைப்பற்றி சொல்லும் சந்தர்ப்பத்தால் நினைவில் இருக்கும்படியான அந்த ப்ரத்யும்னனும் அநி ருத்தனும்தான், [வேறு லக்ஷ்மீ ரூபங்களோ பகவத் ரூபங்களோ அன்று] ராமத: ச அன்வேவ ராமருக்கும் (ச) லக்ஷ்மணருக்கும் பின்னாடி நாம்னா

பரத: சத்ருக்ன: ச இதிநாமதௌ பரதனென்றும் சத்ருக்னனென்றும் பெயரால் ப்ரமிதர்களாய் பிறந்தார்கள். சேஷ: ஆதிசேஷன் பூர்வம் மேலே சொன்ன பரத சத்ருக்னர்களின் உற்பத்திக்கு முன் ஸுமித்ரா. தனயஸ்ச ஸன் ஸுமித்ரையின் பிள்ளையாக லக்ஷ்மணோ நாம லக்ஷ்மணனென்று பிரமிதனாய் ரக்ஷத்தமாத் அனு ராகவனுக்கு அனந்தரம் பின்னடி ஜாத: பிறந்தான். வேறு விதமாய் வால்மீகி ராமாயணாதிகளில் லக்ஷ்மணாதிகளின் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறதே என்றால் கௌஸல்யச புத்ர என்ற சுலோகத்தால் அதை ஸ்ரீ பகவத் பாதாள் விவரித்துக்கூறுகிறார். உருக்ரம: அஸௌ ஸ்ரீ ராமர் கௌஸல்யாக புத்ர ஏக: கௌஸல்யைக்கு ஒரே பிள்ளை. பரதஸ்ய மாது: பரதன் அவனுடைய தாயான கைகேயிக்கு ஒரே பிள்ளை. உபௌ லக்ஷ்மண சத்ருக்னர்கள் ஸுமித்ரைக்கு இரண்டு பிள்ளைகள், ஆகவே உக்தி சௌகர்யத்திற்காக ஒரே பிள்ளையாய் பிறந்த ராமர் பரதர்களின் உற்பத்தியை முதலில் சொல்லி, இரண்டு பிள்ளைகளாய் பிறந்தவர்களை பின்னடி சொல்லப்பட்டிருக்கிறது. மகாபாரதத்தில் மற்றொரு வகையாய் சொல்லப்பட்டிருக்கிறதே என்றால் அமரோத்தமா: உத்தமதேவதைகளான ஏதே இவர்கள் ந்ருபஸ்ய தசரதருடைய சத்வார: ஸுதா: நான்கு பிள்ளைகள். இது பிரசித்தம் "ராம லக்ஷ்மண சத்ருக்னௌ: பரதஸ்ச மகா பல:" ராமர் லக்ஷ்மணன் சத்ருக்னன் பரதன் என்று மகா பாரதத்தில் சொன்னதின் தாத்பர்யம் தசரதனின் பிள்ளைகள் நான்கு என்ற அபிப்பிராயத்தைக் கொண்டுமட்டில் சொன்னதாய் ஆகும். இதில்வரிசைக்கிரமம் சொல்லப் படவில்லை. ஸ்ரீமத் பாகவதத்தில் லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் என்று வரிசைக்கிரமமாய்ச் சொல்லி அவர்கள் பகவத் அவதாரங்கள் என்று சொன்னதின் தாத்பர்யத்தை ஸ்ரீ பகவத் பாதாள் ஸங்கர்ஷணாத்யை: என்ற சுலோகத்தால் அறிவிக்கிறார். ஸங்கர்ஷணாத்யை: ஸங்கர்ஷணர் பிரத்யும்னர் அநிருத்தன் என்ற மூன்று ரூபங்களால் தேஷு த்ரிஷு மேலே சொன்ன லக்ஷ்மண பரத சத்ருக்னர்களிடத்தில் விஷ்ணு: நாராயணர் ஆவிஷ்ட: ஆஸித் பிரவேசித்தார் என்றால் லக்ஷ்மண பரத சத்ருக்னர்களில் ஸங்கர்ஷண பிரத்யும்ன அநிருத்தர்களின் ஆவேசம். ஆகவே அவர்கள் பகவானுடைய அவதாரங்கள் என்று சொல்லப்பட்டது. வாலியின் குமாரனான அங்கதனிடம் இந்திரனின் ஆவேசம் உண்டு. ஆகவே அவன் எப்பொழுதுமே பலிஷ்டனான். இவ்வாறு விசேஷமான ஆவேசம் படைத்தவர்கள் யாரென்றால் ஸ்ரீ பகவத் பாதாள் சுருக்கமாய் ஒரே வார்த்தையால் யேன்யேச பூபா: என்ற சுலோகத்தால் அறிவிக்கிறார். எந்த எந்த ராஜர்கள் கார்த்தவீர்யார்ஜுனன் முதலியவர்கள் ஆயிரக்



கணக்கானவர்கள் சாமான்யர்களைவிட பலம் மிகுந்தவர்களாயும் தர்மம் மிகுந்தவர்களாயும் குணப்பெருக்குடையவர்களாகவும் இருந்தார்களோ அவர்களனைவரும் ஸ்ரீ ஹரியின் விசேஷ ஆவேசங்கொண்டவர்களென்று அறியவும் என்று தெளிவாய் ஸ்ரீ பகவத் பாதாள் நிர்ணயம் செய்து காட்டியிருக்கிறார்.

இவ்வாறு இதர வியாக்யாதாக்கள் அர்த்தம் செய்த இந்த சுலோகங்களுக்கு வியாக்யானம் செய்யும்பொழுது ஸ்ரீ வாதிராஜரும் அறிவித்திருப்பதாவது—"தாவேவேதி|| ராமத: அனு கைகேய்யாம் பரதோ ஜாத:| சத்ருக்னோ லக்ஷ்மணஸ்ச ஸுமித்ராயாம் ரக்ஷத்தமாதனந்தர ஜாதௌ| ராமாநந்தர ஜாதயோ: ஹரேரநந்தரமுத்பன்னயோ: லக்ஷ்மண சத்ருக்னயோரபி ஸுதராம் ராமாத் அநந்தரஜாதத்வாத் ரக்ஷத்தமாதனு இத்யுக்தம்| பரத: ஸாக்ஷாத் அனுஜ:| இமௌது பரம்பரயா அனுஜௌ இதிபாவ:| கதமன்யதா ராமஸ்ய வனவாஸே பரதஸ்யைவ ராஜ்யம் பவிஷ்யதீத்யாசா கைகேய்யா:| அத ஏவோக்தம் மகாநாடகே| சதுர்ணாம் த்வமவரஜதயா யஸ்யஜாத: இதிகேசித்| தன்ன| ஆவிஷ்டரூபக்ரமானுஸாரித்வாதிதிபாவேனாஹ ஸங்கர்ஷணாத்யைரிதி| ஆவேசகதன ப்ரஸங்காத் ஹரே: விசேஷாவேசினஸ்ஸர்வான் ஏகயோக்த்யா ஸங்கிரத் தமாஹ யேன்ய இதி||" இதன் அர்த்தமாவது—தாவேவ என்னும் சுலோகத்தில், ராமதோனு என்றால் ராமருக்கு பின்னடி கைகேயிடம் பரதன் பிறந்தவன். சத்ருக்னனும் லக்ஷ்மணனும்கூட ஸுமித்ரையிடம் ரக்ஷத்தமாத் அனு ராமருக்கு பின்னடி பிறந்தார்கள். பரதனுக்கு பின்னடி பிறந்தவர்களான லக்ஷ்மண சத்ருக்னர்களும் நிச்சயமாய் ராமருக்கு பின்புதான் பிறந்தவர்களாதலால் ரக்ஷத்தமாத் அனு என்று ஸ்ரீ பகவத் பாதாளால் இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டது. பரதன ராமனுக்கு அடுத்த பின்னடி பிறந்த சாக்ஷாத்தான தம்பி, லக்ஷ்மண சத்ருக்னர்கள் ஆகிய இவ்விருவர்களோ பரம்பரையாய் ராமருக்கு தம்பிகள் என்று அபிப்பிராயம். அப்படிக்கில்லாவிடில் ராமர் வனவாஸம் சென்றால் பரதனுக்குத்தான் ராஜ்யம் கிடைக்குமென்று கைகேயிக்கு என் ஆசை ஏற்பட்டது. ஆகவே மகா நாடகத்தில் சதுர்ணாமவரஜதயா யஸ்ய ஜாத: என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று சிலர் கூறுகின்றனர். அது சரியல்ல, இந்த லக்ஷ்மண பரத சத்ருக்னர்களில் ஆவேசமடைந்த பகவத் ரூபங்களின் கிரமத்தை அது அனுசரிப்பதாய் இல்லை என்ற தாத்பரியத்துடன் ஸ்ரீ பகவத் பாதாள் ஸங்கர்ஷணாத்யை: என்னும் சுலோகத்தாலறிவிக்கிறார். பகவத் ஆவேசத்தைச்சொல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டதால் ஹரியின் விசேஷ ஆவேசம் படைத்தவர்களை எல்லாம்

சுருக்கமாய் ஒரே வார்த்தையால் காரணங்களுடன் யேன்யேச பூபா: என்ற சுலோகத்தால் ஸ்ரீ பகவத் பாதாள் அறிவிக்கிறார். என்றிவ்வாறு ஸ்ரீ வாதிராஜர் விசேஷமாய் பூர்வ பக்ஷ சமாதானத்துடன் இந்த ஜனன ப்ரகார சுலோகங்களுக்கு அர்த்தம் செய்திருக்கிறார். இதையே சிறிது விரிவாய்சாமான்யர்கள் அறிந்துகொள்ளும்படி நாம்எடுத்துக்கூறுவோம். ''சாமான்யமாய் ஸ்ரீ பகவத் பாதாளின் இந்த சுலோகங்களை அர்த்தம் செய்யும்பொழுது லக்ஷ்மணன் முன்னாடி பிறந்தவன் என்றும் பரத சத்ருக்னர்கள் பின்னாடி பிறந்தவர்கள் என்றும் ஸ்ரீ பகவத் பாதாள் சொன்னதாய்த் தெரிகிறது. லக்ஷ்மணன் ராமருக்கு பின்னாடி பிறந்தான் என்று அறிவிக்கும் ஸ்பஷ்டமாத் அநு என்னும் அவருடைய வாக்யத்திற்கு இம்மாதிரி அர்த்தம் செய்கிறோம். லக்ஷ்மணன் பரதனுக்கு பின்னாடி பிறந்திருப்பினும் ராமருக்கு பின்னாடி பிறந்தவன்தானே ஆகவே பரதன்தான் ராமருக்கு அடுத்த தம்பி. அந்த பரதனுடைய தம்பிமார்களான லக்ஷ்மண சத்ருக்னர்கள் ராமருக்கு பரம்பரையான தம்பிகள். அப்படி பரதன் ராமருக்கு அடுத்ததம்பியாய் இருந்ததால்தான் ராமர் வனவாசம் சென்றால் அவருக்கு அடுத்த தம்பியான பரதனுக்கு தானாக ராஜ்யம் கிரமப்படி வந்துசேருமென்று கைகேயிக்கு ஆசை ஏற்பட்டது. இவ்வாறே பரதன் ஜேஷ்டன் என்று நிச்சயிக்கும்படியாய் மகா நாடகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது என்று நாம்சொல்கிறோம்'' என்று ஒருவர் செய்த பூர்வ பக்ஷத்தை விஸ்தாரமாய் அனுவாதம் செய்து காட்டி இதை ஸங்கர்ஷணாத்மை: என்னும் சுலோகத்திற்கு அவதாரிகையாய் கூறி இதற்கு சமாதானத்தை ஸ்ரீ பகவத் பாதாளின் வார்த்தையால் அறிவிக்கிறார். ஸ்ரீ வாதிராஜருடைய சமாதானமாவது—பூர்வ பக்ஷிகளே! அவ்வாறு நீங்கள் லக்ஷ்மணன் ஜேஷ்டன் அல்லவென்றும் பரதன்தான் ஜேஷ்டனென்றும் நீங்கள் சொல்கிறபடி ஸ்ரீ பகவத் பாதாளின் அபிப்பிராயமன்று. ஏனெனில் பின்னாடி ஸங்கர்ஷணாத்மை என்ற சுலோகத்தில் லக்ஷ்மண பரத சத்ருக்னர்களில் சங்கர்ஷண ப்ரத்யும்னன் அநிருத்த ரூபங்கள் பிரவேசம் செய்ததாய் சொல்லியுள்ளார். ஆகவே அவர் அறிவித்தபடி பரதனிடம் ஆவேசமடைந்திருக்கும் ப்ரத்யும்ன ரூபத்தைவிட லக்ஷ்மணனிடம் ஆவேசமடைந்திருக்கும் ஸங்கர்ஷண ரூபம் ஜேஷ்ட கிரமமுள்ளதாகையால் உங்கள் பக்ஷ அந்த கிரமத்திற்கு ஒத்ததாயில்லை. ஆகவே லக்ஷ்மணன்தான் ஜேஷ்டனாவானென்று இவ்வாறு சமாதானம் சொல்லியுள்ளார். இதனாலிந்த சந்தர்ப்பத்திலுங்கூட ஸ்ரீ வாதிராஜர் லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்று சொன்னதாய் நன்கு விளங்குகிறது. ஸ்ரீ வாதிராஜரின் அபிப்பிராயம் மேலே விவ



ரித்தபடியுள்ள ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம், ஸங்கிரஹராமாயணம், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், இவைகளுக்கு நம்மவர்களால் இயற்றப்பட்டிருக்கும் அநேகவியாக்யானங்கள், இவைகளுக்கு முற்றிலும் அநுசரணையாகவே லக்ஷ்மணர் ஜேஷ்டன் என்பதற்கு சாதகமாய் இருப்பதுடன், அவர் தம் வியாக்யானத்திலேயே இதர சந்தர்ப்பங்களில் மேலே காட்டியபடி லக்ஷ்மணனை முதலில் கூறி லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்று அறிவித்ததற்கு பொருத்தமாகவும் இருக்கிறது. இவ்வாறு ஸ்பஷ்டமாக ஸ்ரீ வாதிராஜர் தம் அபிப்பிராயத்தை பல சந்தர்ப்பங்களில் அறிவித்திருந்தும் எதிர்வாதம் செய்பவர்கள் பரதன்தான் ஜேஷ்டன் என்பது ஸ்ரீ வாதிராஜரின் மதம் என்று மேலே கண்ட இந்த வியாக்யானத்தால் ஏற்படுவதாய் சாதித்தனர். இதில் ஸ்ரீ வாதிராஜர் கிளப்பிய பூர்வ பக்ஷம்தான் அவருடைய சித்தாந்தம் என்று வாதித்தனர். ஸ்ரீ வாதிராஜர் அந்த பூர்வ பக்ஷத்திற்கு இந்த வாக்யங்களில் அளித்த சமாதானம் இதிகேசித் தன்ன முதற்கொண்டுள்ள வாக்யங்களில்லை என்றே அடம் பிடித்தனர். தம்மிடமிருக்கும் அபத்தமான ஏட்டுப்பிரதியில் இந்த சித்தாந்த வாக்யம் காணப்படுவதில்லையாதலால் இதைக்கொண்ட புஸ்தகங்களெல்லாமே ஸ்ரீ வாதிராஜரின் வாஸஸ்தலமான உடுபி பிராந்தியத்தில் அகப்படும் பிரதிகளும்கூட நம்பத்தகுந்ததில்லை என்று பறைசாற்றினர். ஆதலால் எதிர்வாதம் செய்பவர்களின் பிரதியில் காணப்படும் பாடம் சரியா இதரர்களின் பிரதிகளிலுள்ள பாடம் சரியா என்று பரிசீலனை செய்யவேண்டியதாய் ஏற்பட்டது. ஆகவே மேலே சொன்ன பூர்வ பக்ஷம் ஸ்ரீ வாதிராஜரின் சித்தாந்தமாய் இருக்கக்கூடுமா என்பதை யோசிப்போம். எதிர்வாதம் செய்கிறவர்களின் பக்ஷியின்படி பரதன் ஜேஷ்டன் என்று ஸ்ரீ வாதிராஜர் சித்தாந்தம் செய்ததாய் சொல்லுவதற்கு மேற்கண்ட வியாக்யானத்தினின்றும் இரண்டு காரணங்களை தெரியவருகிறது.

(தொடரும்)

## சந்திர வம்சாவளி.

[இப்பத்திரிகாசிரியரின் பிதாமஹரும் ஆசாரியருமான காலஞ்சென்ற ஸ்ரீமான் சதுஸ்சாஸ்திர வித்வான் பராதர்சாசாரியார் என்கிற பாகவத சாமண்ணாசாரியார் அவர்கள் தொகுத்தது.]

I 1. ஸ்ரீலக்ஷ்மீநாராயணர் 2. அவருடைய குமாரர் சதுர்முகப்ரம்மா 3. அவருடைய குமாரர் அத்ரிரிஷி 4. அவருடைய குமாரன் சந்திரன் 5. அவருடைய குமாரன் புதன் 6.

அவருடைய குமாரன் புரூரவஸ் 7. அவருடைய குமாரர்கள், (i) ஆயுராஜன் (ii) ச்ருதாயுராஜன் (iii) ஸத்யாயுராஜன் (iv) ரய ராஜன் (v) விஜயராஜன் (vi) ஜயராஜன்.

குறிப்பு:—1, 2, 3 என்று குறிப்பிட்டால் ஒருவர், அவருடைய புத்ரன், அவருடைய புத்ரன் என்று அர்த்தம் செய்ய வேண்டும். 7. (i), (ii), (iii) என்று குறிப்பிட்டதற்கு 7ம் நபருடைய பிள்ளைகள் 1, 2, 3 என்று அர்த்தம் செய்யவேண்டும்.

II மேற்படி புரூரவஸ்ஸின் 6வது குமாரனை ஜயராஜனுடைய குமாரன் மிதன்.

III மேற்படி புரூரவஸ்ஸின் 5வது குமாரனை விஜயராஜனுடைய புத்ரபௌத்ராதி வம்ச பரம்பரையாவது:— 1. பீமன் 2. காஞ்சனன் 3. ஹோத்ரகன் 4. ஜன்ஹு 5. பூரு 6. பலாகன் 7. அஜகன் 8. குசன் 9. (i) குசாம்பன் (ii) வஸு (iii) குசநாபன் (iv) காதி 10. இவர்களில் காதியின் சந்ததி (i) ஸத்யவதீ என்னும் பெண் (ii) விச்வாமித்திரர். இவர்களில் 11. விச்வாமித்ரருடைய பிள்ளை சுனச்சேபன் 12. ரிஷிகள். மேற்கண்ட ஸத்யவதீயின் பிள்ளை ஜமதக்னி. 13. அவருடைய பிள்ளை பரசுராமர்.

IV ஷை புரூரவஸ்ஸின் 4வது குமாரனை ரயராஜனுடைய பிள்ளை அற்புதன்.

V ஷை புரூரவஸ்ஸின் 3வது குமாரனை ஸத்யாயு ராஜனின் குமாரன் சுருதம்ஜயன்.

VI ஷை புரூரவஸ்ஸின் 2வது குமாரனை சுருதாயு ராஜனின் குமாரன் வஸுமான்.

VII ஷை புரூரவஸ்ஸின் 1வது குமாரன் ஆயு ராஜனுடைய புத்ரர்கள் (i) நஹுஷன் (ii) க்ஷத்திர விருத்தன் (iii) ரஜி (iv) ராபன் (v) அநேநஸ்.

VIII புரூரவஸ்ஸின் குமாரன் ஷை ஆயுராஜனுடைய 5வது குமாரன் அநேநஸ்ஸின் புத்ரபௌத்ராதி வம்ச பரம்பரையாவது 1. சுத்தன் 2. சுசி 3. த்ரிககுப் 4 தர்மஸாரதி 5. சாந்தரஜஸ்.

IX ஷை ஆயு ராஜனுடைய 4வது குமாரன் ராபனுடைய புத்ர பௌத்ராதி வம்ச பரம்பரையாவது:— 1 ரபஸன் 2. கம்பீரன் 3. சக்ரகன் 4. பிறகு பிராம்மணர்கள்.



X ஆயு ராஜனுடைய 3வது குமாரன் ரஜியின் பிள்ளைகள் ஐந்நூறு பேர்.

XI ஆயு ராஜனுடைய 2வது குமாரன் க்ஷத்ரவிருத்தனின் குமாரர்கள் (i) ஸுஹோத்ரன் (ii) ப்ரதிக்ஷத்ரன்.

A மேற்கண்ட ப்ரதிக்ஷத்ரனின் புத்ரபௌத்ராதி வம்சமாவது— 1. ஸஞ்ஜயன் 2. ஜயன் 3. கிருதன் 4 வீர்யதனன் 5. ஸகதேவன் 6 ஹீனன் 7. ஜயத்ஸேனன் 8. ஸங்கிருதி 9 ஜயன் 10. க்ஷத்ரதர்மா.

B மேற்கண்ட ஸுஹோத்ரனின் பிள்ளைகள் (i) காச்யன் (ii) குசன் (iii) கிருத்ஸமதன்.

(அ) (iii) கிருத்ஸமதனின் பிள்ளை சுனகன். அவருடைய பிள்ளைகள் சௌனகாதிகள்.

(ஆ) (ii) குசனுக்கு வம்சமில்லை.

(இ) (i) காச்யனுடைய புத்ரபௌத்ராதி வம்சமாவது:— 1. காசி 2 ஸுராஷ்டிரன் 3. தீர்க்கதமஸ் 4. தன்வந்தரி 5. கேதுமான் 6. பீமரதன் 7. திவோதாஸன் 8. த்யுமான் 9. ப்ரதர்தனன் 10. குவலாச்வன் 11. அலர்கன் 12. ஸந்ததி 13. ஸுநீதன் 14. ஸுகேதனன் 15. தர்மகேது 16. ஸத்யகேது 17. திருஷ்டகேது 18. ஸுகுமாரன் 19. வீதிஹோத்ரன் 20. பர்கன் 21. பார்க்கபூமி.

XII ஆயு ராஜனுடைய 1வது குமாரன் நஹுஷனுடைய குமாரர்கள் (i) யதி (ii) யயாதி (iii) ஸம்யாதி (iv) ஆயாதி (v) வியதி (vi) க்ருதி. இவர்களில் (i), (iii), (iv), (v), (vi)க்கு ஸந்ததியில்லை.

XIII இவர்களில் மேற்படி யயாதியின் குமாரர்கள் (i) யது (ii) துர்வாஸு (iii) த்ருஹ்யு (iv) அநு (v) பூரு.

XIV ஷை (i) யது ராஜனின் புத்திரர்கள் (i) ஸஹஸ்ரஜித் (ii) க்ரோஷ்டா (iii) அநலன் (v) ரிபு.

A மேற்படி (i) ஸஹஸ்ரஜித்தின் குமாரன் 1 சதஜித். அவனுடைய குமாரர்கள் 2. (i) மஹாஹயன் (ii) வேணுஹயன் (iii) ஹேஹயன். இவர்களில் ஹேஹயனின் குமாரன் 3. கேத்ரன் 4. குந்தி 5 ஸோஹஞ்ஜி 6. மஹிஷ்மான் 7. புத்ரசேனன் 8. துர்மதன் 9. தனகன் 10. (i) கிருதவீர்யன் (ii) கிருத்யாக்னி (iii)

கிருதவர்மா (iv) கிருதௌஜஸ். இவர்களில் கிருதவீர்யனின் குமாரன் 11. அர்ஜுனன் (கார்த்தவீர்யார்ஜுனன்) 12. (i) ஜயத்வஜன் (ii) சூரசேனன் (iii) விருஷபன் (iv) மது. இவர்களில் ஷை (i) ஜயத்வஜனின் பிள்ளை 13. தாளஜங்கன் 14. வீதிஹோத்ரன் 15. மது 16. விருஷ்ணி 17. விருஷ்ணிகள். இது யது ராஜனின் ஜ்யேஷ்ட வம்சம்.

B ஷை க்ரோஷ்டாவின் (யது ராஜனின் 2வது பிள்ளையின்) புத்ர பௌத்ராதி வம்சமாவது:— 1. விருஜினவான் 2. ஸ்வாஹிதன் 3. பேருசங்கு 4. சித்ரரதன் 5. சசபிந்து 6. தர்மன் 7. ருசகன் 8. ஜ்யாமகன் 9. விதர்பன் 10. (i) குசன் (ii) க்ரதன் (iii) ரோமபாதன்.

(அ) ஷை (iii) ரோமபாதனுடைய புத்ர பௌத்ர வம்சமாவது:—1. பப்ரு 2. கிருத்தி 3. உசிகர் 4. சிதி 5. சைத்யர்கள்.

(ஆ) ஷை (i) குசனுக்கு வம்சமில்லை.

(இ) ஷை (ii) க்ரதனுடைய மகாபாக்யசாலியான புத்ர பௌத்ராதி வம்சமாவது:— 11. குந்திபோஜன் 12. பலி 13. நிர்விருதி 14. தசார்ஹன் 15. வ்யோமன் 16. ஜீமூதன் 17. விகிருதி 18. பீமரதன் 19. நவரதன் 20. தசரதன் 21. சகுனி 22. கரம்பன் 23. தேவாரதன் 24. தேவக்ஷத்திரன் 25. மது 26. அனு 27. புருஹோத்திரன் 28. ஸாத்வதன் 29. (i) பஜமானன் (ii) பஜி (iii) திவ்பன் (iv) விருஷ்ணி (v) தேவாவ்ருத்தன் (vi) அந்தகன் (vii) மகாபோஜன்.

1. ஷை (vii) மகாபோஜனுடைய பிள்ளைகள் போஜர்கள்.

2. ஷை (iv) அந்தகனின் பிள்ளைகள் அந்தகர்கள்.

3. ஷை (v) தேவாவ்ருத்தருடைய குமாரன் பப்ரு.

4. ஷை (iv) விருஷ்ணியின் புத்ரபௌத்ராதிவம்சமாவது:— 1. ஸுமித்திரன் 2. யுதாஜித் 3. (i) சினி (ii) அநமித்ரன்.

(க) ஷை (ii) அநமித்ரனுடைய குமாரர்கள் (i) நிம்னன் (ii) யுகந்திரன்.

a. ஷை யுகந்தரனுடைய குமாரர்கள் (i) ச்வபல்கன் (ii) சித்ரரதன் ஷை சித்தரரதனுடைய குமாரன் விபிருது முதலியோர். ஷை ச்வபல்கனுடைய குமாரன் அக்ரூரன் முதலியோர்.



b. ஷை நிம்னனுடைய பிள்ளை ஸ்ரீ ரஸ்னு. அவருடையபிள்ளைகள் (i) ஸத்ராஜித் (ii) ப்ரஸேனஜித். இவர்களில் ஷை ஸத்ராஜித்தின் பெண் ஸத்யபாமா தேவி. அவளுடைய குமாரன் பானு.

(ங) ஷை சினியின் புத்திர பௌத்ர வம்சமாவது:— 1. ஸத்யன் 2. ஸாத்யகி 3. ஜைஜயன் 4. குணி.

5. ஷை இவ்யனுக்கு வம்சமில்லை.

6. ஷை பஜிக்கு வம்சமில்லை.

7. ஷை பஜமானனின் பிள்ளைகள் (i) நிம்லோசி முதலியோர் 6 பேர் (ii) விடூரதன் (iii) குக்குரன்.

(a) ஷை குக்குரனுடைய புத்ரபௌத்ராதி வம்சமாவது:— 1. விருஷ்ணி 2. விலோமா 3. கபோதரோமா 4. அனு 5. துந்துபி 6 அரித்யோதன் 7. புனர்வஸு 8. (i) ஆஹுகன் (ii) ஆஹுகி இவர்களில் ஆஹுகனுடைய பிள்ளைகள் 9. (i) தேவகன் (ii) உக்ரஸேனன் இவர்களில் தேவகனுடைய பெண்கள் (i) தேவகி தேவி (ii) சாந்தி தேவி (iii) உபதேவா தேவி (iv) ஸ்ரீ தேவாதேவி (v) தேவரக்ஷிதா தேவி (vi) ஸகதேவா தேவி (vii) தேவா தேவி. மேற்படி உக்ரஸேனனுடைய பிள்ளைகள் (i) கம்ஸன் (ii) ஸுநாமர் (iii) ந்யக்ரோதன் (iv) கம்ஹவன் (v) சங்கு (vi) ஸுப்ரு (vii) ராஷ்டிரபாலன் (viii) ஆப்தவிருஷ்டி.

(b) ஷை விடூரதனின் பாக்யசாலியான புத்ரபௌத்ர வம்சமாவது—1. சூரன் 2. சினி 3. போஜன் 4. ஹ்ருதிகன் 5. (i) தேவமீடன் (ii) சததனு (iii) கிருதவர்மா இவர்களில் தேவமீடனுடைய வம்சம் 6. (i) வஸுதேவன் (ii) குந்தி (iii) ச்ருததேவா (iv) சுருதகீர்த்தி (v) ராஜாதிதேவி (vi) சுருதச்ரவா தேவி.

1. இவர்களில் ஷை வஸுதேவருடைய வம்சம் (i) ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி (ii) ஸ்ரீ பலராமர் (iii) ஸுபத்ர தேவி (iv) சிருகாளன் (v) பௌண்ட்ரன். இவர்களில் ஸுபத்திரையின் பிள்ளை அபிமன்யு. ஷை பலராமருடைய பிள்ளைகள் (i) சடன் (ii) உல்முகன் ஷை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளை 7. ப்ரத்யும்னன் 8. அநிருத்தன் 9. வஜ்ரன்.

2. ஷை குந்தியின் பிள்ளைகள் கர்ணன், பாண்டவர்கள்.

3. ஷை ச்ருததேவா தேவியின் பிள்ளை தந்தவக்ரன்.

4. ஷை ச்ருதகீர்த்திதேவியின் பிள்ளைகள் பஞ்சகேகயர்கள்.

5. ஷை ராஜாதி தேவியின் பிள்ளை ஜயத்ஸேனன்.

6. ஷை ச்ருதச்ரவா தேவியின் பிள்ளை சிசுபாலன்.

இது யது ராஜனின் 2வது குமாரன் க்ரோஷ்டாவின் வம்சம். இத்துடன் யது வம்சம் முடிவு.

XV ஷை யயாதியின் 2வது குமாரனான துர்வஸு ராஜனின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. வன்ஹி 2. பாகன் 3. பானுமான் 4. த்ருபானு 5. காரந்தமன் 6. மருத்தன் 7. துஷ்யந்தன் (பௌரவன்)

XVI ஷை யயாதியின் 3வது குமாரனான த்ருஹ்யு ராஜனின் புத்ரபௌத்ராதி வம்சமாவது—1. பப்ரு 2. ஸேது 3. காந்தாரன் 4. தர்மன் 5. திருதன் 6. கர்தமன் 7. ப்ரசேதஸ் 8. ப்ராசேதஸர்கள்.

XVII ஷை யயாதியின் 4வது குமாரனான அனு ராஜனின் புத்ரபௌத்ரவம்சமாவது—1. (i) ஸபாநரன் (ii) சக்ஷு (iii) ப்ரேக்ஷு இவர்களில் ஸபாநரனுடைய பிள்ளை 2 காலநரன் 3. ஸ்ருஞ்ஜயன் 4. ஜனமேஜயன் 5. மகாமனஸ் 6. (i) உசீனரன் (ii) திதிக்ஷு.

A ஷை உசீனரனுடைய பிள்ளைகள் (i) சிபி (ii) வேனன் (iii) க்ருமி (iv) தக்ஷன்.

1. ஷை சிபியின் குமாரர்கள் (i) விருஷதர்பன் (ii) ஸுவீரன் (iii) மத்ரன் (iv) கேகயன்.

B ஷை திதிக்ஷுவின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. ப்ருஷத்ரதன் 2. ஹேமன் 3. ஸுதபஸ் 4. பலி 5. (i) அங்கன் (ii) வங்கன் (iii) கலிங்கன் (iv) ஸும்ஹன் (v) புண்ட்ரன் (vi) ஆந்த்ரன் இவர்களில் அங்கனுடைய குமாரன் 6. கனபானன் 7. திவிரதன் 8. தர்மரதன் 9. ரோமபாதன் 10. (i) சாந்தாதேவி (ii) சதுரங்கன் இவர்களில் சதுரங்கனுடைய பிள்ளை 11. பிருதுலாக்ஷன் 12. (i) பிருஹத்ரதன் (ii) பிருஹத்கர்மா (iii) பிருஹத்பானு இவர்களில் பிருஹத்ரதனுடைய குமாரன் 13.



ஜயத்ரதன் 14. விஜயன் 15 திருதி 16. திருதவ்ரதன் 17. ஸத்யகர்மா 18. அதிரதன் 19. கர்ணன் 20. விருஷஸேனன்.

XVIII ஷை யயாதியின் 5வது குமாரரான பூரு ராஜனின் புத்ரபௌத்ராதி வம்சமாவது:—1. ஜனமேஜயன் 2. ப்ரசின்வான் 3. ப்ரவீரன் 4. நமஸ்யன் 5. சாருபதன் 6. ஸுத்யு 7. பஹுகவன் 8. ஸம்யாதி 9. ஹம்யாதி 10. ரௌத்ராச்வன் 11 (i) ரிதேயு (ii) கக்ஷேயு (iii) ஸ்தலேயு (iv) கிருதேயு (v) ஜலேயு (vi) ஸந்ததேயு (vii) தர்மன் (viii) ஸத்யவ்ரதேயு (ix) வனேயு (x) அவமன் இவர்களில் மூத்தவனான ரிதேயுவின் குமாரன் 12. அந்திநாரன் 13. (i) ஸுமதி (ii) துருவன் (iii) ப்ரதிதரன் இவர்களில் ஷை ப்ரதிதரனுடைய பிள்ளை கண்வர். அவருடைய பிள்ளை மேதாதிதி. அவருடையபிள்ளைகள் கண்வாயனர்கள். ஷை ஸுமதியின் பிள்ளை 14. ரைப்யன் 15. துஷ்யந்தன் 16. பரதன் 17. விததன் 18. மன்யு 19. பிருஹத்க்ஷத்ரன் 20. (i) ஜயன் (ii) ஹோத்ரன்.

(அ) ஷை ஜயனுடைய குமாரர்கள் (i) கர்கன் (ii) நரன்.

1. ஷை நரனுடைய குமாரன் ஸங்கிருதி அவருடைய பிள்ளை குரு.

2. ஷை கர்கனுடைய குமாரன் சினி. அவருடைய பிள்ளை த்ரய்யாருணி. அவருடைய பிள்ளை புஷ்கராருணி.

(ஆ) ஷை ஹோத்ரனுடைய பிள்ளை 21. ஹஸ்தீ அவருடைய பிள்ளைகள் (i) அஜமீடன் (ii) த்விமீடன் (iii) புருமீடன்.

1. ஷை புருமீடனுக்கு வம்சம் இல்லை.

2. ஷை த்விமீடனுடைய புத்ரபௌத்ர வம்சமாவது:— 1. யவீநரன் 2. ரந்திமான் 3 ஸத்யதிருதி 4. திருடநேமி 5. ஸுபார்ச்வன் 6. ஸுமதி 7. ஸந்நதிமான் 8. கிருதி 9. உக்ராயுதன் 10. க்ஷேம்யன் 11. ஸுவீரன் 12. ரிபுஞ்ஜயன்.

3. ஷை அஜமீடனுடைய பிள்ளைகள் (i) பிருஹதிஷு (ii) சாந்தி (iii) ரிக்ஷன்.

(க) ஷை பிருஹதிஷுவின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. பிருஹத்தனு 2. பிருஹத்காயன் 3. ஜயத்ரதன் 4. விசதன் 5. ச்யேனஜித் 6. (i) ருசிராச்வன் (ii) திருடஹனு (iii) காச்யன். இவர்களில் ருசிராச்வனுடைய குமாரன் 7.

யாஜ்யன் 8. பிருதுஸேனன் 9. பாரன் 10. நீபன் 11 ஸமரன் 12. பாரன் 13. பிருது 14. ஸுகிருதி 15 த்விஜன் 16. அனுகன் 17. பிரம்மதத்தன் 18. விஷவக்ஸேனன் 19. உதக்ஸேனன் 20. பார்ஹதீஷ்வர்கள்.

(ஙு) ஷை சாந்தியின் புத்ரபௌத்ராதி வம்சமாவது—1. ஸுஸாந்தி 2. பூருஜன் 3. அர்கன் 4. ஹர்ம்யாச்வன் 5. (i) முத்கலன் (ii) யவீநரன் (iii) பிருஹதிஷு (iv) காம்பிலன் (v) ஸிஞ்ஜயன். இவர்களில் முத்கலரின் சந்ததிகள்—5. (i) அஹல்யா (ii) திவோதாஸர்.

(a) ஷை அஹல்யாவின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. சதாநந்தர் 2. ஸத்யதிருதி 3. சரத்வான் 4. (i) கிருபாசாரியார் (ii) கிருபிதேவி. கிருபிதேவியின் குமாரர் அசுவத்தாமா.

(b) ஷை திவோதாஸரின் புத்ரபௌத்ராதி வம்சமாவது—1. மித்ராயு 2. ச்யவனர் 3. ஸுதாஸன் 4. ஸகதேவன் 5. ஸோமகன் 6. ஜந்து 7. பிருஷதன் 8. த்ருபதராஜன் 9. (i) த்ரௌபதி (ii) த்ருஷ்டத்யும்னன். இவர்களில் த்ரௌபதியின் குமாரர்கள் (i) ப்ரதிவிந்த்யன் (ii) சுருதஸேனன் (iii) சுருதகீர்த்தி (iv) சதானீகன் (v) ச்ருதக்ரியன் ஷை த்ருஷ்டத்யும்னனின் பிள்ளை த்ருஷ்டகேது. அவருடைய பிள்ளைகள் பாஞ்சாலராஜர்கள்.

(ச) ஷை ரிக்ஷரின் புத்ரபௌத்ராதிவம்சமாவது—1. ஸம்வரணர் 2. குரு 3. (i) பரீக்ஷித் (ii) ஸுதனு (iii) ஜன்ஹு (iv) நிஷதன். இவர்களில் 1வது குமாரன் பரீக்ஷித்துக்கும் 4வது குமாரன் நிஷதனுக்கும் வம்சமில்லை.

(a) ஷை ஸுதனுவின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. ஸுஹோத்ரன் 2. ச்யவனன் 3. கிருதி 4. வஸு 5. (i) சேதயன் (ii) பிருஹத்ரதன். இவர்களில் பிருஹத்ரதனின் பிள்ளைகள் 6. (i) ஜராஸந்தன் (ii) குசாக்ரன்.

1. இவர்களில் குசாக்ரனின் புத்ர பௌத்ரவம்சமாவது—1. விருஷபன் 2. ஸத்யஹிதன் 3. புஷ்யவான் 4. ஜஹு.

2. ஷை ஜராஸந்தனின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. ஸகதேவன் 2. ஸோமாபி 3. ச்ருதச்ரவஸ் 4. அயுதாயு 5. நிரமித்ரன் 6. ஸுநக்ஷத்ரன் 7. பிருஹத்ஸேனன் 8. கர்மஜித் 9. சுருதம்ஜயன் 10. விப்ரன் 11. சுசி 12. க்ஷேமன் 13. ஸுவ்ரதன் 14. தர்மஸுத்ரச்ரமன் 15. திருடஸேனன் 16. ஸுமதி 17. ஸுபலன் 18. ஸுநீதன் 19. ஸத்யஜித் 20. விச்வஜித் 21. ரிபுஞ்ஜயன்.



(b) ஷை ஜன்ஹுவின் புத்ரபௌத்ராதி வம்சமாவது—1. ஸுரதன் 2 விடூரதன் 3. ஸார்வபௌமன் 4. ஜயத்ஸேனன் 5. ர்ருத்யோதன் 6. த்யுமான் 7. க்ரோதனன் 8. தேவாதிதி 9 ரிக்ஷன் 10. திலீபன் 11. ப்ரதீபன் 12. (i) தேவாபி (ii) பால்ஹீகன் (iii) சந்தனு.

1. ஷை பால்ஹிகனின் புத்ரபௌத்ர வம்சமாவது—1. ஸோமதத்தன் 2 (i) பூரி (ii) பூரிச்ரவஸ் (iii) சலன்.

2 ஷை சந்தனுவின் குமாரர்கள் (i) பீஷ்மாசாரியார் (ii) சித்ராங்கதன் (iii) விசித்ரவீர்யன். இவர்களில் விசித்வீர்யனின் பிள்ளைகள் (i) திருதராஷ்டிரன் (ii) பாண்டுராஜன் (iii) விதுரன்.

(அ) இவர்களில் திருதராஷ்டிரனுடைய பிள்ளைகள் துரியோதனன் துச்சாசனன் முதலான 101 பேர்கள்.

(ஆ) பாண்டுராஜனுடைய குமாரர்கள் 1. (i) தர்மபுத்திரர் (ii) பீமசேனர் (iii) அர்ஜுனன் (iv) நகுலன் (v) சகதேவன். இவர்களில் அர்ஜுனனுடைய பிள்ளை 2. அபிமன்யு அவருடைய பிள்ளை 3. பரீக்ஷித். அவருடைய பிள்ளைகள் 4. (i) ஜனமேஜயன் (ii) ச்ருதஸேனன் (iii) பீமசேனன் (iv) உக்ரஸேனன். இவர்களில் ஜனமேஜயனின் பிள்ளை 5 சதானீகன் 6. ஸஹஸ்ராநீகன் 7. அசுவமேதஜன் 8. விஸ்ரம்பகிருஷ்ணன் 9. நேமிசக்ரன் 10. உப்தன் 11. சித்ரரதன் 12. த்ருதிமான் 13. ஸுஷேணன் 14. ஸுநீதன் 15. ந்ருசக்ஷு 16. ஸுகீகலன் 17. பாரிப்லவன் 18. மேதாவி 19. ந்ருபஞ்ஜயன் 20. தூர்வன் 21. திமி 22. பிருஹத்ரதன் 23. சதானீகன் 24. துர்தமனன் 25. அஹீனரன் 26. தண்டபாணி 27. நிமி 28. க்ஷேமகன். இவருடன் சந்திர வம்சம் முடிவு.

இந்த சூரிய வம்சம், சந்திர வம்சம் இவைகளில் உதித்த பகவத் பக்தர்களான மகாராஜர்களின் பெயரை தினம் ஒருதரம் சொன்னாலுமே தீர்க்காயுஸ், தனம், யசஸ் ஐசுவரியம் உத்தமலோகம் முதலியவை கிடைக்குமென்பதில் ஆக்ஷேபனை இல்லை என்று மகாபலன் சொல்லப்பட்டிருப்பதை வாசகர்கள் அறிவார்களாக. ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

# விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 336ம் பக்கம் தொடர்ச்சி.)

**41.** புஷ்கராக்ஷ: (ஓம் புஷ்கராக்ஷாய நம:) கமலம்போன்ற கண்களுள்ளவர். அநந்தமான கண்களுள்ளவர். புஷ்டியைத் தருகிறவராய் சுயம் நாசமில்லாதவர்.

**42.** மஹாஸ்வன: (ஓம் மகாஸ்வனாய நம:) சொத்து இல்லாதவர்களுக்கு சொத்தைத் தரும் மேலானவர். மகானை வாயு பகவானை நடத்துகிறவர். கம்பீரமான சப்தமுடையவர். வேதத்தை சிறந்த சப்தமாகக்கொண்டவர். சிறந்த நாமமுள்ளவர்.

**43.** அநாதிநிதன: (ஓம் அநாதிநிதனாய நம:) உற்பத்தியும் நாசமில்லாதவர். முக்யப்ராணரின் உற்பத்தி நாசத்துக்கு காரணமாயிருப்பவர். முக்யப்ராணரை மூச்சுவிடும்படி செய்பவராய் ருத்திராந்தர்யாமியான நரஸிம்ஹ ரூபத்தால் மன்மதனுடைய சம்ஹாரத்திற்கு காரணமாயிருப்பவர். பகவத் விஷயமான பாட்டுகளை பாடுபவர்களுக்கு மரணத்தை உண்டாக்காமல் இருப்பவர். ஜனனம் மரணம் முதலிய மாறுதலில்லாதவர்.

**44.** தாதா (ஓம் தாத்ரே நம:) உலகத்தை தரித்து போஷிப்பவர். உலகத்தை தரிக்கும் ஆதிசேஷனின் அந்தர்யாமியாயிருப்பவர்.

**45** விதாதா (ஓம் விதாத்ரே நம:) கருடனை தரிப்பவனைக் கொண்டவர். தரிப்பவரும் போஷகருமில்லாதவர். முக்தர்களுக்கு ஆதாரமாய் இருப்பவர். கர்மங்களையும், கர்ம பலன்களையும் உண்டாக்குகிறவர். உலகத்தை தரிக்கும் ஆதிசேஷாதிகளையும் விசேஷமாய் தரிப்பவர்.

**46.** தாதுருத்தம: (ஓம் தாதுருத்தமாய நம:) தாது சப்தங்களால் சொல்லப்படுகிறவர்களில் சிறந்தவர். வியாகரண தாதுகள் அவைகளின் உண்மையான வேற்றுமைகள் இவைகளுடன் வியவஹரிப்பவரான ஹனுமாரால் இச்சிக்கப்படுகிறவர். சதுர்முகனை விட உத்தமர். ஞானரூபியான பொருளாயும், உத்தமராயுமிருப்பவர். காரியகாரண பிரபஞ்சத்தை தரிப்பவராயும் உத்தமராயுமிருப்பவர்.



**47.** அப்ரமேய: (ஓம் அப்ரமேயாய நம:) கணக்கிட முடியாததான அனந்த குணங்களைக்கொண்டவர். புதிதாய் அறிய வேண்டிய விஷயமே இல்லாதவர். (எல்லாம் அறிந்தவரென்பது பொருள்) தியானம் செய்யப்படவேண்டிய எல்லா குணங்களுள்ளவர். பக்தர்களால் அறியப்படவேண்டிய மேன்மையான குணங்களைக்கொண்டவர். விஷ்ணுவாயும் அறியத்தகுந்தவராயுமிருப்பவர். விஷ்ணுவாயும் சிறந்தவளான லக்ஷ்மிக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறவராயுமிருப்பவர். ப்ரமாணங்களுக்கு ஸம்பூர்ணமாய் எட்டாதவர். ஸம்பூர்ணமாய் அறியமுடியாதவர்.

**48.** ஹிருஷீகேச: (ஓம் ஹிருஷீகேசாய நம:) சந்தோஷமுள்ளவராயும், லக்ஷ்மீ, பிரம்மா இவர்களுக்கு ஈசுவரனுமிருப்பவர். லக்ஷ்மீ, பிரம்மா, ருத்திரன் இவர்களின் சந்தோஷத்திற்கு காரணமாயிருப்பவர். இந்திரியங்களுக்கு அதிபதியானவர். இந்திரியங்களை வசப்படுத்துகிறவர். இந்திரியங்களை நடத்துகிறவர். உலகத்தை சந்தோஷப்படுத்தும் சூரிய, சந்திராதி கிரணங்களுடையவர். ஸந்தோஷமும், ஸௌக்யமும் ஐசுவரியமும் பொருந்தியவர். சந்தோஷத்தைத்தரும் அவயவங்களுள்ளவர். தேவர்களின் சந்தோஷத்திற்கு காரணமான ஸோமயக்ஞத்தில் ரித்விக்குகளால் தனது உத்தேசமாய் ஜலம் பால் முதலியவைகளும் மிச்ரம் செய்யப்படுவதாய் அந்த யக்ஞத்தை போஜனம் செய்பவர். மகாலட்சுமியின் சுகத்திற்கு நியாமகராயிருப்பவர். சூரியன் சந்திரன் அக்னி இவர்களில் இருந்துகொண்டு எல்லா ஜகத்திற்கு போதனை ஸ்தாபனம் இவைகளால் சந்தோஷாதிகளைத் தருபவர். சூரியன் சந்திரன் அக்னி இவர்களின் அந்தர்யாமியாயிருந்து உலகத்தை ப்ரவிருத்திப்பவர். சந்தோஷத்தைத் தருவதாயுள்ள ராம கிருஷ்ணாதி ரூபங்களுள்ளவர். ஆனந்தாதிகளால் பூர்ணர். வாயுபகவானுக்கு அதிபதி.

**49.** பத்மநாப: (ஓம் பத்மநாபாய நம:) தாமரையை தொப்பிளில் கொண்டவர். காலில் ஐசுவரியமுடையவராயும் நாபிராஜாவின் பிள்ளையான விருஷபர் என அவதாரமெடுத்தவராயுமுள்ளவர். காலில் லக்ஷ்மியைக்கொண்டவராயும் காந்தியில்லா

மையைக்கொள்ளாதவராயுமிருப்பவர். பத்மத்தை மலரச்செய்யும் சூரியனைப்போன்ற காந்தியுள்ளவர்.

50. அமரப்ரபு: (ஓம் அமரப்ரபவே நம:) தேவர்களுக்கு அதிபதியானவர். பிரம்மாதி தேவர்களையும் நடத்துகிறவர். ஞானத்தை அளிக்கும் தலைவர். அளவில்லாத விளையாட்டு உள்ள ப்ரபு. விஷ்ணுவின் க்ஞானத்தைக் கொண்டவர்களை அரசரினும் மேலானவராயிருப்பவர்.

51. விச்வகர்மா (ஓம் விச்வகர்மணே நம:) கருடனுடன் செல்பவராய் கஷ்டமில்லாதவர். கருடன் மீதேறிச்செல்லும் கர்மபந்தமில்லாதவர். எல்லா செய்கைகளுக்கும் காரணமாயிருப்பவர். பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவர். விச்வகர்மா என்னும் தேவசில்பியிடம் அந்தர்யாமியாயிருப்பவர். அநந்தமான விசித்ர செயல்களுள்ளவர்.

52. மனு: (ஓம் மனவே நம:) ஞான ரூபியாய் இருப்பவர். ஸர்வத்தையும் நினைப்பவர். மந்திர ரூபியானவர். மனுவாய் அவதரித்தவர்.

53. த்வஷ்டா (ஓம் த்வஷ்ட்ரே நம:) பிரகாசித்திருப்பவர். எல்லாவற்றையும் அழிப்பவர். ஜகத்தை விபாகம் செய்பவர்.

54. ஸ்தவிஷ்ட: (ஓம் ஸ்தவிஷ்டாய நம:) அத்யந்தம் பருத்தவர். மிகவும் ஸ்தூலமாயிருப்பவர்.

55. ஸ்தவிர: (ஓம் ஸ்தவிராய நம:) வயது சென்றவர். புராதனமானவர்.

56. த்ருவ: (ஓம் த்ருவாய நம:) ஸ்திரமாயிருப்பவர். ஒரே நிலையாயிருப்பவர்.

57. அக்ராஹ்ய: (ஓம் அக்ராஹ்யாய நம:) சம்பூர்ணமாய் கிரஹிக்க முடியாதவர். இனி கிரஹிக்க வேண்டியது இல்லாதவர் ஸுலபமாய் அடையமுடியாதவர். உத்தமராய் குணங்களால் மிகுந்துமிருப்பவர்.

58. சாச்வத: (ஓம் சாச்வதாய நம:) எக்காலமும் ஒரே வகையாய் இருப்பவர்.

59. கிருஷ்ண: (ஓம் கிருஷ்ணாய நம:) நியமனம் முதலியவைகளைச்செய்துகொண்டு எல்லா உலகத்தையும் ஆகர்ஷணம் செய்பவர். கருப்பான வர்ணமுள்ளவர். ஸச்சிதாநந்த ரூபமுள்ளவர். சத்ருக்களை இழுப்பவர்.



60. லோஹிதாக்ஷ: (ஓம் லோஹிதாக்ஷாய நம:) இயற்கையாய் சிவந்த கண்களுள்ளவர். ஹிரண்யகசிபு முதலான சத்ருக்களிடம் கோபமுள்ள சிவந்த கண்களுள்ளவர்.

61. ப்ரதர்த்தன: (ஓம் ப்ரதர்த்தனாய நம:) சத்ருவை ஹிம்சிப்பவர். எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவர்.

62. ப்ரபூத: (ப்ரபூதாய நம:) துரௌபதிக்காக ஏராளமான நூல்வஸ்திரங்களை உண்டாக்கியவர். மிகுந்து இருப்பவராய் குணங்கள் நிரம்பியவர். ஆகாசம் முதலிய உத்தம பஞ்ச பூதங்களை உண்டாக்கியவர்.

63. த்ரிககுப்தாமா } (ஓம் த்ரிககுப்தாம்னே நம:)
த்ரிககுத்தாமா } (ஓம் த்ரிககுத்தாம்னே நம:) அநந்தாஸனம் சுவேதத்வீபம் வைகுண்டம் என்ற மூன்று ஸ்தானங்களுடையவராதலால் த்ரிககுப்தாமா எனப்படுகிறார். மூன்று கொண்டைகளுடன் கூடிய வராகாவதாரம் செய்தவராதலால் விஷ்ணு த்ரிககுத்தாமா எனப்படுகிறார்.

64. பவித்ரம் (ஓம் பவித்ராய நம.) சக்ராயுதத்தைக்கொண்டவர். பரிசுத்தப்படுத்துகிறவர். இடிபோன்ற மகா ஆபத்தினின்றும் காப்பாற்றுகிறவர். வஜ்ராயுதம் போல் காப்பாற்றுகிறவர்.

65. மங்களம் (ஓம் மங்களாய நம:) கல்யாண ரூபியானவர். இதரர்களுக்கு அளிக்க மங்களத்தைக் கொண்டவர்.

66. பரம் (ஓம் பராய நம:) ஸர்வோத்தமானவர். ஸர்வ விலக்ஷணமானவர்.

67. ஈசான: (ஓம் ஈசானாய நம:) பரமசிவனை கட்டளையிடும்படி செய்கிறவர். லக்ஷ்மிக்கு ஸுகத்தை உண்டாக்குகிறவராய் வாயு பகவானின் அதிபதியானவர். முக்தர்களை நடத்துகிறவர். எல்லாவற்றையும் அடக்கி நடத்துகிறவர்.

68. ப்ராணத: (ஓம் ப்ராணதாய நம:) ப்ராணன்களை கொடுப்பவர். சுகத்திற்கு விருத்தமாயுள்ள துக்கத்தை மிகுந்து கண்டிப்பவர்; உயிர்களை நடத்துகிறவர். உயிர்களை கண்டிப்பவர்.

69. ப்ராண: (ஓம் ப்ராணாய நம:) மேலான செய்கையுடையவர். உயிராயிருப்பவர். ப்ராணனுக்கு நியாமகராயிருப்பவர்.

70. ஜ்யேஷ்ட: (ஓம் ஜ்யேஷ்டாய நம:) காலத்தால் முதன்மையானவர். குணங்களால் முதன்மையானவர். மிக்கச்லாக்யமானவர். பரமவிருத்தர்.

71. ச்ரேஷ்ட: (ஓம் ச்ரேஷ்டாய நம:) காலத்தால் எல்லாவற்றிற்கும் மேற்பட்டவர். குணங்களால் எல்லாவற்றிற்கும் மேற்பட்டவர்.

72. ப்ரஜாபதி: (ஓம் ப்ரஜாபதயே நம:) ப்ரஜைகளை பாலனம் செய்கிறவர். மேலானவராய் பிறந்து தனக்கு மேல் அதிபதி இல்லாதவருமாயிருப்பவர். எல்லா பிரஜைகளுக்கும் ஸ்வாமி.

73. ஹிரண்யகர்ப: (ஓம் ஹிரண்ய கர்பாய நம:) ஸுவர்ணமயமான பிரம்மாண்டத்தை வயிற்றில் தரித்தவர். ஹிதமாகவும் ரமணீயமாகவுமுள்ள ஹிரண்யமென்ற வைகுண்டத்தில்வசிப்பவர்.

(தொடரும்)

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதசாரியாரின் மொழி பெயர்ப்பு.

## இருபத்தி ஒன்பதாம் அத்தியாயம்.

(முன் 339ம் பக்கம் தொடர்ச்சி)

### யுதிஷ்டிர பட்டாபிஷேகம்.

இந்த அத்யாயத்தில் ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாளால் மகாபாரதம் சாந்தி பர்வம் அநுசான பர்வம் இவைகளில் சொல்லப்பட்டிருக்கும் ராஜ தர்மம் ஆபத் தர்மம் மோக்ஷ தர்மம் தான தர்மம் இவைகளின் ஸாராம்சத்தைச் சொல்லுகிறார்.

பிராம்மணர்களுடன் சேர்ந்து ஸ்ரீ வேதவியாஸரும் கிருஷ்ண மூர்த்தியும் எல்லா மகா ராஜ்யத்தில் தர்மபுத்திரரையும் யௌவ ராஜ்யத்தில் பீமசேனரையும் பட்டாபிஷேகம் செய்து இவர்களுக்கு உசிதமான ஆசீர்வாதங்களையும் செய்து தர்மபுத்திரரையும் பீமசேனரையும் இவர்கள் சந்தோஷப்படுத்தினார்கள்.



### சார்வாக வதம்

அச்சமயம் சார்வாகனென்ற ஓர் பிரசித்தனான ராக்ஷஸன் த்ரிதண்டி ஸந்நியாஸியாய் தர்மபுத்திரரிடம் வந்து, "ஹே! யுதிஷ்டிரா! பிராம்மணர்களெல்லோரும் உன்னை திட்டுகின்றனர்" என்று மகா பாப சீலனான அந்த ராக்ஷஸன் தர்மபுத்திரரை நிந்தித்தான். இந்த வார்த்தையைக்கேட்டு துக்கமடைந்த அந்த தர்மபுத்திரரைப் பார்த்து மிகவும் சங்கடப்பட்ட பிராம்மணர்கள் இந்த ராக்ஷஸனுக்கு இவ்வாறு சாபம் கொடுத்தார்கள். ஹேபாபியே! எங்களால் எப்பொழுதும் நிந்திக்கப்படாமலிருக்கும் தர்மபுத்திரரைப்பார்த்து நாங்கள் தூஷித்ததாய் சொன்னதால் நீ சீக்கிரம் சாம்பலாய் போவாய் என்றிவ்வாறு பிராம்மணர்கள் சொல்லவும், மகா பாபியான அந்த ராக்ஷஸன் அக்ஷணமே சாம்பலாய்ப் போனான். சன்யாஸி வேஷம் தரித்த அந்த ராக்ஷஸன் சாம்பலாய்ப்போகவும், துக்கமடைந்த தர்மபுத்திரரைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். ஹே தர்மபுத்திரா! இவன் ஸன்யாஸி அன்று. க்ரூரமான காரியமுள்ளவனும் மகா பாபியும் அதம ராக்ஷஸனுமான இந்த சார்வாகனென்பவன் துரியோதனனுக்கு சிநேகிதனானதலால் இப்பொழுது பிராம்மணர்களால் கொல்லப்பட்டான். ஆகவே ஸன்யாஸி இறந்து போனான் என்று விசனப்படாதே. இவ்வாறு பிராம்மணர்களால் துஷ்ட ஸம்ஹார ரூபமான காரியத்தைச்செய்தவனாய் இருக்கிறாய் என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னதைக் கேட்டு தர்மபுத்திரர் மனம் சமாதானமடைந்து பக்தியுடன் பொருள்களைக்கொடுத்து அவர்களைத் திருப்தியடையச்செய்தார்.

### அரசாக்ஷி.

தன் நகரிலுள்ள பிருத்யர்கள் முதலானவர்களையும் பந்து ஜனங்களையும் சமாதானம் செய்தார். அவர்களுக்கு அவர்களின் இஷ்டப்படி பணத்தைக் கொடுத்தார். அவர்களை முன்போல் சௌகரியமாகத் தான் ரக்ஷித்து வந்தார்.

### தர்ம சந்தேகம்.

பீஷ்மாசாரியார் துரோணாசாரியார் கர்ணன் துரியோதனன் இவர்களைக் கொன்றதால் தனக்கு பாபம் சம்பவித்திருப்பதாய் சந்தேகங்கொண்டு பச்சாதாபமுடையவராய் ராஜ்யம் விட்டு விலக

மனம் கொண்டார். அவருடைய தம்பிகளும் திரௌபதி தேவியும் நாரதர் முதலான பிராம்மணர்களும் தர்மத்தைப் போதித்தனர். பீமசேனனைப் பார்த்து நீ எனக்கு தர்மத்தை எடுத்துச் சொல்லாதே என்று பிரார்த்தித்துக் கேட்டு, அர்ஜுனனைப்பார்த்து உனக்கு தர்ம சூக்ஷ்மம் தெரியாது என்று சொன்னார். அர்ஜுனன் கோபித்துக்கொள்ளவும் பிராம்மணர்கள் உண்மையிட இந்திராவதாரமான அர்ஜுனன் தர்ம தத்துவத்தை அறிந்தவன் என்று சொன்னார்கள். இந்த வார்த்தையைக் கேட்டும் தர்மபுத்திரர் தன்னிடம் சிநேகத்தால் இவர்கள் எல்லோரும் இந்த சத்ரு வதத்தை தர்மமென்று சொல்லுகிறார்களென்ற அபிப்பிராயங் கொண்டு இவர்கள் சொன்ன தர்மத்தில் சந்தேகப்பட்டார். இவ்வாறு சந்தேகப்படும் தர்மபுத்திரரிடம் பிராம்மண கிருஷ்ணரான ஸ்ரீவேதவ்யாஸரும் யாதவகிருஷ்ணரான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் துரோணாதிகள் வதம் தர்மந்தானென்று சாஸ்திரோக்தமான யுக்தியைக்கொண்டு அடுத்தடுத்து சொன்னார்கள்.

## பீஷ்மரை பிரசினம் செய்தது.

அவ்வாறு சொல்லியும் சம்பூர்ணமாய் நிச்சய புத்தி இல்லாத தர்மபுத்திரரை நாசமற்றவர்களாயும் க்ஷராக்ஷர புருஷோத்தமர்களாயுமுள்ள ஸ்ரீ வேதவியாஸரும் கிருஷ்ணரும் "யுதிஷ்டிரா! நீ கொன்ற உன் சத்ரு கக்ஷியில் சேர்ந்தவராதலால் உன் சந்தேகத்திற்கு இடமில்லாதவரான பீஷ்மாசாரியார் எங்கு இருக்கிறாரோ அந்தவிடத்திற்கு தர்மத்தைக்கேட்க அவரிடம் செல்." என்று சொன்னார்கள். அப்படியே தர்மபுத்திரரும் ஸ்ரீ வேதவ்யாஸர் ஸ்ரீ கிருஷ்ணர் இவர்களுடனும் தம்பிமார்களுடனும் நாரதாதி ரிஷிகளுடனும் சேர்ந்து பீஷ்மாசாரியாரிடம் சென்றார். தர்மபுத்திரர் பீஷ்மாசாரியாரை கேட்க வெட்கப்படவும் ஸ்ரீ கிருஷ்ணர் பீஷ்மாசாரியாரிடம் தர்மராஜன் வந்த விஷயத்தைச்சொன்னார். பீஷ்மாசாரியார் தர்மபுத்திரரை பிரசினம் செய்யும்படி கேட்கவும் தர்மபுத்திரர் வெட்கம் விட்டு எல்லா தர்மங்களையும் பிரசினம் செய்தார். அவ்வாறு பிரசினம் செய்யவும் பீஷ்மாசாரியாரின் சரீரத்திலிருந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணர் எல்லா தர்மங்களையும் எடுத்துச்சொன்னார். பீஷ்மர் ஸ்ரீ கிருஷ்ணனை இவ்வாறு கேட்டார்.



ஹே கிருஷ்ண! நீயே பாண்டவர்களுக்கு ஞானோபதேசம் செய்யலாகாதா. பிரபுவும் தேவோத்தமனுமான ஹே கிருஷ்ண! பாண்டவர்களுக்கு போதிக்க எனக்கு சக்தியேது? என்றிவ்வாறு சொல்லப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். ஹே பீஷ்மா! உமக்கு கீர்த்தியை உண்டாக்குவதற்காக உம்மிடம் நான் இருந்துகொண்டு எல்லா தர்மங்களையும் சூக்ஷ்மமான பரதத்வத்தையும் பாண்டவர்களுக்கு உபதேசம் செய்கிறேன் என்றார்.

## ராஜ தர்மம்.

அரசர்கள் முதலில் செய்யவேண்டிய தர்மம் வைஷ்ணவ தர்மத்தை சம்ரக்ஷிப்பது. வைஷ்ணவ தர்மத்தை பிரவிருத்திக்க துஷ்ட சம்ஹாரம் செய்வது முக்கியமான தர்மம்.

## பொதுவான தர்மங்கள்,

பகவத் ப்ரீதியை உண்டுபண்ணும் கர்மங்கள் ராஜ கர்மங்கள் ஆகின்றன. மனம் வாக் சரீர காரியங்கள் இவைகளால் விஷ்ணுவை எப்போதும் பூஜித்தல், விஷ்ணு பூர்ணமாயுள்ள ஸமஸ்த குணமுள்ளவன் என்றும் ஸ்வதந்திரர் என்றும் தம்மிடம் பேதமில்லாதவர் என்றும் அவரிடமிருந்து வேறானதான எல்லா பிரபஞ்சமும் எல்லா காலத்திலேயும் ஈசுவரனுக்கு அதீனமானது என்றும் நிச்சயம் கொள்ளுதல், தேவர்களில் ஏற்ற தாழ்வு இருப்பதாய் அறிந்து கொள்ளுதல், விஷ்ணுவைத் தவிர்த்துள்ளவர்களை அவர்கள் ஸர்வோத்தமர்கள் என்ற அபிப்பிராயங்கொண்டு பூஜிக்காமல் இருத்தல். தேவர்கள் ரிஷிகள் முதலானவர்கள் எல்லோரையும் விஷ்ணுவின் பரிவாரங்களாக பூஜை செய்தல், நிஷ்பிரயோஜனமாய் ஜலம் தட்டுதல் முதலிய காரியங்களைச் செய்யாமலிருத்தல், எப்பொழுதும் எந்த கர்மாவிலும் பலனில் ஆசையில்லாமலிருத்தல், விஷ்ணுவுக்கும் விஷ்ணு பக்தர்களுக்கும் எப்பொழுதும் விரோதம் செய்யாமலிருத்தல், சிஷ்டர்களுக்கும் அசிஷ்டர்களுக்கும் விரோதம் ஏற்பட்டால் உத்தமர்களான சிஷ்டர்களுக்கு அனுகூலமாய் இருத்தல், விஷ்ணுவுக்கும் அவருடைய பக்தர்களுக்கும் பிரியமாய் இருந்தால் அதர்மத்தையாகிலும் செய்தல், அவர்களுக்கு அப்பிரியமாய் இருந்தால் தர்மத்தையாகிலும் செய்யாமல், இருத்தல், இருதரத்தார்களும் மேன்மையில் சமானர்க

ளாய் இருந்து அவர்களில் பரஸ்பரம் விரோதம் ஏற்பட்டால் வைஷ்ணவர்களில் அதிகமான ஜனத்தொகை இருக்கும் கக்ஷியை அனுசரித்தல், இவைகள் க்ஷத்திரியர்கள் முதலானவர்களுக்கேற்பட்ட ஸாதாரணமான பாகவத தர்மம் என்றறிந்துகொள்ள வேண்டும்.

## பிராம்மண தர்மம்

தத்வோபதேசம் செய்தல் பிராம்மணனுக்கு முக்யமான தர்மம். தன் பிள்ளை, தன் சம்சாரம், தன் சிஷ்யன் முதலானவர்களைத்தவிர இதர ஜனங்களை அடித்தல் முதலான சரீர தண்டனைகளை விளைவிக்ககூடாது. புத்ராதிகளுக்கு பிராம்மணன் தேக தண்டனை செய்தாலும், அவர்களின் அவயவம் பங்கமாகாமலும் அதிக காலம் வலி இருக்காமலும் விளைவிக்கவேண்டும். க்ஷத்திரியர்களைத் தவிர பிராம்மணர்கள் வைசியர்கள் சூத்திரர்கள் வர்ணபாஹ்யர்கள் யாரும் எப்பொழுதுமே திரவிய தண்டம் விதிக்கலாகாது. தேக தண்டம் விதிக்கும் விஷயத்தில் வைசியர்களுக்கு பிராம்மணர்கள் போலத்தான் நியமமுண்டு. பிராம்மணன் எத்தனப்படாமல் கிடைக்கும் பொருளைக்கொண்டோ அல்லது பிச்சைஎடுத்தோ சிஷ்யர்கள் கொடுத்த பொருளைக்கொண்டோ யக்ஞத்தை நடத்தி அதனால் வந்த பொருளைக்கொண்டோ சாதாரண காலத்தில் ஜீவனம் செய்யவேண்டும். ஆபத்து ஏற்பட்ட சமயத்தில் க்ஷத்திரியனுடைய தர்மத்தை கைக்கொண்டு பிராம்மணன் பிழைக்கலாம். அதனாலும் பிழைக்க முடியாமல் பெரும் விபத்து ஏற்பட்டால் பிராம்மணன் வைசியனுடைய தர்மத்தைக் கொண்டுபிழைக்கலாம்.

## க்ஷத்திரிய தர்மம்.

க்ஷத்திரியன் தேவ பிராம்மணர்களைத் தவிர்த்துள்ள மற்ற வைசியாதி எல்லோர்களின் பொருள்களைக்கொண்டு இவர்களைச் சம்ரக்ஷித்துக்கொண்டு ஜீவனம் செய்யலாம். க்ஷத்திரியன் நல்ல தர்மங்களுக்கு விரோதியாகவுள்ள வேறு க்ஷத்திரியனிடமிருந்து பலாத்காரமாய் பணத்தை அபகரிக்கலாம். ஸாம தானம் பேதம் இந்தக்கிரமப்படி தர்மத்தை நடத்தவேண்டும். இவைகளால் நடத்த முடியாவிட்டால் தண்டத்தைக்கொண்டு தர்மத்தை நடத்த வேண்டும். அயோக்யர்களுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பங்களில்



தவிர யுத்தத்தில் மற்ற சந்தர்ப்பங்களில் க்ஷத்திரியன் எப்பொழுதும் ஓடலாகாது.

## வைசிய தர்மம்

உழுதல், வர்த்தகமும் வியாபாரமும் பசுவை ரக்ஷிப்பதும் வட்டிக்கு லேவாலேவி செய்வதும். இவைகள் வைசியனுக்கு ஜீவனோபாயம்.

## சூத்ர தர்மம்.

மேற்கண்ட பிரம்ம க்ஷத்திரிய வைசிய மூன்று வர்ணத்தார்களுக்கு ஸேவை செய்வது சூத்திரனின் ஜீவனோபாயம்.

## இதர ஜாதி தர்மம்.

இந்த நான்கு வர்ணத்தார்களுக்கும் பாஹ்யர்கள். அவர்களின் வம்சத்து வயோதிகர்கள் செய்து வந்ததுபோல் நிந்திக்கத் தகுந்ததாய் இல்லாதிருக்கும் தொழில் செய்து ஜீவனம் செய்ய வேண்டும்.

## பூஜார்கர்கள்.

விஷ்ணு பக்தர்களாயுள்ள பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் வர்ணகிரமப்படி பூஜிக்க அருகமானவர்கள். வர்ணங்களில் மேலானவர்களான பிராம்மணாதிகள் விஷ்ணு பக்தியில் குறைந்தவர்களாய் இருந்தால் விஷ்ணு பக்தியில் அதிகமுள்ள சூத்திரர்களைவிட அதிகமான பூஜைக்கு அருகர்கள் அன்று. விஷ்ணு பக்தர்களான சூத்ராதிகளுக்கு மேலான வர்ணத்தார்கள் சரீரம் வணங்கி நமஸ்கரித்தல் கூடாதே ஒழிய இதர மரியாதைகளைச் செய்யத்தான் வேண்டும். யாரிடம் விஷ்ணு பக்தி அதிகமிருக்கிறதோ அவனிடம் ப்ரீதி செய்யத்தான் வேண்டும்.

(தொடரும்)

# ஆசாரமாலை.

## ஸந்தியார்த்த விமரிசம்.

(முன் 340-ம் பக்கம் தொடர்ச்சி.

[illegible] மூர்த்திய இரவில் ஸாயம் ஸந்தியாவந்தனம் செய்து பாபங்களை நிவிருத்தி செய்துகொண்டபின் ஸமஸ்த பாபங்களையும் ராத்ரியின் அபிமானி தேவதையும் சரியே, ராத்ரி ஸமயமும் பகவானும் சரியே, ராத்

ரியாகிய தூர்க்காதேவியும் சரியே, நிவிருத்திசெய்யட்டும். பாபங்களையும் குறிப்பிடுகிறேன். மனதில் பரஸ்திரீ ஸங்கம் தெய்வத்ரோகம் குருத்ரோகம் ஸ்வாமித்ரோகம் பரஸ்வாபஹாரம் முதலியவைகளை எண்ணி பெரும் பாபங்களை சம்பாதித்திருக்கிறேன். சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்டதாயுள்ள யோனி சின்னம் முதலிய கெட்டவார்த்தைகள் கலந்ததாயும் அஸத்யமானதும் மனதிற்கு தக்கா திகளை விளைவிப்பதாயுமுள்ள வார்த்தைகளைப் பேசியும், கோவிந்தா கிருஷ்ணா ஹரே முகுந்தா வென்னும் பகவன் நாமங்களை பேசாமலும் வாக்கால் பெரும் பாபங்களை சம்பாதித்திருக்கிறேன். பிராணிகளை ஹிம்சித்தல், பிறர்சொத்தை களவாடுதல், இண்டாசார்களைத்தொடுதல், பரஸ்திரீகளையும் தொடத்தகாத அமேத்யங்களையும் தொடுதல், முதலிய சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்டதான காரியங்களை கைகளால்செய்தும், பகவானை துளஸிபுஷ்பாதிகளால் அர்ச்சித்தல், பகவானுடையவும் பகவத்பக்தர்களுடையவும் மாதாபிதாக்கள் முதலான பூஜ்யர்களுடையவும் கைங்கரியம் செய்தல், முதலிய நற்காரியங்களைச் செய்யாமலும், கைகளால் பல பாபங்களை சம்பாதித்திருக்கிறேன். சுடுகாடு பறச்சேரி பாபிஷ்டர்களின் வசதிகள் முதலிய போகத்தகாத ஸ்தானங்களுக்குபோதல், காரியமில்லாமல் ஊர்சுற்றல் நடக்கும்பொழுது பூமியிலுள்ள புழு பூச்சிகளைக் கொல்லுதல், முதலான நிஷித்த காரியங்களைச்செய்தும், பகவானுடைய ஆலயங்களுக்கும் புண்ய க்ஷேத்திரம் தீர்த்தங்களுக்கும் செல்லாமலும், கால்களால் மகாபாபங்களை சம்பாதித்திருக்கிறேன். வெங்காயம் முள்ளங்கி முருங்கக்காய் பூண்டு முதலிய சாஸ்திர நிஷித்தமான பதார்த்தங்களையும், ப்ரத்யக்ஷமாய் அமேத்யாதிகளை எருப்போட்டு அதிலுண்டான காய்கறிகளையும், எலும்பு கொழுப்பு கிருமி கேசம் முதலியவைகள் கலந்த சாமான்களையும், பகவானுக்கு நைவேத்யம் வைச்வதேவம் முதலியவைகளை செய்யாததாயுமுள்ள அன்னாதிகளையும் சாப்பிட்டும், நைவேத்யம் வைச்வதேவம் முதலானவைகள் உள்ள அன்னாதிகளை சாப்பிடாமலும், வயிற்றால் பலபாபங்களை சம்பாதித்திருக்கிறேன். பரஸ்திரீயுடன் புணர்தலாலும், தன் சொந்த ஸ்திரீயுடன் ருதுஸ்நானத்தின்பின் புணராதலாலும் சிச்னத்தால் பலபாபங்களையும் செய்திருக்கிறேன். இவ்விதமாய் மேற்கண்ட இந்திரியங்களாலும் மற்ற இந்திரியங்களாலும் செய்த ஸமஸ்த பாபங்களையும் பாக்கியில்லாமல் பூராவாய் ராத்ரி என்னும் வார்த்தையால் குறிப்பிடப்படும் பகவத்ரூபமும் தூர்க்காதேவியும் ராத்ரியின் அபிமானி தேவதையும் நாசமாக்க நான் பிரார்த்திக்கிறேன். இந்த பாபங்களை மட்டிலல்ல. பத்திரிந்துரீநம்மயி நான் நினைவு இல்லாமல் இந்த ஜன்மத்தில் செய்த



பாபங்களையும் சரியே வேறு ஜன்மங்களிலும் சரியே செய்த பாபங்களையும் அவைகளில். நிவிருத்தியடையாமல் பாக்கியுள்ள பாபங்களையும் ராத்ரி எனப்படும் தேவதைகள் நாசம் செய்யும்படி பிரார்த்திக்கிறேன். அவர்கள் என் பாபங்களை இப்போது நிவிருத்தி செய்வதால் நான் பரிசுத்தியடைகிறேன். இவ்வாறு என் பாபங்கள் தொலைந்து பரிசுத்தியடைந்து சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டதான நித்ய நைமித்ய கர்மானுஷ்டானமாகிய நாராயணரின் ஆராதனையைச் செய்யத்தயாராகவிருக்கும் நான் என்ன கையில் வைத்துக் கொண்டு இவ்வாறு சபதம் செய்த வேத மந்திரத்தால் ஜபிக்கப்பட்ட இப்புனிதமான ஜலத்தை அமிர்தயேனௌ ஸூர்யே ஜ்யோதிஷி என் மனோபீஷ்டம் பூர்த்தியாகக்கருதி மோக்ஷத்திற்கே காரணமானவரும் அதனால் என் அபீஷ்டங்களுக்கெல்லாம் காரணமானவரும் க்ஞானிகளால் அடையத்தகுந்தவரும் பிரகாச ரூபியானவருமான நாராயணரிடத்தில் ஜுஹோமி ஸமர்ப்பணம் செய்கிறேன். பரிசுத்தமான இந்த ஜலத்தை மட்டிலன்று. ஸமஸ்த தேவர்களும் கருணைகூர்ந்து ஸமஸ்த பாபங்களையும் நிவிருத்திசெய்து பரிசுத்தனாய்ச்செய்த மாம் என்னையே நான் நாராயணரிடம் ஸமர்ப்பித்துக்கொள்கிறேன். அவர்தான் எனக்கு சரணம். நானே அவர் அதீனமாய் இருக்கிறேன். எனக்கு வேறு கதியில்லை. இந்த என் ஆத்ம ஸமர்ப்பணம் ஸ்வாஹா சரியானபடி செய்யப்பட்டதாய் ஏற்பட்டு என்னை அனுக்ரஹிப்பதாய் ஆகவேண்டும். என்றிவ்வாறு மந்திரத்தால் வெகு அழகாய் பிரார்த்திக்கப்படுவதை வாசகர்கள் நன்கு மனதில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு பலவகையான கம்பீர அபிப்ராயங்கொண்ட மந்திரத்தால் மந்திரிக்கப்பட்ட ஜலத்தை ப்ராசனம் செய்வதால் சரீரத்தின் அந்தச்சுத்தி நிச்சயமாய் ஏற்படுமென்பதில் யாவருக்கும்சிறிதும் சந்தேகமிருக்க மாட்டாது.

(தொடரும்)

# சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம்.

நாம் ஆத்யாத்மிகம் ஆதி தெய்விகம் ஆதி பௌதிகம் என்னும் மூவகை தாபங்களாலும் வருந்திக்கொண்டு ஸம்ஸார துக்கத்தில் மூழ்கி ஹிம்சிக்கப்பட்டிருக்கும் இதற்கு பெரும் ஆறுதலாக ஸ்ரீஹரி குருகிருபாபலத்தாலும் உத்தம புருஷர்களான நமது சந்தாதாரர்களின் ஆசிரய பலத்தாலும் இம்மாத்வமித்திரனின் ஒன்பதாவது வாலியத்தை இந்த சஞ்சிகையுடன் முடித்துக்கொண்டதை அறிவிக்க மிகவும்சந்தோஷப்படுகிறோம். இதற்கடுத்த பௌர்ணமியில் 21-[illegible] வெளியாகும் சஞ்சிகை 10வது வாலியத்தின் 1வது சஞ்சிகையாகும். இந்த வாலியத்தின் துவக்கத்தில் நம்மவர்களில் [illegible]ரவம்வாய்ந்த பல ஆஸ்திகசிகாமணிகள் ஏற்புறுத்தியபடி எமது அபீஷ்டத்தை பூர்த்தி செய்துகொள்ளும்

ஸ்ரீபகவத்பாதாளின் மதசேவையையும் சமூக சேவையும் செய் வரவும் மாத்வர்களின் ஒரே பத்திரிகையான இம்மாத்வமித்திரனோட வழக்கப்படி எமது சந்தாதாரநேயர்கள் துணைபுரிய பிரார்த்திக்கிறோம். வி.பி.பி. யில் அனுப்புவதால் சந்தாதாரர்களுக்கும் எமக்கும் அதிக ஈ உண்டாவதோடு பொருள் நஷ்டமும் கஷ்டமும் உண்டாவதால் மிடம் பிரேமை கொண்டிருக்கும் எல்லா சந்தாதாரர்களும் அன்புட தங்கள் சந்தா தொகை ரூபா மூன்றை உடனே முன்பணமாகமணியார் செய்தனுப்பகோறுகிறோம். இப்பால் நமது பத்திரிகை பௌர்ண யன்றே வெளிவருவதால் அவ்வாறு மணியார்டர்மூலம் சந்தாவை அனு பாத சந்தாதாரர்களுக்கு அடுத்த சஞ்சிகை அன்றே வி. பி. பி. ஆ அனுப்பப்படும். ஏற்கனவே இப்பத்திரிகையை நடத்த போதும திரவிய பலமில்லாமல் கேவலம் ஸாஹஸத்தை மட்டில் மேற்கொ எமக்கு, வி. பி. பியைதிருப்பி அனுப்பி பொருள் நஷ்டத்தை உண்ட காமல் அவைகளைப்பெற்று ஆதரிக்க கோருகிறோம்.

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோண

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 24—7—37 | சனிவாரம் | சிரவணம் உப. விஷ்ணு. ப. உப. |
| 28—7—37 | புதவாரம் | டீகாசாரியாள் என்கிற ஸ்ரீஜயதீர்த்தரி (640-வது வருஷத்திய) புண்ய தின |
| 2—8—37 | சோமவாரம் | தசமி ஹரிவாஸரம் இரவு மணி 8-க்கு மேல் போஜனம் கூடாது |
| 3—8—37 | மங்களவாரம் | ஏகாதசி உப. [உப |
| 6—8—37 | சுக்ரவாரம் | அமாவாசை. இல்தர்ப்பணம் விஷ்ணுப. |
| 10—8—37 | மங்களவாரம் | சங்கடசதுர்த்தி மங்கள கௌரீ விரதம் |
| 11—8—37 | புதவாரம் | நாகபஞ்சமி. கருட பஞ்சமி. [ஆரம்பம் |
| 17—8—37 | மங்களவாரம் | ஏகாதசி உப. |
| 18—8—37 | புதவாரம் | த்வாதசி ஹரிவாஸம் காலை 8-35க்குமேல் பாரணை. தயிர் விருதம் ஆரம்பம். |
| 20—8—37 | சுக்ரவாரம் | வரலக்ஷ்மீ விருதம். |
| 21—8—37 | சனிவாரம் | பௌர்ணமி, ரிக்வேதம், யஜுர்வேதம் உபாகர்மம். சிரவண உப. இல்லை விஷ்ணுப. உப. இல்லை. |
| 22—8—37 | பானுவாரம் | ஸஹஸ்ராவிருத்தி காயத்ரி ஜபம். |

23—8—37 சோமவாரம் ஸ்ரீராகவேந்திரரின் (267-வது வருஷத்திய) புண்ய தினம்.
எல்லோரும் கொண்டாடி நற்பயன்பெறுவீர்களாக.

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே ...வ்வளவு இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந் ... செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங் ...விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித் ...க்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமி ...ம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி ...யும் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மே ...டபலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்ச ...ரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவ ...நாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப் ...பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் ...ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா ...8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் ...லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 ...பாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் ...தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் ...ன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்ப ...ம் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை ...அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மா...யம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்: அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதி ...ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய் ...புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலி ...யைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப் ...படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.